Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஆடி 02 வெள்ளிக்கிழமை (18.07.2014) பக்கங்கள் 20 ஓசை – 290

## வீழ்ந்தது மலேசிய விமானம் பயணிகள் 295 பேர் மரணம்

### சுட்டு வீழ்த்தப்பட்டதா என்று சந்தேகம்



மலேசிய விமானம் உக்ரெய்னில் விழுந்து நொருங்கியதாக செய்திகள் தெரிவிக்கின்றன. அந்த விமானத்தில் 295 பயணிகள் இருந்தனர். இந்த விமானம் நெதர்லாந்தின் நகரான ஆம்ஸ்டர்டாமிலிருந்து கோலாலம்பூருக்கு வந்துகொண்டிருந்த வழியில் இந்த விபத்து நடந்திருக்கிறது.

தனது விமானம் (எம்.எச்-17) உடனான தனது தகவல் தொடர்பு அனைத்தும் துண்டிக்கப்பட்டுவிட்டதாக மலேசியன் ஏர்லைன்ஸ் நிறுவனம் நேற்று மாலை தெரிவித்தது. கடைசியாக அந்த விமானத்துடனான தொடர்பு உக்ரெய்ன் வான் (19) பக்கம் பார்க்க...

## இந்திய மீனவர்கள் நேற்று விடுதலை

யாழ்., நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 4 இந்திய மீனவர்களையும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் உத்தரவிற்கமைய ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதவான் செல்வநாயகம் லெனின்குமார் நேற்று விடுவித்தார்.

இவர்களை யாழ். கடற்றொழில் நீரியல் வளத்துறையினரிடமிருந்து பொறுப்பேற்றுக்கொண்ட இந்தியத் துணைத் தூதரகத்தினர் இலங்கை கடற்படையினர் ஊடாக இந்தியாவிற்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு (19) பக்கம் பார்க்க...

# காணாமற் போனோர் விவகாரம் சர்வதேச நிபுணர்குழு நியமனம்

(கொழும்பு)

**கடந்து சென்ற யுத்த காலத்தில் வடக்கிலும், கிழக்கிலும் காணாமற்போனவர்கள் தொடர்பான விவகாரங்களை சர்வதேச நெறிமுறைகளுக்கு அமைவாகக் கையாளுவதற்கு விசேட நிபுணர்கள் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.**

இந்த நிபுணர்குழுவை ஜனாதிபதி நியமித்திருக்கிறார். ஏற்கனவே ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட காணாமற்போனவர்களைக் கண்டறிவதற்கான ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு மேலதிகமாக இந்த நிபுணர்குழு செயற்படவுள்ளது.

இந்த நிபுணர்குழு ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு நிபுணத்துவ ஆலோசனைகளை வழங்கவுள்ளது.

இது தொடர்பான விபரம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. அதில், காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கு ஆலோசனை சபை ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. அந்தச் சபையில் சர்வதேச போர்க் குற்றங்கள் தொடர்பில் வழக்கு தொடுநர்களாகவும், நீதிபதிகளாகவும் இருந்த மூன்றுபேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆலோசனைச் சபையின் தலைவராக ராணி சட்டத்தரணி டெஸ்மன் டீ சில்வாவும், ராணி சட்டத்தரணி ஜெ.ப்றி நைஸ், பேராசிரியர் டேவிட் கிரேன் ஆகிய இருவரும் உறுப்பினர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் மூவரும் காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு ஆலோசகர்களாகச் செயற்படுவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.



அத்துடன் தேவை ஏற்படின் ஆணைக்குழுவுக்கு மேலும் நிபுணர்களை நியமித்து ஆலோசனை வழங்க நடவடிக்கை (19) பக்கம் பார்க்க...

## வடகடல் நிறுவனத்தில் உற்பத்தி மேம்பாடு



### களநிலையில் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

வடகடல் நிறுவனத்திற்குச் சொந்தமான லுணுவில மீன் வலை தொழிற்சாலைக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விஜயம் மேற்கொண்டு தொழிற் துறை நடவடிக்கைகள் தொடர்பில் நேரில் ஆராய்ந்தறிந்து கொண்டார்.

மாரவில, லுணுவில மீன் வலை தொழிற்சாலைக்கு அமைச்சர் நேற்று விஜயம் மேற்கொண்டிருந்தார். இதன்போது தொழிற்சாலையின் பல்வேறு (19) பக்கம் பார்க்க...

## காரைநகர் பாலியல் துஷ்பிரயோகம்; பாதிக்கப்பட்டவருக்கு நீதி வேண்டும்

### கடற்படைத் தளபதியிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

காரைநகரில் பாடசாலை மாணவி மீது மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பாக நியாயம் கிடைப்பதற்கான சட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்விடயம் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடற்படைத் தளபதியுடன் ஏற்கனவே தொடர்புகொண்டுள்ளார். குற்றம் புரிந்த நபர் யாராக இருந்தாலும் அவர் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப் (19) பக்கம் பார்க்க...

## கிளிநொச்சியில் சுழல் காற்று; வீடுகள் பல சேதம்

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது வீசி வரும் காற்றினால் தற்காலிக வீடுகளில் வசிப்போரின் 20 இற்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவினர் நேற்று தெரிவித்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் விவேகானந்தநகர், சிவபுரம், பன்னங் கண்டி, உமையாள்புரம் ஆகிய கிராமங்களிலுள்ள தற்காலிக வீடுகளே இவ்வாறு சேதமடைந்துள்ளன.

சேதமடைந்த வீடுகள் தொடர்பிலான கணக்கெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், விரைவில் அவர்களுக்குரிய நிவாரணங்கள் வழங்குவதற்கான (19) பக்கம் பார்க்க...

## ஊவா தேர்தல் செப்ரெம்பரில்

ஊவா மாகாண சபை தேர்தலுக்கான வாக்களிப்பு செப்ரெம்பர் மாத நடுப்பகுதியில் இடம் பெறும் என தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இராஜகிரிய் தேர்தல்கள் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற (19) பக்கம் பார்க்க...

உள்ளே
தரம் -5 மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்

## மாகாண அரசே இராஜினாமா செய் யாழ்ப்பாணத்தில் சுவரொட்டி

(திருநெல்வேலி)

கொக்குவில்-ஆடியபாதம் வீதியில் சில சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. சிவப்பு நிறத்தில் அச்சடிக்கப்பட்ட இச் சுவரொட்டியில் எங்கள் இனத்தைக் கொன்று குவித்த மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவை ஜனாதிபதியாக வருவதற்கு ஆதரித்த கூட்டமைப்புக்கு ஓய்வு நிலை இராணுவ அதிகாரியை மீளவும் ஆளுநராக்கியதை எதிர்க்க என்ன அருகதை இருக்கிறது.

மாகாண சபை அரசே! எம்மவர்களுக்கு நல்லது செய்ய முடியாவிட்டால் மற்றவர்களைக் குறை காண்பது ஏன்? குறை காண்பதை நிறுத்து. முடியாவிட்டால் இராஜினாமா செய். என அச்சுவரொட்டியில் அச்சடிக்கப்பட்டுள்ளது.

சுவரொட்டியின் அடிப்பாகத்திலோ அல்லது தலைப்பிலோ இது யாரால் ஒட்டப்பட்டது என்பதற்கான பெயர் எதுவும் காணப்படவில்லை. (137)

# உலகில் எதிர்ப்பு அரசியல் மூலம் தீர்வு காணப்பட்டதாக வரலாறு இல்லை

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் குகேந்திரன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

உலக வரலாற்றில் எதிர்ப்பு அரசியல் மூலம் தீர்வு காணப்பட்டதாக வரலாறு கிடையாது. இணக்க அரசியல் மூலமே அதிக தீர்வுகள் காணப்பட்டுள்ளதாக பதிவுகள் குறிப்பிடுகின்றன. தமிழ் மக்களது இருப்பு கேள்விக்குறியாக இருப்பதும் சிறப்பானதாக மாறுவதும் மக்களாகிய உங்களது கையில்தான் உள்ளது என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.வி.குகேந்திரன் (ஜெகன்) தெரிவித்துள்ளார்.

வாழ்வாதாரம் குறைந்த மக்களது வாழ்வாதாரங்களை மேம்படுத்துவது தொடர்பாக கைதடி கிழக்கு ஜே/292 பகுதி மக்களால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த மக்கள் சந்திப்பின்போது அப்பகுதி மக்களது வாழ்வியல் தேவைகள் பற்றி அறிந்துகொண்டபின் உரையாற்றிய ஒருங்கிணைப்பாளர் மேலும் கூறுகையில்,

மக்களுக்கான அபிவிருத்தி சார்ந்த அரசியலை மையப்படுத்தியே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நீண்டகாலமாக அரசியல் நகர்வுகளை மேற்கொண்டு வருகின்றார். ஆனால் அவருக்கு அரசியல் ரீதியில் பலம் போதாமையால் தமிழ் மக்களது நிரந்தர அரசியல் தீர்வுகள் பற்றி மத்திய அரசுடன் கதைப்பதற்கு முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கின்றார். இதை மாற்றியமைக்க நீங்கள் முன்வருவீர்களாயின் தமிழ் மக்களது ஒட்டுமொத்த அரசியல் அபிலாசைகளையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பெற்றுத்தருவார்.

மிகப்பெரும் கல்விமான்களைக் கொண்ட தமிழ்த் தலைவர்கள் தலைவர்களாக இருந்தும் தமிழர் பிரச்சினைகளுக்கான தவறான அரசியல் தீர்வுகளை முன்வைத்ததனால்தான் ஈழத்தமிழர்கள் ஒட்டு மொத்தமாக நிர்க்கதியாக்கப்பட்டுள்ளனர்.

உலக நாடுகள் அனைத்தும் தமது சுயநலனுக்காகவே ஒவ்வொரு நாட்டுக்குள்ளும் தமது மூக்கை நுழைத்துக் கொள்கின்றனர். அவர்கள் தமிழர்களுக்காக சுயநிர்ணயத்தையும் சுதந்திரத்தையும் பெற்றுத்தர ஒருபோதும் முன்வரமாட்டார்கள் என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இணக்க அரசியல் மூலம் பெற்றுத்தரும் அனைத்து அபிவிருத்திகளையும் நீங்கள் பெற்றுக் கொள்ளும்போது 35 வருட கால அரசியலும் ஆயுதமும் கலந்த போராட்டத்தால் நாங்கள் அழிவடைந்த இனமாகிவிட்டோம்.

இனிவரும் காலத்தில் இதை மாற்றியமைக்க உங்களை நீங்கள் மாற்றியமைக்க வேண்டியது கட்டாய தேவையாகிவிட்டது.

தமிழனைத் தமிழன் அழிக்கத் தொடங்கியதன் விளைவுதான் தமிழர் ஒட்டுமொத்த போராட்டமும் தடம்புரண்டு போகக் காரணமாகியது என்பது மறுக்கப்பட முடியாத உண்மை.

தொடர்ந்தும் ஓலைக்குடிசைகளிலும் வறியவர்களாகவும் இருக்க நீங்கள் விரும்பினால் உங்களை தவறாக வழிநடத்துபவர்கள் பின் செல்லுங்கள். அதுவே உங்கள் தலைவிதியாகவும் அமையட்டும்.

தேசியம் பேசுபவர்களது சாக்கடை கலந்த அரசியல் கலாசாரத்தை மாற்றியமையுங்கள். அதன மூலம் தான் நீங்கள் வாழ்க்கையில் வெளிச்சத்திற்கு வரமுடியும் எனவும் தெரிவித்தார்.

இந்த சந்திப்பில் தென்மராட்சி அமைப்பாளர் சாள்ஸ், நகரசபை உறுப்பினர் திருக்குமரன், மெடிஸ்கோ ஆகியோருடன் அப்பகுதி பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## வருடாந்த வேள்வி

(ஆனைக்கோட்டை)

நவாலி காத்தவராயன் ஆலய வருடாந்த வேள்வி நாளை காலை 8.30 மணிமுதல் நடைபெறவுள்ளது.

இங்கு அதிக விலையுள்ள ஆடுகள் வெட்டுவதற்காக வளர்க்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (104)

# மாவட்ட செயலகத்தில் ஆடிப்பிறப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலர்களுக்கான சுயமுகாமைத்துவமும் தலைமைத்துவமும் என்ற தலைப்பில் பயிற்சிநெறி நடைபெற்றது.

இப்பயிற்சியின் நிறைவில் அரசாங்க அதிபர் தலைமையில் மாவட்ட செயலக நலன்புரிக் கழகத்தின் ஏற்பாட்டில் கொழுக்கட்டை மற்றும் ஆடிக்கூழ் வழங்கி ஆடிப்பிறப்பு நிகழ்வு மிகவும் விமர்சையாக கொண்டாடப்பட்டது.

# வருடாந்த ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

இளவாலை ஹென்றியரசர் கல்லூரியின் வருடாந்த ஒன்றுகூடலும் கலாசார நிகழ்வும் இன்றும் நாளையும் நாளைமறுதினமும் கல்லூரி வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு இயக்குநர் அருட்தந்தை ஜெ.ஏ.யேசுதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளதுடன் முதலாம் நாள் நிகழ்வான இன்றைய நிகழ்வில் கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவர் ஏ.ஆர்.ரி.அன்ரன், இரண்டாம் நாள் கலைநிகழ்வில் அருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம், மாலை நிகழ்வில் லண்டன் பழைய மாணவர் சங்க பிரதித் தலைவர் பி.கொன்ரன்ரைன், 3 ஆம் நாள் நிகழ்வில் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திரராஜா ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து முதல்நாள் நிகழ்வில் ஹென்றியரசர் சிலை திறப்பு கிரிக்கெட் போட்டியும், இரண்டாம் நாள் நிகழ்வில் நடை பயணம், கண்காட்சி, கௌரவிப்பு நிகழ்வு, உடற்பயிற்சி என்பன இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து கபடி, உதைபந்தாட்டம், இசை நிகழ்வு என்பனவும் 3 ஆம் நாள் நிகழ்வில் கராத்தே மற்றும் கலாசார நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது.

# தேசிய சுனாமி ஒத்திகை

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பிரதேச செயலக பிரிவில் உள்ள ஜே/45 கிராம உத்தியோகத்தர் பிரிவை மட்டும் உள்ளடக்கி நாளை பி.ப. 3.00 மணிக்கு அனர்த்த முகாமைத்துவ பிரிவினரால் முன்னெச்சரிக்கை விழிப்புணர்வும் ஒத்திகை பயிற்சி செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படும்.

இது தொடர்பில் பொதுமக்கள் அமைதியாக இருக்குமாறும், இது ஒரு ஒத்திகைச் செயற்பாடு என்பதால் எவரும் குழப்பமடையத் தேவையில்லை எனவும் பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## வாகன புகைப்பரிசோதனை

(வரணி)

கொடிகாமம் வரணிப் பிரதேச வாகன உரிமையாளர்களின் நன்மை கருதி தென்மராட்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்க தலைமைக் காரியாலயத்தில் வாகன புகைப்பரிசோதனை நடைபெறுகிறது.

வாகன உரிமையாளர்கள் வரும் திங்கட்கிழமை காலை 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 5.00 மணிவரை புகைப்பரிசோதனையை மேற்கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (150)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

உயர் அழுத்த தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை விஞ்ஞான பீடப் பிரதேசம், வைமன் வீதி, அரசடி வீதி, நாவலர் வீதியில் ஆனைப்பந்திச் சந்தியிலிருந்து கைலாச பிள்ளையார் கோவில் சந்தி வரை, பருத்தித்துறை வீதியில் ஆனைப்பந்திச் சந்தியில் இருந்து நல்லூர் செட்டி வீதி சந்தி வரை,, கோவில் வீதி, இராசாவின்தோட்ட வீதி, றக்கா வீதி, மருதடி வீதி, சோமசுந்தரம் வீதி, கச்சேரியடி, சுண்டுக்குளி, குருசோ வீதி, பாசையூர், பழைய பூங்கா வீதி, கொழும்புத்துறை வீதி, துண்டி, மகேந்திரபுரம், வலன்புரம், நெடுங்குளம், மணியந்தோட்டம், உதயபுரம், பிரதேசத்திலும்,

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை கொத்தியாலடி சுடலையிருந்து சுன்னாகம் சந்தி வரை, மலப்பை, சூராவத்தை, சுன்னாகம் சிவன் கோவிலடி, சங்கானை நகரப் பகுதி, தொட்டிலடி, மாகியப்பிட்டி, விளான், பண்டைத்தரிப்பு, அளவெட்டி மேற்கு, தெற்கு, சண்டிலிப்பாய் இரட்டையப்புல வைரவர் கோவிலடி ஆகிய இடங்களிலும்,

22.07.2014 செவ்வாய்க்கிழமை, 24.07.2014 வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை குடத்தனை, நடுக்குடத்தனை, பொறபதி, குடத்தனை வடக்கு கடற்கரைப் பகுதி, மணற்காடு சந்தி, மணற்காடு வடக்கு, அம்மன் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும்.


# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2546 திகதி 16-07-2014

ஆங்கில எழுத்து: J

வெற்றி எண்கள் 13 28 34 44

போனஸ் இல: 21

ஜக்பொட் பரிசு ரூ.16,706,950/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 234508 | 20/- | 4,690,160/- |
| 2 இல | 16746 | 100/- | 1,674,600/- |
| 3 இல | 348 | 1,000/- | 348,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 9412 | 40/- | 376,480/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 666 | 1,000/- | 666,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 14 | 10,000/- | 140,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | 01 | 16,706,950/- | 16,706,950/- |
| 1 இல + போனஸ் இல | 11235 | 100/- | 1,123,500/- |
| 2 இல + போனஸ் இல | 525 | 500/- | 262,500/- |
| 3 இல + போனஸ் இல | 08 | 100,000/- | 800,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 448 | 200/- | 89,600/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 20 | 1,500/- | 30,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 273932 | | 27,907,790/-- |

பச்சை நிற டிக்கட்டுகள் 2014.07.19 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 10,000,000/-

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02 தொ.பே: 2333546/7

(C/3739)



## சிறு விளம்பரங்கள்

### டயானா பிளாஸ்ரிக்

*றீசைக்கிள் (மீள் சுழற்சி)*

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக். பொலித்தீன். என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088. (C/3395)

### ஆட்டோ விற்பனைக்கு

பேக்கரி தேவைக்கு (நடமாடும் சேவைக்குரிய பொடி வேலையுடன்) பயன்படுத்தக்கூடிய SP AAD XXXX தொடரிடலக்கமுடைய ஆட்டோ விற்பனைக்குண்டு.

தொடர்புக்கு: 0717337287

### வேலையாள் தேவை

பூட்டு வேலை தெரிந்தவர்களும், பழக விரும்புவோரும் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு:- 0775396436 (C/3745)

### வேலையாள் தேவை

வீட்டில் தங்கியிருந்து வேலை செய்வோர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்க்கப்படும். தொடர்புகளுக்கு:- 0775396436 (C/3745)

# கல்வியை இருகண்களாக்கினால் எதிர்காலம் ஒளிமயமாகும்

## வடமாகாண கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் தெரிவிப்பு

(வடமராட்சி)

மாணவர்கள் ஒழுக்கத்தையும் கல்வியையும் இருகண்களாகக் கொள்ள வேண்டும். அதுமட்டுமன்றி ஒழுக்க சீலர்களாகவும், கல்வி மான்களாகவும், விளையாட்டு வீரர்களாகவும் திகழ்வதோடு முதுமொழிகளைப் பின்பற்றி நல்ல நண்பர்களுடன் நட்புக் கொள்வதன் மூலம் நிச்சயம் உங்கள் எதிர்காலம் ஒளிவீசும் என வடக்குமாகாண கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் என்.தெய் வேந்திரராஜா தெரிவித்தார்.

வடக்குமாகாணக் கல்வியமைச்சின் உதவிச் செயலாளராக பதவியுயர்வு பெற்றுச்செல்லும் ஹாட்லிக் கல்லூரி அதிபர் என்.தெய்வேந்திரராஜாவுக்கு ஹாட்லிக்கல்லூரியில் பிரிவுபசார விழா அண்மையில் நடைபெற்றது. இதில் நன்றியுரை ஆற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி புகழ் பூத்தகல்லூரியாகும் இக்கல்லூரியின் புகழ் சர்வதேசமெங்கும் பரவியிருக்கின்றது. இக்கல்லூரி என்றும் தலைநிமிர்ந்து வீறு நடைபோட்டுக் கொண்டேயிருக்கும்.

அதற்கான இறையாசி கல்லூரிக்கு உண்டு இக் கல்லூரியைப் பாதுகாக்க வேண்டியது உங்கள் கடமையாகும். உங்களை விட்டுப்பிரிவது எனது மனதை வெகுவாக நோகடிக்கின்றது.

எனது ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு, பணிவு, ஒத்துழைப்பு மாசற்ற அன்பு என்பனவே என்னை மிகச் சிறப்பாக செயற்பட வைத்தன என்பதை நினைக்கும் போது நான் மிகவும் மகிழ்வடைகிறேன் இதனை என் வாழ்வில் மறக்கமாட்டேன். அதற்கு நன்றியுடையவனாக இருப்பேன் என்றார்.

மேலும் கடந்த எட்டரை வருடங்களாக உங்களுடன் ஒன்றித்திருந்து ஒரே குடும்பமாக நன்மை தீமைகளிலும் மற்றும் பல விடயங்களிலும் கலந்து கொண்டுள்ளேன்.

இதன் போது யாருக்காவது மனத்தாங்கலோ மனக்கசப்போ ஏற்பட்டிருந்தால் அதனை இந்நேரத்தில் மன்னிக்குமாறு கேட்பதுடன் இனி வரும் காலங்களிலும் உங்களுக்கு என்னாலான பங்களிப்பை செய்வேன் எனவும் தெரிவித்தார். (01)



கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தின் முத்தமிழ் விழா அண்மையில் இடம்பெற்ற போது... (48)

# புலமைப்பரிசில் மாணவர்களுக்கு விசேட தொடர் கருத்தரங்கு

(மானிப்பாய்)

வலி.தென்மேற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் வருடம் தோறும் நடாத்தும் இலவச புலமைப்பரிசில் தொடர்கருத்தரங்குகள் இம்முறையும் இடம்பெற்று வருகின்றன.

இவ் இலவசபுலமைப்பரிசில் தொடர்கருத்தரங்கின் 3 ஆவது கருத் தரங்கு நாளைமறுதினம் காலை 8.30 மணிமுதல் 2.30 மணிவரை மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரபல ஆசிரியர் எஸ்.வினோத்குமார் மற்றும் திருமதி பத்மலோஜினி ஆகியோரால் மேற்கொள்ளப்படுகின்ற இக் கருத்தரங்கில் பங்குகொள் கின்றமாணவர்கள் அன்றைய தினம் மண்டபவாயிலில் பதிவுகளை மேற்கொள்ள்முடியும். இக் கருத்தரங்குகள் முற்றிலும் இலவசமாக இடம்பெற உள்ளமை குறிப்பிடத்தக்கது.

முன்னதாக புலமைச்சுடர்ஆசிரியர்களால் நடாத்தப்பட்ட 1 ஆவது கருத்தரங்கிலும் புலமைக்கல்வி நிறுவனத்தால் நடத்தப்பட்ட 2 ஆவது கருத்தரங்கிலும் தலா 700 மாணவர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். (48)

# ஒட்டிசம் பற்றிய அனுபவப்பகிர்வு

(யாழ்ப்பாணம்)

ஒட்டிசம் (Autism) தொடர்பான ஒரு அனுபவப் பகிர்வு நிகழ்வு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் திணைக் களத்தினால் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வானது யாழ்.தாதியர் கல்லூரியில் இன்று காலை 9 மணி தொடக்கம் 11 மணி வரை நடைபெறும்.

இந் நிகழ்வில் ஒட்டிசம் உள்ள குழந்தைகளின் பெற்றோர் அல்லது அக்குழந்தைகளின் குடும்பத்திலுள்ள வளர்ந்த அங்கத்தினர் மற்றும் ஒட்டிசம் நிலைமையோடு பணிபுரியும் ஆசிரியர்கள் அல்லது பராமரிப்பாளர்கள் கலந்து பயன் பெறலாம்.

இந்த விழிப்புணர்வு நிகழ்வில் கலந்து கொள்வதற்காக எதுவித அனுமதிக் கட்டணமும் அறிவிடப்பட மாட்டாது என யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

# சத்தியமாகச் சொல்லுங்கோ, எல்லாத்துக்கும் அவைதான் காரணமோ...?



வடபுலத்தான் எழுதுவது...

அதென்னவோ தெரியாது, யாழ்ப்பாணத்துக்கும் பிரதேசவாதத்துக்கும் அப்பிடியொரு பிடிப்பு.

ஒரங்கட்டிறது, பிரிச்சுப் பாக்கிறது, புறக்கணிக்கிறது, தள்ளி வைக்கிறது எண்ட மாதிரியான விசயங்களில யாழ்ப்பாணம் ஒரு நம்பர் வன் இடம்.

ஆனால், இவைதான் ஜனநாயகத்தைப் பற்றி, தேசப்பற்றைப் பற்றி, உரிமைகளைப் பற்றி. இனப்பற்றைப் பற்றி எல்லாம் வாய் கிழியக் கதைக்கிற ஆட்கள்.

யாழ்ப்பாணம் எண்டால் நீங்கள் ஏதோ யாழ்ப்பாணக் குடா நாடு எண்ட றேஞ்சில எல்லாம் சிந்திக்கக்கூடாது.

அது யாழ்ப்பாணம் இல்லை.

யாழ்ப்பாணக் குடாநாட்டின்ரை வரைபடம் உங்கட கண்ணுக்குள்ளயோ மனசுக்குள்ளயோ வந்தால் அதை அப்பிடியே கிழிச்சுக் குப்பைக்கூடையுக்குள்ள போட்டிடுங்கோ.

யாழ்ப்பாணம் எண்டால், புன்னாலைக்கட்டுவனுக்கும் சுன்னாகத்துக்கும் மானிப்பாய்க்கும் அரியாலைக்கும் பண்ணைப்பாலத்துக்கும் இடைப்பட்ட பிரதேசம்தான்.

மற்றதெல்லாம் மண்ணாங்கட்டி.

அப்பிடியெண்டால், மாகாணசபை என்னெண்டு கைதடிக்குப்போனது எண்டு கேட்கிறீங்கள்!

அரியாலைக்குள்ளே ஒரு ஒதுக்குப்புறக்காணியைக் கூடக் கண்டு பிடிக்கேலாமல்தான் கைதடிக்கு மாகாணசபைக் கட்டடத்தைக் கொண்டு போனது. அதுவும் இந்த ஆளுநர் செய்த வேலை. அவர் இல்லையெண்டால், அதைக்கூட செம்மணிச்சுடலையோட சேர்த்துக் கட்டியிருக்கலாம்....

இதை ஏன் சொல்லிறன் எண்டால், நீங்கள் தீவுக்கு ஒருக்கால் வந்து பாருங்கோ... சனங்கள் தண்ணிக்குப் படுகிற பாட்டை. மெலிஞ்சிமுனை, கரம்பன் பக்கமாக வாருங்கோ... இஞ்சயெல்லாம் றோட்டுகள் கிடக்கிற கிடப்பைக் காணுவியள்.

இஞ்ச வாற வாத்திமார், டாக்குத்தர்மார் எல்லாம் ஏதோ தண்டனையை அனுபவிக்கத்தான் தங்களைத் தீவுக்கு அனுப்பியிருக்கினம் எண்ட மாதிரியான ஒரு மன நிலையிலதான் பழிப்பிக்கினம். அப்பிடித்தான் வைத்தியமும் செய்யினம்.

சிலபேர், தங்களை அர்ப்பணிச்சுச் சேவை செய்யிறதை மறுக்கேலாது. தீவுச் சனங்களுக்குத் தங்களால என்ன எல்லாம் செய்ய முடியுமோ அதையெல்லாம் செய்யிறவையும் இருக்கினம்.

மற்றாக்கள் ஏதோ தண்டனைக்கு வந்து போறதைப் போலத்தான் வந்து போகினம்.

இதைப்போலத்தான் வடமராட்சி கிழக்கு, காரைநகர்ப் பக்கங்களுக்கு நீங்கள் போனீங்கள் எண்டால்... அங்க றோட்டுகளும் பாழடைஞ்சு போயிருக்கும். வடமராட்சி கிழக்குக்கு ஒரு ஒழுங்கான றோட்டு இதுவரையில இல்லை.

ஆனால், யாழ்ப்பாணத்துக்கும் சுன்னாகத்துக்கும் கோப்பாய்க்கும் அரியாலைக்கும் மானிப்பாய்க்கும் இடையில நல்ல றோட்டைக் கிண்டி தார் ஊத்துறாங்கள். தார் றோட்டுக்கு மேல காபெற் போடுறாங்கள். இனிக் காபெற்றுக்கு மேல இன்னும் ஏதோ ஒண்டையும் போடுவாங்கள்.

புழுதியும் கல்லுமாக் கிடக்கிற றோட்டுகளுக்கு கிறவல்கூடக் கிடையாது. அந்த றோட்டெல்லாம் அப்பிடியே மண்ணாய் கிடக்க வேண்டியதுதான்.

ஏனெண்டால், இதெல்லாம் யாழ்ப்பாணத்துக்குச் சேர்த்தியில்லை. யாழ்ப்பாணத்துக்குப் புறத்தியில இருக்குதுகள்.

அப்பிடித்தான் வடமராட்சி கிழக்கில இருக்கிற பள்ளிக்கூடங்களுக்கு வாத்திமாரைக் கொண்டு வந்து சேர்க்கிறதும் ஒரு பெரிய பாடு.

அப்பிடித்தான் ஆராவது சிக்கி வந்தாலும் ஒரு ஆறுமாசம் நிக்கிறது கடுவல்.

இந்த நிலைமைத்தான் அராலி தொடக்கம் காரைநகர் வரையும்.

அங்காலப் பக்கத்துக்கு றோட்டு, தண்ணி, பள்ளிக்கூடம், ஆஸ்பத்திரி எண்டு எதையாவது போட்டுத்தாங்கோ எண்டு கேட்டால்....

'உங்களுக்குப் பொபிலேஷன் காணாது. பொபிலேஷன் குறைஞ்ச இடங்களுக்குக் காசு ஒதுக்கேலாது...' எண்டு விளக்கம் தருகினம்.

அப்பிடியெண்டால், எல்லா ஒதுக்கீடுகளையும் சீனாவுக்குத்தான் ஒதுக்கோணும். ஏனெண்டால், சனத்தொகையில சீனாதான் கூடுதலாக இருக்கு.

வளமான பிரதேசங்கள் எண்டிருந்தபடியால்தான் இந்தப் பகுதிகளில அந்தக் காலத்திலிருந்தே சனங்கள் இருந்ததுகள்.

வரலாற்றுக்கு முற்பட்ட இடங்கள் இதுகள்.

இண்டைக்கு இந்த இடங்கள் எல்லாம் சுடுகாட்டுக்கு ஒப்ப காட்சியளிக்குதுகள்.

மாகாணசபை வந்தாலென்ன, மத்திய அரசு வந்தாலென்ன எல்லாம் ஒண்டு எண்டமாதிரித்தான் காய்ந்த வெளியளாகக் காட்சியளிக்கின்றன.

செத்துப் பிழைத்த மனிசராகவே இந்தப் பகுதிச் சனங்கள் எல்லாம் திரியுதுகள்.

இந்த நிலைமைக்கும் சிங்களப் பேரினவாதம்தான் காரணமோ...! சத்தியமாகச் சொல்லுங்கோ, மெலிஞ்சி முனைக்கு றோட்டுப் போடுறதுக்கும் வேலணைக்குத் தண்ணி குடுக்கிறதுக்கும் உடுத்துறைக்கு றோட்டுப் போடுறதுக்கும் வெத்திலைக்கேணிக்கு வாத்திமாரை அனுப்பிறதுக்கும் மகிந்த சிந்தனைதான் தடையோ...

யாழ்ப்பாணத்தாற்றை இதயம் இப்பிடித்தான் நல்லாய்ச் சுருங்கிப்போயிருக்கு. இதுக்கொரு நல்ல ஆஸ்பத்திரி தேவை.

இதயத்தைச் சுத்தப்படுத்தி விட்டு இறைவனைக் கூப்பிடு. நிச்சயம் வருவார். - பைபிள்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## குழந்தைப்பருவத்தை அவர்களுக்கு விடுங்கள்!

கல்வியானது போட்டியும் சமூகத்தில் முந்தும் வெறியுமாக மாற்றப்பட்டு பிஞ்சுக் குழந்தைகள் படும் துன்பங்களை எத்தனை முறை எழுதியும் தீரவில்லை. ஒவ்வொரு வீட்டிலும் படிப்புக்காக நெருக்கப்படும் குழந்தைகளைப் பார்த்தால் பெரும் பரிதாபமாக இருக்கிறது.

இன்றைய கல்விப் போட்டியை கவனித்துப்பாருங்கள். பிரபல பாடசாலைகளில் முதலாம் வகுப்புக்கு பிள்ளைகளைச் சேர்க்கும்போதே அவர்களுக்குச் சோதனை இருக்கிறது. அதற்கு அந்தக் குழந்தையை பெற்றோர் ஒருவயதில் இருந்தே பழக்குகிறார்கள். குழந்தைப்பருவமே அதற்குக் கிடையாது.

குழந்தை பிறந்தவுடன் ஆஸ்பத்திரியில் வைத்தே முடிவு செய்து விடுகிறார்கள் – இந்தக் குழந்தை என்ஜினியராக வேண்டும் அல்லது டொக்டராக வேண்டும் என்று. அதற்கான திணிப்புகள் ஆரம்பித்து விடுகின்றன. நிகழ்காலமே ஆரம்பிக்காத குழந்தைகளுக்கு எதிர்கால பயத்தை ஊட்டிவிடுகிறார்கள்.

எழுத்தாளர் ஜெயமோகன் ஒரு ரயில் பயணத்தில் பார்த்ததை தனது இணையதளத்தில் எழுதுகிறார்:

“ஒரு அம்மா தன் குழந்தையிடம் சொல்வதைப் பார்த்தேன். ‘இப்பிடியே விளையாட்டுத்தனமா இரு... குட்டிச்சுவராப்போய் சாப்பாட்டுக் கடையிலே தட்டுதான் கழுவப் போவாய்’ அந்தக் குழந்தைக்கு மூன்று வயதிருக்கும். அது மகிழ்ச்சியுடன் ‘எவ்ளோ பெரிய தட்டு?’ என்று கேட்டது. ‘போ சனியனே’ என்று ஓர் அறை வைத்தாள் அம்மா. ரயில்பயணத்தில்கூட குழந்தையை அந்த ரயில்பயணத்தைப் பார்க்கவிடாமல் வீட்டுக்கணக்கு செய்ய வைத்துக் கொண்டிருந்தாள்.”

இப்படித்தான் நம் பெற்றோர் எல்லோருமே இருக்கிறார்கள். இந்த சமூகத்தின் கல்விமுறைச் சூழலில் தன் பிள்ளை தோற்று விடக் கூடாதென்ற பயம். அதனால் குழந்தைகள் தங்கள் விளையாட்டுப் பருவத்தை இழந்தவர்களாக வளர்கிறார்கள்.

ஆபிரிக்காவில் உள்ள மாஸாய் (Maasai) பழங்குடிகளைப் பற்றிக் கேள்விப்படுவது நமக்கெல்லாம் ஏக்கத்தை அளிப்பதாக இருக்கிறது. நமது பழங்காலச் சிறுபிராய வாழ்வும் இப்படித் தான் இருந்திருக்க வேண்டும்.

உலகத்திலேயே மாஸாய் பழங்குடிகளைப் போல அந்த அளவுக்கு சந்தோஷமான குழந்தைகள் வேறு எங்குமே கிடையாது. பன்னிரண்டு வயது வரை மாஸாய் ஆண்குழந்தைகள் எந்த வேலையும் செய்யவேண்டியதில்லை. எந்தக் கல்வியும் கற்க வேண்டியதில்லை. எந்தப் பொறுப்பும் சுமக்க வேண்டியதில்லை. பெண்கள் ஒன்பது வயதுவரை அப்படி இருக்கலாம்.

ஆமாம், தூங்கி விழித்ததுமுதல் இரவுவரை பிடித்ததுபோல விளையாடிக்கொண்டே இருக்கவேண்டியதுதான். மாஸாய் குழந்தைக்கு சொந்த வீடு என்ற பொறுப்பு கூட இல்லை. அந்த மாஸாய் சாதியின் எந்த வீட்டிலும் அது சாப்பிடலாம். குழந்தைகள் அந்த கிராமத்துக்கே பொதுவானவை. அவற்றை எவரும் கண்டிப்பதுகூட இல்லை.

பதினைந்து வயதில் மாஸாய் பழங்குடிகள் ஆண்களுக்கும் பெண்களுக்கும் வெவ்வேறு சடங்குகளை வைத்திருக்கிறார்கள். அந்தச் சடங்குகள் மிக விரிவானவை. அதைச் செய்ததும் ஆண் குழந்தைகளை அவர்களது குலத்தொழிலான வேட்டைக்குக் கூட்டிச்செல்கிறார்கள். வேட்டையைக் கற்றுக்கொடுக்கிறார்கள். பெண்களுக்கு பெண்களுக்குரிய தொழில்கள் கற்றுக்கொடுக்கப் படுகின்றன. வாழ்க்கை ஆரம்பிக்கிறது.

இப்படியானதொரு வாழ்க்கையைத் துறந்துதான் இப்போதைய இயந்திரக் கற்றலுக்கும் இயந்திர வாழ்க்கைப் போட்டிகளுக்கும் நாம் வந்திருக்கிறோம். குழந்தைகளின் நெருக்கடியை நாம் முயன்றால் குறைக்க முடியும். குழந்தைப் பருவத்தில் அவர்களை குழந்தைகளாய் வாழ விடமுடியும்.

- ஆசிரியர்.

# இஸ்ரேலிலுள்ள இலங்கையரின் பாதுகாப்பு குறித்து கவனம்

### - வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவிப்பு -

(கொழும்பு)

காஸாவில் ஏற்பட்டுள்ள யுத்த சூழலுக்கு மத்தியில் இஸ்ரேலிலுள்ள இலங்கைப் பணியாளர்களின் பாதுகாப்பு தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவிக்கின்றது.

இதுவரையில் இலங்கையர் எவருக்கும் எவ்வித பாதிப்புக்களும் ஏற்படவில்லை என பணியகத்தின் பிரதிப் பொதுமுகாமையாளர் மங்கள ரன்தெனிய தெரிவித்தார்.

இஸ்ரேலில் 7,000 இலங்கைப் பணியாளர்கள் தொழில் புரிந்து வருவதுடன், அவர்களில் 65 வீதமானவர்கள் பெண்கள் என வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்தது..

இலங்கையர்கள் அனைவரும் பாதுகாப்பாக உள்ளதாகவும், காஸாவிலுள்ள இலங்கையர்கள் தொடர்பில் அதிக கவனத்துடன் இருக்குமாறு வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் பணியகத்தின் பிரதிப் பொதுமுகாமையாளர் தெரிவித்தார்.

அத்துடன் இஸ்ரேல் தூதரகத்துடன் அமைச்சர் விசேட தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அவசர நிலைமை ஏற்படும் பட்சத்தில் இலங்கையர்களை நாட்டிற்கு வரவழைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என பிரதிப் பொதுமுகாமையாளர் கூறினார்.

எவ்வாறாயினும், தற்போது இலங்கையர்கள் எவரையும் நாட்டிற்கு வரவழைப்பதற்கான தீர்மானங்கள் எடுக்கப்படவில்லை.

தொடர்ந்தும் இஸ்ரேலில் ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பில் கண்காணித்து வருவதுடன், தேவை ஏற்படும் பட்சத்தில் இலங்கையர்களை நாட்டிற்கு வரவழைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும், பணியகத்தின் பிரதிப் பொது முகாமையாளர் மங்கள ரன்தெனிய மேலும் தெரிவித்தார்.

# எரிபொருள் குழாயில் வெடிப்பு; இத்தாலி நிறுவனம் மீது நடவடிக்கை

கொழும்புத் துறைமுகத்தில் இருந்து சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் வரையில் எரிபொருளை எடுத்துச் செல்லும் குழாயில் ஏற்பட்ட வெடிப்பு தொடர்பில் அந்தப் பகுதியில் நிர்மாணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த இத்தாலி நிறுவனத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க விருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனிய எண்ணெய் வளத்துறை அமைச்சர் அனுரபிரியதர்சன யாப்பா இதனைத் தெரிவித்துள்ளார்.

கொழும்புத் துறைமுகத்தில் இருந்து ஆழ்கடல் வழியாக எரிபொருளை கொண்டு செல்லும் குறித்த குழாயில் கடந்த ஒன்றரை மாதங்களுக்கு முன்னர் வெடிப்பு ஏற்பட்டது.

இந்தக் குழாய் திருத்தப்பட்ட போதும் மீண்டும் மீண்டும் அதில் வெடிப்புகள் ஏற்பட்டு வருகின்றமையால் சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் பணிகளை தொடர்ச்சியாக மேற்கொள்ள தடை ஏற்பட்டுள்ளது.

வெடிப்பு ஏற்பட்டுள்ள குழாயின் பிணைப்பினை ஆராய்வதற்காக அமைச்சர் அனுரபிரியதர்சன யாப்பா உள்ளிட்ட குழு ஒன்று கொழும்புத் துறைமுகத்தில் இருந்து 9 கடல் மைல்களுக்கு அப்பால் உள்ள குறித்த பகுதிக்கு சென்றிருந்தது.

எனினும் சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள கூடியதாக இருப்பதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# பாதுகாப்பு ஆபத்துகளின்றி வர்த்தகம் செய்ய முடியாது

### - இலங்கை நிலை குறித்து பிரிட்டன் -

இலங்கையில் பாதுகாப்பு ஆபத்துகளின்றி வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது என பிரித்தானியா தெரிவித்துள்ளது.

பிரித்தானியாவின், வெளிவிவகார மற்றும் கொமன்வெல்த பணியகத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றிலேயே இதுபற்றிய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் பிரித்தானிய வர்த்தகங்கள் எதிர்கொள்ளக் கூடிய பாதுகாப்பு மற்றும், அரசியல் ஆபத்துக்களை சுட்டிக் காட்டியே, இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையில் பாதுகாப்பு சவால்களின்றி வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது.

எனினும், அங்கு செயற்படும் பெருமளவு நிறுவனங்கள் பிரச்சினையின்றி ஏற்றுமதிகளை மேற்கொள்கின்றன.

வடக்கு, கிழக்கில் வாழும் மக்களின் அபிலாஷைகளை இலங்கை அரசாங்கம் எவ்வாறு நிறைவேற்றும் என்பதைப் பொறுத்தும், முன்னர் போர் நடந்த பகுதிகளின் மீள் அபிவிருத்தி, மற்றும் மத அடிப்படைவாதக் குழுக்களைக் கட்டுப் படுத்துவதைப் பொறுத்துமே, எதிர்காலத்தில் நடுத்தர மற்றும் நீண்டகால நோக்கில், அரசியல் மற்றும் பொருளாதார ஆபத்துக்கள் அமையும்.

இலங்கையில் வர்த்தகத்துக்கு தீவிரவாதிகளிடம் இருந்து எந்த அச்சுறுத்தலும் இல்லை.

2009இல் ஆயுத மோதல்கள் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதுடன், குறுகியகால, நடுத்தரக் கால தீவிரவாத அச்சுறுத்தல் இல்லாமல் போய் விட்டது.

முன்னாள் போர் வலயங்களை படைகள் புலமான கட்டுப்பாட்டில் வைத்துள்ளன.

ஏனைய தெற்கு மற்றும் தென்கிழக்காசிய நாடுகளுடன் ஒப்பிடும் போது, இலங்கையில் ஊழல் குறைவாக இருந்தாலும், அங்குள்ள வர்த்தகத்துக்கு ஊழல் ஒரு அச்சுறுத்தலாக உள்ளது.

கொள்வனவுகளில், ஊழல் மிக அதிகமாக இடம்பெறுகிறது.

அரசாங்க பேரங்களிலும், பொலிஸ் உள்நாட்டு இறை வரி, சுங்கம், உள்ளிட்ட வர்த்தகத்துடன் தொடர்புடைய துறைகளில் ஊழல் அதிகளவில் இருப்பதாக குற்றச்சாட்டுகள் உள்ளன.

இலங்கையில் வர்த்தகம் செய்யும், பிரித்தானிய நிறுவனங்கள், ஊழல் மற்றும் மோசடிகளை எதிர்கொள்வதற்கான மூலோபாயத்தை வகுத்துக் கொள்ள பிரித்தானியா ஊக்குவிக்கிறது என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## முஸ்லிம் கட்சிகள் ஒன்றிணைந்து தேர்தலில் போட்டியிடத் திட்டம்

ஊவா மாகாணசபைத் தேர்தலில் முஸ்லிம் கட்சிகள் ஒன்றிணைந்து போட்டியிடுவது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பொதுவான ஓர் சின்னத்தின் கீழ் முஸ்லிம் கட்சிகளை அணி திரட்டி போட்டியிட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முயற்சி எடுத்து வரு வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த முயற்சி வெற்றியளிக்காவிட்டால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்து போட்டியிட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஊவாமாகாணத்தில் 47000 முஸ்லிம் வாக்காளர்கள் இருப்பதாக முஸ்லிம் காங்கிரஸின் பொதுச்செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

தனித்தனியாக முஸ்லிம் கட்சிகள் போட்டியிட்டால் ஒரு உறுப்பினரையேனும் தெரிவு செய்ய முடியாது.

ஊவா மாகாணசபைத் தேர்தலில் முஸ்லிம் கட்சிகள் ஒன்றிணைந்து பொதுவான ஓர் சின்னத்தின் கீழ் போட்டியிட விரும்பினால் அதற்கான ஏற்பாடுகளை செய்யத் தயார்.

அல்லது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்து போட்டியிடும்

ஊவா மாகாணசபைத் தேர்தலில் கூட்டணி சேருமாறு இதுவரையில் ஆளும் கட்சி அழைப்பு எதனையும் விடுக்கவில்லை.

ஊவா மாகாணசபைத் தேர்தலில் தனித்து போட்டியிட வேண்டுமென உயர்பீடம் வலியுறுத்தி வருகின்றது. என அவர் தெரிவித்துள்ளார்.

**பிற்போக்கு தமிழ் அரசியல் சக்திகள் காலங்காலமாக அழிவு வேலைகளைத்தான் செய்து வருகிறார்களேயொழிய, தமிழ் மக்களுக்காக ஒரு சிறு துரும்பைத்தன்னும் தூக்கிப் போட்டது கிடையாது. இந்த உண்மையை தமிழ் மக்களும் மாணவ சமூகமும் உணர வேண்டும்.**




# கறையான் புற்றெடுக்க பாம்பு குடிகொண்ட கதையா?

## வானவில் இதழ் 41 தலையங்கத்திலிருந்து

**மாணவர்களை நல்வழிப்படுத்த வேண்டிய ஆசிரியர்களில் ஒரு சாரார் தமது சொந்த இலாபம் கருதியும், தாம் சார்ந்திருக்கும் தமிழ் இனவாத அரசியல் காரணமாகவும் மாணவர்களைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்ப்பதிலேயே அக்கறையாக இருக்கின்றனர்.**

**யாழ்ப்பாணப்** பல்கலைக்கழகத்திலுள்ள சில மாணவர் குழுக்களாலும், சில விரிவுரையாள "பெருந்தகை"களாலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற சில நடவடிக்கைகளைப் பார்க்கும்போது தமிழ் பேசும் மக்கள் கவலைப்படாமல் இருக்க முடியாது.

பொதுவாக கல்விக்கூடங்களை அரசியல்மயப்படுத்துவது மிகவும் தவறான காரியம். மாணவர்களோ ஆசிரியர்களோ தமது உரிமைகளுக்காக போராடுவதை நாம் இங்கு குறிப்பிடவில்லை. அது அரசியல் அல்ல. அது அவர்களது அடிப்படை உரிமைகள் சம்பந்தப்பட்ட விடயம்.

ஆனால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் சம்பவங்கள் ஜனநாயக பூர்வமான, நாகரீகமான அரசியலாக இருந்தால் கூட அதை மன்னிக்கலாம். இங்கு "போராட்டம்" என்ற பெயரில் நடாத்தப்படும் செயல்கள் பயங்கரவாத, பாசிசவாதப் போக்கின் மிச்சசொச்சங்கள்.

இங்குள்ள சில குழுக்கள் தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் என்ற பெயரில் வெறும் அரச எதிர்ப்புச் செயற்பாடுகள், சில கட்சிகளுக்கெதிரான செயற்பாடுகள், குறிப்பிட்ட அரச அதிகாரிகளுக்கு எதிரான செயற்பாடுகள், இனவாதப் பிரசாரங்கள், பிரிவினைவாத கருத்துகளைப் பரப்புவது என முற்றுமுழுதாக எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளாகவே இருக்கின்றன. இந்த ஒரு சிறிய குழுவினர் மேற்கொள்ளும் இச்செயற்பாடுகளால் பெரும்பான்மையான மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிக்கப்படுகிறது.

ஒருசில மாணவர்களின் இந்த நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தி மாணவர்களை நல்வழிப்படுத்த வேண்டிய ஆசிரியர்களில் ஒரு சாரார் தமது சொந்த இலாபம் கருதியும், தாம் சார்ந்திருக்கும் தமிழ் இனவாத அரசியல் காரணமாகவும் மாணவர்களைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்ப்பதிலேயே அக்கறையாக இருக்கின்றனர்.

இந்த நாசகாரப் போக்கிற்கு எதிராக பல்கலைக்கழக உபவேந்தரோ ஏனைய பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளோ நடவடிக்கை எடுக்க முற்பட்டால், அவர்களை "அரசாங்கத்தின் கைக்கூலிகள்" என முத்திரை குத்துவதுடன், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கையாட்கள் எனவும் முத்திரை குத்தி மலினமான பிரசாரத்தில் ஈடுபடுகின்றனர்.

இதில் வேதனையான விடயம் என்னவெனில், இன்று யாழ்.பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு மட்டுமின்றி, பெரும்பாலான விரிவுரையாளர்களுக்கும் கூட இந்தப் பல்கலைக் கழகம் எவ்வளவு சிரமங்களுக்கு மத்தியில் உருவாக்கப்பட்டது என்பது தெரியாமல் இருப்பதுதான்.

அதனால் இந்தப் பல்கலைக்கழகத்தை ஆரம்பத்தில் இருந்தே வரவிடாமல் தடுக்க முயன்று அது கைகூடாமல் போனபின்பும், காலத்துக்குக்காலம் இந்தப் பல்கலைக்கழகத்தை செயற்படவிடாமல் முடக்க முயற்சித்து வரும் பிற்போக்கு தமிழ் அரசியல் சக்திகளின் நோக்கத்தை இந்த மாணவர்களும் ஆசிரியர்களும் தெரிந்தோ தெரியாமலோ பூர்த்தி செய்யும் கைங்கரியத்தைச் செய்து வருகின்றனர்.

இலங்கையின் ஏனைய பகுதிகளில் பல பல்கலைக்கழகங்கள் செயற்பட்டு வந்த போதிலும், தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழும் வடக்கு கிழக்கில் ஒரு பல்கலைக்கழகம் உருவாக்கப்பட வேண்டும் என்ற தமிழ் மக்களின் கோரிக்கை ஆட்சியாளர்களால் தொடர்ச்சியாக புறக்கணிக்கப்பட்டே வந்தது.

அதற்கு இன்னொரு காரணமும் இருந்தது. தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு பல்கலைக்கழகம் வேண்டும் என்று ஐக்கியப்பட்ட குரலில் கோருவதற்குப் பதிலாக, ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் தமிழ்க் காங்கிரஸ் கட்சி "இந்துப் பல்கலைக்கழகம்" வேண்டும் என்றும், எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தின் தமிழரசுக் கட்சி "தமிழ் பல்கலைக்கழகம்" வேண்டும் என்றும் ஏட்டிக்குப் போட்டியாக அரசியல் செய்ததால், ஆட்சியாளர்கள் தமிழ் பேசும் மக்களின் பல்கலைக்கழகக் கோரிக்கையைத் தட்டிக்கழிப்பதற்கு அது ஒரு வசதியாகப் போய்விட்டது.

1965இல் டட்லி சேனநாயக்க தலைமையில் அமைந்த ஐக்கிய தேசியக் கட்சியின் ஏழுகட்சி கூட்டரசாங்கத்தில் தமிழரசு - தமிழ் காங்கிரஸ் கட்சிகளும் அங்கம் வகித்தன. இந்த இரு கட்சிகளும் ஒற்றுமையாக செயற்பட்டிருந்தால், தமிழ்ப் பகுதியில் ஒரு பல்கலைக்கழகத்தை நிறுவும்படி அந்த அரசை அன்றே வலியுறுத்தியிருக்கலாம்.

ஆனால் இந்த இரு கட்சிகளும் தமிழ்ப் பல்கலைக்கழகம் - இந்துப் பல்கலைக்கழகம் என குடுமிப்பிடிச் சண்டையில் இருந்ததால், அந்த அரசின் முதலாவது சிம்மாசனப் பிரசங்க உரையின் போது தமிழ்ப் பகுதியில் பல்கலைக்கழகம் அமைக்கவென 10 ரூபா அடையாள மானியம் ஒதுக்கிய அரசாங்கம் "நீங்கள் இருவரும் உங்களுக்கு என்ன பல்கலைக்கழகம் வேண்டும் என முடிவு செய்து கொண்டு வாருங்கள், அதன்பின்னர் பல்கலைக் கழகம் அமைக்கின்றோம்" என்று சொல்லி தப்பிக் கொண்டது.

அதன்பின்னரும் இந்த இரு கட்சிகளும் ஒரு உடன்பாட்டிற்கு வராமல் வீம்பு பண்ணியதால், அந்த சந்தர்ப்பமும் நழுவிப்போனது.

தமிழரசுக்கட்சி தான் தனியாக தமிழ்ப் பல்கலைக்கழகம் அமைக்கப் போவதாகக் கூறி திருகோணமலையில் பல நூற்றுக்கணக்கான ஏக்கர் காணிகளைப் பெற்றதுடன், அதற்காக வர்த்தகர்கள், பொதுமக்களிடம் பெரும் தொகையான நிதியையும் திரட்டியது. ஆனால் அந்தக் காணிக்கும் நிதிக்கும் என்ன நடந்தது என்பது இன்று எவருக்கும் தெரியாது.

இந்த சூழ்நிலையில் 1970ஆம் ஆண்டு தேர்தலில் சிறீலங்கா - சமசமாஜ - கம்யூனிஸ்ட் கட்சிகளின் கூட்டணி மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அமோக வெற்றிபெற்று ஆட்சிக்கு வந்தது. அந்த அரசில் தமிழ் பேசும் முஸ்லீமான கலாநிதி அல்லாஹ் பதியுதீன் முகமது கல்வி அமைச்சராக நியமிக்கப்பட்டதுடன், தமிழரான செல்லையா குமாரசூரியரும் முக்கியமான ஒரு அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

அத்துடன் சமசமாஜக் கட்சித்தலைவர்களான கலாநிதி என்.எம்.பெரேரா, கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வா ஆகியோரும், கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பீட்டர் கெனமனும் முக்கியமான அமைச்சர்களாக இருந்தனர்.

இந்த இடதுசாரி மற்றும் தமிழ் - முஸ்லிம் அமைச்சர்களின் முயற்சியால் யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக்கழகம் அமைக்கும் தீர்மானம் மந்திரிசபையில் ஏற்கப்பட்டு, அதற்காக உடனடியான செயற்பாடும் ஆரம்பிக்கப்பட்டது.

அதேநேரத்தில் இந்தப் பல்கலைக் கழக முயற்சியை ஊக்குவிக்கும் முகமாக யாழ்ப்பாணத்தில் "யாழ். பல்கலைக்கழக வளாக விஸ்தரிப்பு இயக்கம்" என்ற ஒரு அமைப்பும் உருவாக்கப்பட்டது. இதன் தலைவராக சேர்.பொன்.இராமநாதனின் மருமகனும், தமிழ் காங்கிரஸ் கட்சிப் பிரமுகரும், முன்னாள் மூதவை (செனட்) உறுப்பினருமான பிரபல சட்டத்தரணி எஸ்.ஆர்.கனகநாயகம் செயற்பட்டார்.

இந்த அமைப்பில் யாழ்ப்பாணத்தின் தலைசிறந்த கல்விமான்களும் இடதுசாரிச் சிந்தனையாளர்களுமான மு.கார்த்திகேசன், அ.வைத்திலிங்கம், எம்.பேராயிரவர், அ.விசுவநாதன், ஆர்.ஆர்.தருமரத்தினம், வித்துவான் க.ந.வேலன், டாக்டர் சு.வே.சீனிவாசகம், எஸ்.சிவபாதசுந்தரம், ஒறேற்றர் சி.சுப்பிரமணியம், ஏ.எஸ். கனகரத்தினம் உட்பட பலர் இணைந்து பணியாற்றினர்.

யாழ்.பல்கலைக்கழக வளாகத்தின் முதல் தலைவராக பேராசிரியர் க.கைலாசபதி அவர்களை அரசாங்கம் நியமித்தது.

1970இல் சிறீமாவோ தலைமையிலான மக்கள் முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்ததில் இருந்து பல்வேறு விதமான எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த தமிழரசுக்கட்சி இந்தப் பல்கலைக்கழகம் அமைவதைத் தடுப்பதற்கும் பலவழிகளில் சூழ்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தது. தங்களால் கொண்டுவர முடியாமல் போன ஒரு பல்கலைக்கழகத்தை இடதுசாரிகளின் முயற்சியால் கொண்டு வருவதா என்ற காழ்ப்புணர்ச்சியால் அவர்கள் பலவிதமான எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

கைலாசபதி அவர்கள் வண்ணார் பண்ணையில் இருந்த மைத்துனர் கே.பொன்னம்பலம் (பின்னாளில் யாழ். அரச அதிபராக இருந்தவர்) அவர்கள் வீட்டில் தங்கியிருந்தார். இதை அறிந்த தமிழரசுக்கட்சி ஆதரவாளர்கள் சிலர் அவர் தங்கியிருந்த வீட்டின் மீது ஒரு இரவு கைக்குண்டொன்றை வீசினர். ஆனால் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

1975ஆம் ஆண்டு பிரதமர் சிறீமாவோ பண்டாரநாயக்க அமைச்சர்கள், அரச உயரதிகாரிகள், வெளிநாட்டுத் தூதுவர்கள் சகிதம் யாழ்ப்பாணம் வந்து யாழ். பல்கலைக்கழகத்தை சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்தார். அதன் மூலம் தமிழ் பேசும் மக்களின் நீண்டகாலக் கனவு ஒன்று பூர்த்தி செய்யப்பட்டது.

இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வை வரவேற்க வேண்டிய தமிழரசுக் கட்சியினர், அதற்குப் பதிலாக அரசியல் காழ்ப்புணர்ச்சி மற்றும் குரோத மனப்பான்மை காரணாக சிறீமாவோ யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் இரண்டு நாட்களும் பொதுமக்களை பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கும்படி வேண்டுகோள் விடுத்தனர்.

ஆனால் பல்கலைக்கழகத் திறப்புவிழாவைக் கண்டு களிப்பதற்காக பல்லாயிரக் கணக்கான மக்கள் குழுமியதுடன், அன்று மாலை யாழ்.துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திலும் மைதானம் நிரம்பி வழியும் அளவுக்கு மக்கள் திரண்டு வந்திருந்தனர்.

அதன் பின்னர் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானபீடத்துக்குத் தேவையான கட்டடங்கள் அமைக்கப்படும் வரை அதை இயங்க வைப்பதற்காக தற்காலிகமாக வட்டுக்கோட்டையிலிருந்த யாழ்ப்பாணக்கல்லூரியின் சில கட்டடங்களைச் சுவீகரிப்பது என அரசாங்கம் தீர்மானித்தது. அதை எதிர்க்கும்படி தமிழரசுக்கட்சியினர் யாழ்ப்பாணக் கல்லூரி நிர்வாகத்தைத் தூண்டி விட்டனர்.

அத்துடன் நிற்காது யாழ்ப்பாணக் கல்லூரி நிர்வாகிகள் சிலரைக் கூட்டிக் கொண்டு கொழும்பு சென்று, சிறீமாவோ அரசாங்கத்தில் இருந்த செல்வாக்குமிக்க வலதுசாரி அமைச்சரான பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கவைச் சந்தித்து யாழ்ப்பாணக் கல்லூரி சுவீகரிப்பைத் தடுத்து நிறுத்தும்படி வேண்டினர். ஆனால் அது நிறைவேறவில்லை.

ஆனால் சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் தமிழரசுக்கட்சியினர் பல்கலைக் கழகத்தை செயற்படாமல் முடக்கவே முயன்றனர். ஒரு முறை பல்கலைக்கழகத்துக்கு முன்னால் மோட்டார் சைக்கிள் திருத்தகம் வைத்திருந்த ஒருவருக்கும் பல்கலைக்கழக மாணவர்கள் சிலருக்கும் ஒரு தனிப்பட்ட தகராறு ஏற்பட்ட போது, அதை அந்தப் பகுதியில் உள்ள தமிழர் கூட்டணியினர் அந்தப்பகுதி மக்களுக்கும் மாணவர்களுக்கும் இடையிலான மோதலாக உருமாற்றினர்.

பல மாணவர்கள் இரும்புக் கம்பிகளாலும் பொல்லுகளாலும் தாக்கப்பட்டனர். முத்திரைச்சந்தி பகுதியைச் சேர்ந்த ஒரு மாணவன் கத்திக்குத்துக்கும் இலக்கானார். பல்கலைக்கழகம் இயங்காமல் செய்யப்பட்டது. வீடுகளில் வாடகைக்குத் தங்கியிருந்த மாணவர்கள் வெளியேற்றப்பட்டனர்.

பல்கலைக்கழகத்துக்குள் பாதுகாப்பு தேடித் தங்கியிருந்த மாணவர்களுக்கு உணவு கொண்டு செல்ல முடியாதவாறு தடைகள் போடப்பட்டன. இறுதியாக பொலிசார் வரவழைக்கப்பட்டு வெளியிடத்து மாணவர்கள் அவர்களது வீடுகளுக்கு பஸ்களில் பாதுகாப்பாக அனுப்பி வைக்கப்பட்டனர்.

(18ஆம் பக்கம் பார்க்க)

# மனித உரிமை விவகாரங்களில் அதிக கவனம் செலுத்தாதீர்

## அமெரிக்காவிற்கு கூறுகிறது இலங்கை



(கொழும்பு)

மனித உரிமை விவகாரங்களில் அதிக கவனத்தை செலுத்த வேண்டாம் ,என அமெரிக்காவிடம், இலங்கை அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் மனித உரிமை விவகாரத்திற்கு கூடுதல முன்னுரிமை அளிப்பதை அமெரிக்கா தவிர்க்க வேண்டுமென ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நல்லிணக்க முனைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் துரித கதியில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்

இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார உறவுகளுக்கு மனித உரிமை விவகாரங்கள் தடையாக இருக்கக் கூடாது என அவர் வலியுறுத்தியுள்ளார்.

இரு தரப்பு உறவுகளை அளவிடும் அளவு கோலாக மனித உரிமை விவகாரத்தை அமெரிக்கா பயன்படுத்தக் கூடாது என அவர் கோரியுள்ளார்.

சீனா, இலங்கையுடனான உறவு களை விஸ்தரித்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கப்படவில்லை என்ற பொதுவான மாயை இலங்கை தொடர்பில் நீடித்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தென் ஆபிரிக்காவின் உண்மை மற்றும் நல்லிணக்க முனைப்புக்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

யுத்த நிறைவின் பின்னர் அரசாங்கம் வடக்கில் புனர்வாழ்வு புனமைப்பு பணிகளில் கூடுதல் கவனம் செலுத்தியதாகத் தெரிவித்துள்ளார்.

குற்றவாளிகளை தண்டிப்பதை விடவும் புனர்வாழ்வு புனரமைப்பிற்கு அரசாங்கம் அதிக முக்கியத்துவம் அளித்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டுக்கு பொருந்தக் கூடிய நல்லிணக்க முனைப்புக்கள் மேற்கொள்ளப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

# கடன் சுமை அதிகரிப்பென நிரூபித்தால் பதவி விலகுவேன்

## அமைச்சர் எஸ்.பி.தெரிவிப்பு

நாட்டின் கடன் சுமையை இந்த அரசாங்கம் அதிகரித்துள்ளது என எவரேனும் ஆதாரபூர்வமாக நிரூபித்தால் உடனடியாக அமைச்சுப் பதவியை விட்டு விலக்கிக் கொள்வதாக அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க அறிவித்துள்ளார்.

ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக்கொண்ட காலத்தில் மொத்த வருமானத்தில் 106 வீதம கடன் சுமை காணப்பட்டதாகவும் தற்போது அந்த தொகை பாரியளவில் குறைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

2016 ஆம் ஆண்டளவில் தேசிய கடன் சுமையை 65 வீதமாக குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் உறுதியளித்துள்ளார.

# குறுகிய மனப்பான்மையை கைவிட்டால் தீர்வு கிட்டும்

## இந்தியாவுக்கான உயர்ஸ்தானிகர்

(கொழும்பு)

குறுகிய மனப்பான்மையை விட்டு செயற்படும்·போது 13ஆவது அரசியல் அமைப்பு, தமிழக மீனவர் பிரச்சினை மற்றும் கச்சதீவு பிரச்சினை என்பவற்றை தீர்த்துக் கொள்ள முடியும் என்று இலங்கை தெரிவித்துள்ளது.

இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் சுதர்சன் செனவிரட்ன இந்திய நாளிதழ் ஒன்றுக்கு இந்தக் கருத்தை தெரிவித்துள்ளார்.

வரலாறுகளை பகிர்ந்து கொள்ளல், இராஜதந்திர நடவடிக்கைகள், பொருளாதார நட்பு மற்றும் அரசியல் நட்பு என்ற அடிப்படையில் இலங்கையும் இந்தியாவும் பிரச்சினைகளுக்கு தீர்வைக் காணலாம் என்று சுதர்சன் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் புத்திஜீவிகள், ஊடகவியலாளர்கள், அரசியல் வாதிகள் என்று அனைவருடனும் தொடர்புகளை பேணவுள்ளதாக உயர்ஸ்தானிகர் தெரிவித்தார்.

முன்னாள் உயர்ஸ்தானிகர் பிரசாத் காரியவசத்துடன் தாம் ஆராய்ச்சிக்காக கன்னியாகுமரி மற்றும் புதுக்கோட்டை ஆகிய இடங்களுக்கு சென்றதாக குறிப்பிட்டுள்ள சுதர்சன், அங்குள்ள மக்களின் உபசரிப்பு ஒரு தாய் உடன் இருப்பதைப் போன்று இருந்தது என்று தெரிவித்தார்.

# நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை ஒழிப்பு

## ஐக்கிய தேசியக் கட்சி இணக்கம்



நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிக்க ஐக்கிய தேசியக் கட்சி இணக்கம் வெளியிட்டுள்ளதாக சிரேஷ்ட அமைச்சர் டியூ.குணசேகர தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இரத்துச் செய்யப்பட வேண்டும் அல்லது அதிகாரங்கள் வரையறுக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டையே ஐக்கிய தேசியக் கட்சி கொண்டுள்ளது. என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நிறைவேற்று அதிகாரத்தை இல்லாதொழிக்கும் முனைப்புக்களில் இடதுசாரி கட்சிகள் தீவி[illegible] காட்டி வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த முனைப்புக்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் ஒத்துழைப்பு இன்றியமையாதது என டியு.குணசேகர மேலும் தெரிவித்துள்ளார்.

# அரசியலில் ஈடுபடும் எண்ணம் இல்லை என்கிறார் முரளி

(கொழும்பு)

அரசியலில் தமக்கு நாட்டமில்லை எனவும், அரசியலில் ஈடுபட போவதில்லை எனவும் இலங்கை முன்னாள் நட்சத்திர சுழற் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் தெரி வித்துள்ளார்.

நாட்டில் ஏதேனும் தேர்தல்கள் அறிவிக்கப்பட்டால், தமது பெயர் அதற்காக பயன்படுத்துவது வழமையாகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசியலில் ஈடுபட்டால் மட்டுமே மக்களுக்கு சேவையாயற்ற முடியும் என்பதில் தமக்கு நம்பிக்கை கிடையாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அறக்கட்டளைகள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் ஊடாக மக்களுக்கு தாம் சேவையாற்றி வருவதாக தெரிவித்த அவர் தன்னை தமிழராகவோ இந்து வாகவோ அடையாளபடுத்திக் கொள்ள விரும்பவில்லை எனவும், இலங்கையர் என்ற அடையாளமே முக்கியமானது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



இதன் காரணமாகவே சர்வதேச மனித உரிமை குற்றச்சாட்டுக்களின் போது அரசாங்கத்தின் சார்பில் குரல் கொடுத்துவருவதாக தெரிவித்துள்ளார்.

இது தவிர அரசாங்கத்துடன் வேறு எந்தக் கூட்டணியும் கிடையாது என அவர் சுட்டிக்காட்டி யுள்ளார்.

பல கட்சிகளினதும் அரசியல் வாதிகளுடன் நெருங்கிய தொடர்புகளை தான் பேணி வருகின்ற போதிலும் எவரும் அரசியலில் ஈடுபடுமாறு இதுவரை அழைக்கவில்லை எனவும் அவர் சுட்டிக்காடடியுள்ளார்.

அவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டாலும் அரசியல் களமிறங்கும் நோக்கம் எதுவும் தனக்கு கிடையாது என்றார்.



# அரசின் இருப்பிற்காக செயற்படும் ஹக்கீம் பொதுபலசேனா அமைப்பு

## ஜே.வி.பி. செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஹக்கீமும் பொதுபல சேனாவினரும் அரசின் இருப்பிற்காக இனவாத மதவாதக் கருத்துக்களை நாட்டிற்குள் தூண்டுகின்றனர்.எனவே, இவர்களது நாடக அரங்கேற்றத்திற்கு பொது மக்கள் ஏமாந்து விடக் கூடாது எனத் தெரிவித்த ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா இந்த இனவாத அரசுக்கு எதிராக பொது மக்கள் அணிதிரள வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இது தொடர்பாக ரில்வின் சில்வா மேலும் கருத்துத் தெரிவிக்கையில்

பொதுபலசேனா தேரர்மார் கூறும் கருத்துக்கள் தொடர்பாக அலட்டிக்கொள்ளத் தேவையில்லை.

ஏனென்றால் அந்த அமைப்பின் பின்னணியில் அரசாங்கமும பலமுள்ள ஒரு சக்தியுமே இயங்குகின்றன. அச் சக்தி அரசை ஆட்டுவிக்கின்றது. எனவே தான் பொதுபல சேனா எதைச் செய்தா லும் அவர்களுக்கு எதிராக சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. அரசின் இருப்பிற்காகவும் அரசியல் லாபத்திற்காகவும் பொது பல சேனா ஊடாக அரசாங்கம் மதவாதத்தைத் தூண்டுகிறது.

யுத்தம் முடிந்த நாட்டில் மீண்டும் இனங்கள் மதங்களுக்கிடையே மோதல்களை ஏற்படுத்தி அவற்றைத் தமது அரசியல நகர்வுகளுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ள அரசு முயற்சிக்கின்றது.


மறுபுறம் நீதி அமைச்சராக பதவி வகிக்கும் ஹக்கீமும் அரசின் தேவையை நிறைவேற்றுகின்றார்.

அவர் இனவாதம் மதவாதம் பேசி முஸ்லிம் மக்களின் வாக்குகளைக் கொள்ளையடிக்கும் அரசியல் ஏமாற்றுவித்தையை முன்னெடுக்கின்றார். எனவே, ஹக்கீமும் பொது பல சேனாவும் அரசின் தேவைகளை புரிந்துணர்வோடு நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றனர்.

இந்த உண்மையை பொது மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். எனவே இனவாத மதவாத சக்திகளின் பொறியில் சிக்கிவிடாது இன மதங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும்.

அத்தோடு, இந்த அரசாங்கத்திற்கு எதிராக ஓரணியில் திரள வேண்டுமென்றும் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

# பிரிட்டன் பிரஜை கொலை வழக்கு தீர்ப்பை எதிர்பார்க்கின்றது உலகம்



பிரித்தானிய பிரஜை குர்ஹாம் சாக்கி படுகொலை வழக்கு தொடர்பிலான தீர்ப்பு எவ்வாறு அமையும் என்பது குறித்து உலகம் விழிப்புடன் கண்காணித்துக் கொண்டிருப்பதாக பிரித்தானியா தெரிவித்துள்ளது.

இது தொடர்பிலான தீர்ப்பு இன்று அளிக்கப்பட உள்ளது. 2011ஆம் ஆண்டு நத்தார் பண்டிகையன்று குர்ஹாம் செய்க் தங்காலை ஹோட்டல் ஒனறில் வைத்து தாக்குதலுக்கு இலக்காகி கொல்லப்பட்டதுடன், அவரது ரஷ்ய காதலி பாலியல் வன் கொடுமைக்கும் உட்படுத்தப்பட்டார்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பிலான வழக்கு விசாரணைகள் கொழும்பு உயர் நீதிமன்றில் நடைபெற்று வருகின்றது. வழக்கு விசாரணைகளின் தீர்ப்பு குறித்து உலகம் கவனம் செலுத்தி வருவதாக பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் சிமோன் டான சூக் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மனித உரிமைப் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு வழங்கப்படுகின்றது என்பதனை உலகிற்கு பறைசாற்ற இந்த வழக்குத் தீர்ப்பு ஓர் சந்தர்ப்பமாக அமையும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

குர்ஹாம் சாக்கியின் குடும்ப உறுப்பினர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் கொலையாளிகள் தண்டிக்கப்பட வேண்டும என்று எதிர்பார்த்து காத்திருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சிங்கள சமூகத்தின் உரிமைகள் மீறப்படுவதாக ரணில் கவலை

இலங்கையில் பெரும்பான்மை இனமான சிங்கள சமூகத்தின் உரிமைகள் கூட மீறப்படுவதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள தனது அலுவலகத்தில் நேற்று முன்தினம் செய்தி யாளர்களிடம் பேசும் போதே ரணில் விக்ரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

சிங்களவர்களின் உரிமை மீறப்படுவதற்கான சிறந்த உதாரணம் முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயககவிற்கு எதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானமாகும்.

தமது உரிமைகள் மீறப்படுவதாக சிங்கள சமூகம் உணரும் போது, நாட்டில் உள்ள சிறுபான்மை இனத்தவர்களின் அச்ச உணர்வானது ஆச்சரியத்திற்குரியதல்ல.

இலங்கையில் ஜனநாயகம் என்பது தற்போது பெயரளவில் மாத்திரமே உள்ளது. உண்மையில் நாட்டில் சர்வாதிகாரமே



இருந்து வருகிறது.

ஜனநாயகத்தை பாதுகாத்து, சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட எவருடனும் இணைந்து பணியாற்ற ஐக்கிய தேசியக் கட்சி தயாராக உள்ளது என்றும் ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டார்.

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதலாக தேசிய நல்லிணக்கம் அமையவேண்டும்

## சந்திரகுமார் எம்.பி.தெரிவிப்பு



(கிளிநொச்சி)

தமிழ் மக்கள் இந்த நாட்டில் நீண்டகாலமாக இனரீதியாகவும் மொழிரீதியாவும் ஒடுக்கப்பட்டு வந்தனரென்பது எவராலும் மறுக்க முடியாத உண்மை. ஆகவே ஏற்படுத்தப்படும் தேசிய நல்லிணக்கம் என்பது உண்மையாக பாதிப்புக்களை எதிர்கொண்ட மக்களுக்கு ஆறுதலளிப்பதாகவும் நியாயம் வழங்குவதாகவும் அமைய வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக்குழுக்களின் பிரதி தலைவருமான முருகேசு சந்திரகுமார் அவர்கள் தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சியில் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் வடமாகாண மத்திய நிலையத்தைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்

கிளிநொச்சி மாவட்டத்தில் வடமாகாணத்திற்கான தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் அலுவலகம் திறந்து வைக்கப்படுவது பெருமைக்குரியது. அத்தோடு வடக்கு மாகாணத்தின் மத்திய பகுதியாக கிளிநொச்சி அமைந்துள்ளதென்பதை உணர்ந்த அமைச்சர் வாசுதேவ நாணயக்கார இந்த மாவட்டத்திலேயே தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டுக்கான மத்திய அலுவலகம் அமைய வேண்டும் என தீர்மானித்து செயற்படுத்தியமைக்கு எமது மீக்கள் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்று வடக்கு மாகாணத்தின் அனைத்து அமைச்சுக்களின் தலைமை அலுவலகங்களும் யாழ்.மாவட்டத்தில் இயங்கிவருகின்ற நிலையில் மத்திய அரசின் அமைச்சு மாகாணத்தின் மத்திய பகுதியை சரியாக தெரிவு செய்து அலுவலகத்தை அமைத்திருப்பது மாகாணசபையின் செயற்பாடுகளுக்கு சிறந்த வழிகாட்டியாக அமைந்துள்ளது.

யுத்தம் முடிவுற்று ஐந்து வருடங்களை எட்டியுள்ள நிலையில் தமிழ்பிரதேசங்களில் தமிழ்மொழி அரச கரும மொழியாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள போதிலும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுற்று நிருபங்களையும் கடிதங்களையும் இன்னமும் சிங்கள மொழியிலேயே பெறவேண்டியுள்ளது.

ஆகவே தொடரும் மொழி ரீதியான புறக்கணிப்பு செயற்பாடுகளுக்கு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மொழிகளுக்கான சம அந்தஸ்தென்பது வெறும் சுற்று நிருபம் மட்டுமல்ல நாட்டின் அரசியல் அமைப்பில் உருவாக்கப்பட்டுள்ள உத்தரவாதம் என்பதையும சகலரும் உணர்ந்து கொள்ள வேண்டும். ஆகவே மொழி தொடர்பான சம அந்தஸ்தை மீறுபவர்களை நாட்டின் அரசியல் அமைப்பை மீறிச் செயற்படுபவர்களாகவே கருத வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# அங்குரார்ப்பணமும் புதிய நிர்வாகதெரிவும்

தெல்லிப்பழை தமிழ்ச்சங்க அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த திங்கட்கிழமை மாலை 6 மணியளவில் வெகுசிறப்பாக நடைபெற்றது.

தற்காலிக தலைவர் ம.விக்னேஸ்வரன் தலைமையில் தேவாரபாராயணத்துடன் அங்குரார்ப்பண நிகழ்வு ஆரம்பமானது.

அதில் தலைவராக சி.சிவானந்தராஜா தெரிவு செய்யப்பட்டார். சிறப்பு விருந்தினராக பிரதேச சபை தலைவர் சுகிர்தன் வருகை தந்தார்.

அன்றுநடைபெற்ற தமிழ்ச்சங்க அங்குரார்ப்பண நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட நிர்வாக உறுப்பினர்கள் விபரம்,

போஷகராக கலாநிதி செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் ஆலோசகராக சோ.சுகிர்தன், தலைவராக ச.சிவானந்தராஜா, உபதலைவராக ச.ஆறுமுகநாதன், செயலாளராக திருமதி மா.கணேசதுரை, உபசெயலாளராக சி.ஹரிகரன், பொருளாளராக ம.விக்னேஸ்வரன், உபபொருளாளராக நா.சிவநாதன் ஆகியோரும். நிர்வாகசபை உறுப்பினர்களாக தி.திவாகரன், திருமதி கலாதேவி பொன்னம்பலம், வரதிஜயா, திருமதி த.கஸ்தூரி, திருமதி தமிழ்ச்செல்வி விஜயகுமாரன்,

ப.சேயோன், ச.வினாயகாந்தன், ச.கிருபானந்தன், ஆ.சுதன், வே.பாலேந்திரன், கணக்காய்வாளராக இ.ராதாகிருஷ்ணன் ஆகியோர் தெரிவுசெயப்பட்டனர். (48)

# போட்டோபிரதி இயந்திரம் பாடசாலைக்கு அன்பளிப்பு

(உரும்பிராய்)

உரும்பிராயில் இயங்கிவரும் யாழ்.வயாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாலயத்தின் வளர்ச்சிக்கு சுவிஸ் வாழ் பழைய மாணவர் தில்லைராஜா விஜயரட்ணமும் அவரது நண்பர்களும் இணைந்து 120,000 ரூபா பெறுமதியான போட்டோ பிரதி இயந்திரத்தை பாடசாலை அதிபர் யூட் மரியரட்ணத்திடம் கையளித்தனர்.



உரும்பிராயில் இயங்கிவரும் யா/வயாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாலயம் 1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து 2000 ஆம் ஆண்டு யா/வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்துடன் இணைக்கப்பட்டது.


2012 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவின பெரு முயற்சியினால் மீள ஆரம்பிக்கப்பட்டது.

பௌதீக வளங்கள் அற்ற நிலையில் 2012 ஆம் ஆண்டில் 08 மாணவர்களும், 2013 இல் 11 மாணவர்களும் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தனர்.

போட்டோ பிரதி இயந்திரம் இப்பாடசாலை நிறுவுநரின் பேர்த்தியும் ஓய்வுபெற்ற ஆசிரியருமான செல்வி சுசீலா சாரங்கபாணியின் பெருமுயற்சியினால் கிடைததமை குறிப்பிடத்தக்கது.

## ரமழான் நற்சிந்தனை

மது அருந்துபவன், பெற்றோரை நோவினை செய்பவன், உறவு முறையை துண்டித்து வாழ்பவன், பொறாமை கொள்பவன் ஆகியோரை அல்லாஹ் மன்னிக்கமாட்டான். (105)



# யாழ்.பல்கலைக்கழகத்தில் வர்ண இரவு நிகழ்வு

யாழ்பல்கலைக்கழக உடற்கல்விப் பிரிவும் விளையாட்டுக் கழகமும ஒன்றிணைந்து நடாத்தும் வர்ண இரவு நிகழ்வு நாளை சனிக்கிழமை பி.ப. 5 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக திறந்த வெளி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணம் சிறப்பு விருந்தினராக இலங்கை கூடைப்பந்தாட்ட அணியின் முன்னாள் தலைவியும், வெள்ளவத்தை ஹற்றன் நஷனல் வங்கியின் பிரதி முகாமையாளருமான ஜெயந்தி சோமசேகரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக உடற்கல்விப் பிரிவு பணிப்பாளர் கே.கணேசநாதன், விளையாட்டுப் பிரிவின் இயக்குநர் பி.ஜங்கரன், யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட பீடாதிபதி பேராசிரியர் எஸ்.ஸ்ரீசற்குணராஜா ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர்.

## முரசின் இன்றைய பலன்



(18.07.2014 வெள்ளிக்கிழமை)

ஜய வருஷம் ஆடி மாதம் 02 ஆம் திகதி.
சத்தமி / சித்தாமிர்தம். கரிநாள்
உத்தரட்டாதி நட்சத்திரம் மு.ப. 10.30 வரை. பின் ரேவதி.
இராகு காலம 10.30 - 12.00 வரை. சுபநேரம 06.00 - 07.30 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | அரசுத்துறையில் சேர அழைப்பு வந்தும் வெளியூர் வேலைவாய்ப்புக்காக செல்லல், சிசேரியன் மூலம் குழந்தை கிடைக்கும் நிலைப்பாடு மாறி இயற்கையாகப் பிரசவிப்பு. |
| ரிஷபம் | வரன்தேடி பல நாட்களாக அலைந்ததால் தேகசுகம் பாதிக்கப்படல், மும்முரமாக பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் குறுக்கீடுகள் வருவதினால் தேக்க நிலை உருவாதல். |
| மிதுனம் | கணக்குப்பதிந்ததில் நம்பிக்கையின்மை ஏற்பட்டதால் வாடிக்கையைக் கைவிடுதல், கள்ள நோட்டுக்கள், போலி நகைகள் வந்து சேரும் அபாய நிலை. |
| கடகம் | தானுண்டு தன்வேலையுண்டு எனப்பணியாற்றி பிறபிரச்சினைகளின்றும் ஒதுங்கிக்கொள்ளுங்கள், புதிய முதலீடுகளைச் செய்ய நண்பர்களின் ஆலோசனைகளைப் பெறவிரும்புதல். |
| சிம்மம் | பாரிய நஷ்டத்தை விவசாயப்பயிர்கள் ஏற்படுத்தியமையினால் பெற்ற கடனை அடைக்க முடியாத நிலை, தொழில நிமிர்த்தம் ஏற்பட்ட பயணம் இயந்திரக் கோளாறினால் தாமதப்படல். |
| கன்னி | சூதல் காய் பவர்களைப் போல பணியாட்களின் உறவுக் கரத்தை பிடித்ததால் நன்மை கிட்டல், போட்டிகளைச் சமாளிக்க புதிய யுக்தியைக்கையாளப்பின் நிற்க வேண்டாம். |
| துலாம் | "வீசா" கிட்டியமையைக் கேட்டு பெற்றோர் ஆனந்த வெள்ளத்தில் மூழ்குதல், பரீட்சையில் சித்தியடைந்தும் உயர் பதவிக்காக நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமளித்தும் பதவி கிட்டாமை. |
| விருச்சிகம் | பேச்சினை முதலீடுகளாகக் கொண்டு தரகுத்தொழிலை வெற்றிகரமாக நிறைவேற்ற முயலுங்கள், பொறுப்பின்றி யாருக்கும் பொருளை, பணத்தைக் கொடுத்து விட்டுப்பின் அல்லற்படவேண்டாம். |
| தனுசு | குழந்தைப் பராமரிப்பை முன்னிட்டு தாயாருக்கு வெளியூர் செல்லும் யோகம் ஏற்படல், சக ஊழியர்கள் கைகொடுத்ததினால் தேங்கியிருந்த பணிச்சுமை அற்றுப்போதல். |
| மகரம் | வெளிநாட்டிற்கு பயணமுயற்சி ஏற்பட்டவேளை பிரிவுத்துயரினால் கைவிட்டு விடல், பெற்றோரின் தேகநலம் சீர்கெட்டிருப்பதை எண்ணி தெய்வ தரிசனத்தை மேற்கொள்ள முயற்சித்தல். |
| கும்பம் | புழுகு மூட்டையை உங்கள் மேல் அவிட்டு விடுபவர் பற்றி எச்சரிக்கை நன்று, சத்திரசிகிச்சைக்கு உடன் நாள் குறித்தவேளை எதிர்பாராத நிகழ்வினால் பின்போடல். |
| மீனம் | அவமானம் மற்றும் பழிசுமத்த சகஊழியர் முற்படுவதை எண்ணி விழிப்பு நன்று, அவசரக்குடுக்கையினால் வாகனத்தை குறுக்கே திருப்பியதினால் விபத்தினின்றும் அருந்தப்பு. |




## ஜேர்மன் அணியைப் பாராட்டி சிறப்பு தபால் தலை

(பேர்லின்)

உலகக் கிண்ணக் கால்பந்து தொடரில் கிண்ணத்தை வென்ற ஜேர்மனி அணியைப் பாராட்ட சிறப்பு தபால் தலை வெளியிடப்பட்டுள்ளது.

உலக கிண்ணக் கால்பந்துத் தொடரில் அசத்திய ஜேர்மனி அணி சம்பியன் பட்டம் வென்று அமர்க்களப்படுத்தியது. இந்த வெற்றியை கொண்டாடும் வகையில், 50 இலட்சம் தபால்தலை சிறப்பாக வெளியிடப்பட்டுள்ளது. இது, இறுதிப் போட்டி நடைபெறுவதற்கு முன்பே தயாரித்து வைக்கப்பட்டது. இந்த தபால்தலையில், 2014 உலக சம்பியன் ஜேர்மனி என அச்சடிக்கப்பட்டுள்ளது. முதல் பிரதி, அணி பயிற்சியாளர், வீரர்கள், நிர்வாகிகள் முன்னிலையில் வெளியிடப்படுகிறது.

இது குறித்து ஜேர்மனியின் நிதி அமைச்சர் வொல்ப்கேங் கூறுகையில், இறுதிப் போட்டி நடைபெறும் முன்னரே, எங்கள் அணி கோப்பையை வெல்லும் என நம்பினோம். இதன் மூலம், கனவு நிஜமாகியுள்ளது. இந்த தபால் தலை, எங்கள் மக்களுக்கு இன்னும் மகிழ்ச்சியை அதிகரிக்கும், என்றார்.

இதைத் தயாரித்த வடிவமைப்பாளர் லூட்ஸ் மென்சி கூறுகையில், இந்த தபால்தலையில் வீரர்கள் ஓடுவது போல அமைக்கப்பட்டுள்ளது. ஆனால், எந்த ஒரு வீரரின் முகமும் இருக்காது. இதில் தனிப்பட்ட வீரருக்கு பாராட்டு கிடையாது. ஒட்டுமொத்த அணிக்கும் மதிப்பு தந்துள்ளோம் என்றார்.

## துடுப்பாடுகிறது இந்தியா


(லோட்ஸ்)

இந்திய, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது ஆட்டம் நேற்று இங்கிலாந்தின் லோட்ஸ் மைதானத்தில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத் தடுப்பைத் தீரமானித்தது. இதற்கமைய முதல் இனிங்ஸிற்காக ஆடிவரும் இந்திய அணி நேற்றைய ஆட்டம் மதிய போசனத்திற்காக நிறுத்தப்பட்டவேளை இரு விக்கெட்டுக்களை இழந்து 73 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதேவேளை, அஸ்வின் இப்போட்டியில் இணைத்துகொள்வார் என எதிர்பார்க்கப்பட்டபோதும், முதல் டெஸ்டில் விளையாடிய வீரர்கள் இரண்டாவது டெஸ்ட் போட்டிக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# படுதோல்வியின் எதிரொலி பிரேசில் பயிற்றுவிப்பாளர் விலகல்



பிரேசில் கால்பந்தாட்ட அணியின் பயிற்றுவிப்பாளர் லூயிஸ் பிலிப்பே ஸ்கொலறி தனது பதவியில் இருந்து விலகியுள்ளார். பிரேசில் கால்பந்தாட்ட சம்மேளனம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

உலகக் கிண்ணத்தில் சொந்த நாட்டில் வைத்து நான்காமிடத்தையே பிரேசில் அணியால் கைப்பற்ற முடிந்தது. அரையிறுதிப் போட்டியில் தங்கள் கால்பந்தாட்ட வரலாற்றில் மோசமான தோல்வியை சந்தித்தது பிரேசில். அதற்கு அடுத்த மூன்றாமிடப் போட்டியிலும் இன்னுமொரு மோசமான தோல்வியை பிரேசில் அணி சந்தித்தது.

பிரேசில் கால்பந்தாட்ட சம்மேளன தலைவர் ஜோஸ் மரியா மரின் உடன் நடந்த பேச்சுவார்த்தையின் பின்னரே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. 65 வயதான ஸ்கொலறி, 2002ஆம் ஆண்டு முதல் பிரேசில் அணியின் பயிற்றுவிப்பாளராக கடமையாற்றியுள்ளார். பிரேசில் அணியின் முன்னேற்றத்திற்கு மாற்றங்கள் தேவை. புதிய பயிற்றுவிப்பாளர் குழு தேவை என்பது அனைவரதும் கருத்தாக உள்ளது. எனவே ஸ்கொலறி மற்றும் அவர்களது குழுவினரை விடுவிக்கும் அதேவேளை அவர்களின் பணி கடந்த காலத்தில் மிகப்பெரியளவில் இருந்துள்ளது. அதற்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம் என பிரேசில் கால்பந்தாட்ட சம்மேளனத் தலைவர் ஜோஸ் மரியா மரின் தெரிவித்துள்ளார்.

இந்த உலகக் கிண்ண கால்பந்தாட்ட தொடருடன் அவரின் ஒப்பந்தம் நிறைவடையும் நிலையில் தனது இராஜினாமாக் கடிதத்தை ஸ்கொலறி கையளித்துள்ளார்.

பயிற்றுவிப்பாளராக பிரேசில், ஜேர்மனியுடன் அடைந்த 1 - 7 என்ற மிக மோசமான தோல்வி எப்போதும் என்னை நினைவு படுத்தும் விதமாக அமையும். ஆனாலும் இந்தப் பதவியை எடுக்கும் போதே இவ்வாறான கடின நிலை ஏற்படும் வாய்ப்புக்களை எதிர்பார்த்தே பதவி ஏற்றேன் என பிரேசில் அணிக்கு கடந்த 12 வருடங்களாக பயிற்றுவிப்பாளராக கடமையாற்றிய லூயிஸ் பிலிப்பே ஸ்கொலறி தெரிவித்துள்ளார்.

அரையிறுதிப் போட்டியில் பிரேசில் அணி தோல்வியடைந்த பின்னர் பதவி விலகல் தொடர்பில் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பிய போது, அதற்கான வாய்ப்புக்கள் இல்லை எனவும் தான் பிரேசில் அணியை கடந்த காலங்களில் சிறப்பாக வழி நடத்தியதாகவும் பல வெற்றிகளைப் பெற்றுக் கொடுத்ததாகவும் ஸ்கொலறி கூறி இருந்தமை குறிப்பிடத்தக்கது.



## வலுவான நிலையில் தென்னாபிரிக்கா


(காலி)

இலங்கை அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி பலமான நிலையைப் பெற்றுள்ளது. இலங்கை, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் ஆட்டம் இலங்கையின் காலியில் நடைபெற்று வருகின்றது.

முதல் இனிங்ஸிற்காக ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 268 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இரண்டாம் நாள் ஆட்டத்தை தென்னாபிரிக்க அணி நேற்றைய தினம் ஆரம்பித்தது. இதில் குயின்டன் கொக், டுமினி ஆகியோர் சிறப்பாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தனர். இறுதியில் தென்னாபிரிக்க அணி முதல் இனிங்ஸிற்காக ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 455 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இதில் டுமினி ஆட்டமிழக்காது 100, டு. பிளிசர் 80, குயின்டன் கொக் 51, எல்கர் 105, மோர்கல் 22 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் எம்.டி.கே. பெரேரா நான்கு, லக்மல் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய இலங்கை அணி நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, விக்கெட் இழப்பின்றி 30 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

## ஒலிம்பிக்கில் முதல் தங்கம் வென்ற கறுப்பின மங்கை காலமானார்



ஒலிம்பிக் போட்டிகளில் தங்கப் பதக்கம் வென்ற முதல் கறுப்பின பெண்மணியான ஆலிஸ் கோச்மேன் டேவிஸ் காலமானார். அமெரிக்காவிலுள்ள ஜோர்ஜியா மாகாணத்தின், அல்பனிப் பகுதியிலுள்ள தமது இல்லத்துக்கு அருகிலுள்ள ஒரு மருத்துவமனையில், தமது 90 ஆவது வயதில் அவர் காலமானார் என்று உறவினர்கள் அறிவித்துள்ளனர். லண்டனில் 1948இல் ஒலிம்பிக்கில், மகளிருக்கான உயரம் தாண்டும் போட்டியில், அவர் தங்கப் பதக்கம் வென்றார். அதன் மூலம் புதிய ஒலிம்பிக் மற்றும் அமெரிக்க சாதனையைப் படைத்தார்.

அமெரிக்காவில் அனைவருக்கும் சிவில் உரிமைகள் வழங்கப்படுவதற்கு முன்னர் அவர் விளையாட்டுத்துறையில் சாதனைகளைப் படைத்தாலும், நிறவெறிக் கொள்கை காரணமாக, பொதுமக்களுக்கென ஏற்படுத்தப்பட்டிருந்த விளையாட்டு வசதிகளை அவரால் பயன்படுத்திக்கொள்ள முடியவில்லை.

ஆலிஸ் கோச்மென் டேவிஸ் தமது 16 ஆவது வயதில் அமெரிக்கத் தேசியப் பட்டத்தை வென்றார், பின்னர் 25 ஆவது வயதில் ஒலிம்பிக்கில் தங்கம் வென்று புதிய சாதனையும் படைத்தார். ஏராளமான தடகள வீரர்களுக்கு அவர் முன்மாதிரியாக இருந்தார்.

ஆனாலும் அந்தக் காலகட்டத்தில் நிலவிய, அரசியல் சமூகப பிரச்சினைகள் காரணமாக, 1948 லண்டன் ஒலிம்பிக்ஸுக்கு பின்னர் தடகளப் போட்டிகளிலிருந்து அவர் ஓய்வு பெற்றார். எனினும் 16 வயதில் தேசியப் பட்டத்தை வென்ற பின், அடுத்த ஒன்பது ஆண்டுகளில், 25 முறை தடகளப் போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்றார்.

அவரது சாதனைகளைப் பாராட்டும் விதமாக 1975ஆம் ஆண்டு அமெரிக்க தடகள சம்மேளனமும், 2004 ஆம் ஆண்டு ஒலிம்பிக் சம்மேளனும், ஆலிஸ் கோச்மேன் டேவிஸுக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கி கௌரவித்தன.

அவர் ஒலிம்பிக் போட்டியில் தங்கப் பதக்கம் வென்று, அமெரிக்கா திரும்பியபோது, அவர் நீண்ட வாகனத் தொடரணி மூலம் வரவேற்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார் என ஒலிம்பிக்ஸ் ஆராய்ச்சியாளர் டேவிட் வாலேச்சின்ஸ்கி கூறுகிறார்.

எனினும் அப்போதிருந்த நிறவெறிக் கொள்கை காரணமாக, அவரை கௌரவிக்க, சொந்த ஊரான அல்பனியில் நடைபெற்ற அதிகாரபூர்வமான ஒரு நிகழ்வில், கறுப்பினத்தவரும், வெள்ளையினத்தவரும் தனித்தனியாக பிரித்து வைக்கப்பட்டிருந்தனர்.

1940 மற்றும் 1944 ஆம் ஆண்டு இரண்டாம் உலகப் போர் காரணமாக, இரண்டு ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறாமல் போனமை குறித்து, 2004 ஆம் ஆண்டு அவர் வழங்கிய ஒரு பேட்டியில், அவை அந்த இருமுறையும் நடைபெற்றிருந்தால், தான் கூடுதல் பதக்கம் வென்றிருக்க முடியும் என்று தெரிவித்திருந்தார்.

அவரது வெற்றியே, அமெரிக்காவில் பல தலைமுறை தடகள வீரர்களை ஊக்குவித்தது என்றும், அவரது மரணம் ஈடுசெய்ய முடியாத ஒன்று என்றும் அமெரிக்க ஒலிம்பிக் கமிட்டியின் தலைமை செயல் அதிகாரி ஸ்கொட் பிளாக்மென் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

# உரிய முறையிலான பயிற்சி தடையை தகர்க்க உதவும்



(கொழும்பு)

சுழற்பந்து வீச்சாளர் சேனநாயக்க பயிற்றுநருடன் இணைந்து உரிய முறையில் செயற்பட்டால் அவருக்கெதிரான தடையை நீக்கிக்கொள்ள முடியும் என இலங்கை அணியின் முன்னாள் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் தெரிவித்துள்ளார்.

சேனநாயக்கவின் பந்துவீச்சு சர்வதேச கிரிக்கெட் சபையின் விதிமுறையை மீறும் வகையில் இருப்பதாகத் தெரிவித்து தடை விதிக்கப்பட்டுள்ளது. அவர் பந்து வீச்சு முறையில் மாற்றங்களைச் செய்யலாம். தடையை நீக்கிக் கொள்வது அவருடைய கையிலேயே உள்ளது. அவருக்கு இத்தடை எவ்வளவு மனவேதனையைக் கொடுக்கும் என்பதை நான் அறிவேன். ஏனெனில் எனக்குத் தடை விதிக்கப்பட்டது. ஆனால், அந்தத் தடையிலிருந்து வெளிவந்ததால் என்னால் சாதிக்க முடிந்தது. எனவே, இதிலிருந்து மீள்வதற்கு அவருடைய சுயமுயற்சியும் அவசியம்.

பயிற்சியாளர் பணி சவால் நிறைந்தது. அதில் நாங்கள் முழுக் கவனம் செலுத்தாது போனால் பல விளைவுகளை எதிர்கொள்ள வேண்டி ஏற்படும். என்னைப் பொறுத்த வரையில் முழு நேர பயிற்றுநராகச் செயற்படும் திட்டங்கள் எதுவும் இல்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தேசிய இளைஞர் சேவை மன்ற மாவட்ட விளையாட்டு விழா

# கிண்ணம் வென்றது நல்லூர் பிரதேச இளைஞர் கழகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நடாத்திய மாவட்ட இளைஞர் கழக சம்மேளனங்களுக்கிடையிலான மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டியில் நல்லூர் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

26ஆவது யாழ். மாவட்ட இளைஞர் விளையாட்டு விழா கடந்த 12,13 ஆம் திகதிகளில் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இதில் தடகளம் மற்றும் கயிறுமுழுத்தல், கால்பந்தாட்டப் போட்டிகள் நடைபெற்றன.

கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டியில் யாழ்ப்பாண பிரதேச இளைஞர் கழக அணியும், நல்லூர் பிரதேச இளைஞர் கழக அணியும் மோதின. ஆரம்பம் முதலே விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளும் கோல் எதனையும் பெற்றுக் கொள்ளவில்லை. இதன் காரணமாக தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் யாழ்ப்பாணப் பிரதேச இளைஞர் கழக அணி 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

தொடர்ந்து ஆண்களுக்கான கயிறு முத்தல் போட்டி நடைபெற்றது. இறுதி ஆட்டத்தில் சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணியும் நல்லூர் பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணியும் மோதின. இதில் 2:0 என்ற அடிப்படையில் நல்லூர் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் வெற்றி பெற்றது. இதனைத் தொடர்ந்து தடகளப் போட்டிகள் நடைபெற்றன. ஒட்டுமொத்தப் புள்ளிகள் அடிப்படையில் நல்லூர் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் 79 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும் 39 புள்ளிகளைப் பெற்று தெல்லிப்பளை பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் இண்டாமிடத்தையும், 37 புள்ளிகளைப் பெற்று யாழ்ப்பாண பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் மூன்றாமிடத்தையும் பிடித்துக் கொண்டன. தொடர்ந்து சண்டிலிப்பாய், உடுவில், கோப்பாய், பருத்தித்துறை, கரவெட்டி பிரதேச இளைஞர் கழ்க சம்மேளன அணிகள் முறையே 4,5,6,7,8ஆம் இடங்களைப் பிடித்துக் கொண்டன.








மெய்வல்லுநர் போட்டியில் ஒவ்வொரு பிரிவிலும் சிறந்த தட, கள வீர வீராங்கனைகள் தெரிவு செய்யப்பட்டனர். இதன்படி 13 மற்றும் 19 வயதிற்கும் இடைப்பட்ட ஆண்கள் பிரிவில் சிறந்த தட வீரராக யாழ்ப்பாண பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தைச் சேர்ந்த ஜே.அபிமன், பெண்கள் பிரிவில் சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தைச் சேர்ந்த அ.அனட்டு ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இதே பிரிவில் சிறந்த கள வீரராக சாவகச்சேரி பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தைச் சேர்ந்த எம்.முரளிதரன், பெண்கள் பிரிவில் நல்லூர் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தைச் சேர்ந்த என்.விதுஷனா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

20 மற்றும் 29 வயதிற்கு இடைப்பட்ட ஆண்கள் பிரிவில் சிறந்த தட வீரராக நல்லூர் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தைச் சேர்ந்த அ.அருட்குமரன், பெண்கள் பிரிவில் பருத்தித்துறை பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தைச் சேர்ந்த ல.துஷிதா, இதே பிரிவில் சிறந்த கள வீரராக உடுவில் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தைச் சேர்ந்த வீ.ஜஸ்மினன், பெண்கள் பிரிவில் வேலணை பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தைச் சேர்ந்த மெற்றில்டா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இப்போட்டி நிகழ்வில் யாழ். மாவட்ட, பிரதேச இளைஞர் சம்மேளன அணி அதிகாரிகள், விளையாட்டு வீரர்கள், இரசிகர்கள் என பலர் கலந்து கொண்டனர். (48, 93)



கால்பந்து போட்டிகளில் கலக்கிய யாழ்ப்பாண இளைஞர் சேவை மன்ற அணி

# போராடித் தோற்றது தெல்லிப்பளை மகாஜனா

(தெல்லிப்பளை)

அநுராதபுரம் நிவந்தகல மத்திய மகாவித்தியாலய அணிக்கெதிரான ஒரு நாள் போட்டியில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணி போராடி தோல்வியைத் தழுவியது.

இரு பாடசாலைகளுக்குமிடையிலான ஒரு நாள் கிரிக்கெட் போட்டி அண்மையில் தெல்லிப்பளை மகாஜன கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய தெல்லிப்பளை மகாஜன கல்லூரி அணி 43 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 143 ஓட்டங்களைப் பெற்றது. இதில் எம். சுஜீபன் 19, டினோஜன் 18, பகீரதன் 25 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மலிக 19 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து, டில்சான், துசான் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 144 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய அனுராதபுரம் நிவந்தகல மத்திய மகாவித்தியாலய அணி, சர்மிலனின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறியது. இருப்பினும் மலீஷன் சண்டுஷன் ஆகியோரின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் அனுராதபுரம் நிவந்தகல மத்திய மகாவித்தியாலயம் அணி 29 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் மலீஷன் 48, சண்டுஷன் 36, றூசித் 14 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சர்மிலன் 12 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

இப்போட்டியின் பின் கருத்துத் தெரிவித்த மகாஜன கல்லூரியின் விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர், இரு பாடசாலைகளின் நட்புறை வெளிப்படுத்தும் நோக்கில் இப்போட்டி ஒழுங்கு செய்யப்பட்டதாகவும், இதில் வெற்றி தோல்வி என்பதை விட எமது வீரர்களுக்கு புதிய அனுபவம் .கிடைத்திருக்கும் என நம்புவதாகவும் தெரிவித்தார்.

வெற்றிக்காக இறுதி வரை போராடினோம். இறுதி வரை அனைத்து வீரர்களும் ஒருங்கிணைந்து போராடிய விதம் பாராட்டிற்குரியது என மகாஜனக் கல்லூரி அணியின் கப்டன் போட்டியின் பின்னர் தெரிவித்தார். (93)

## தேவகுமாரன், புகழினியன் சிறப்பு பந்துவீச்சு

# சென். ஜோண்ஸ் அபார வெற்றி

(கிளிநொச்சி)

தேவகுமாரன், புகழினியன் ஆகியோரின் அபாரமான பந்துவீச்சின் மூலம் சென். ஜோண்ஸ் கல்லூரி அணி அபார வெற்றி பெற்றது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இரண்டாவது சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன. இதில் கிளிநொச்சி மகாவித்தியாலயம், சென். ஜோண்ஸ் கல்லூரி அணிகளுக்கிடையிலான ஒரு நாள் போட்டி கடந்த 7ஆம் திகதி கிளிநொச்சி மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய சென். ஜோண்ஸ் கல்லூரி அணி 21.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 118 ஓட்டங்களைப் பெற்றது. இதில் புகழினியன் 19, கிருசியன், டானியல் ஆகியோர் தலா 12, கருனியன் 14, எமில்டன் 13 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் யதுசன் 32 ஓட்டங்களைக் கொடுத்து ஆறு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 119 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கிளிநொச்சி மகாவித்தியாலய அணி 16.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 52 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது. இதில் பாபிசன், கஜீபன் ஆகியோர் தலா 10 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் தேவகுமாரன் நான்கு, புகழினியன் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இதன் மூலம் சென். ஜோண்ஸ் கல்லூரி அணி 65 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. (எஸ்.பி.)

## ஜனாதிபதி தங்கக் கிண்ணக் கரப்பந்து அச்சுவேலியில் இன்று மாவட்டப் போட்டி

(அச்சுவேலி)

ஜனாதிபதி தங்க கிண்ணக் கரப்பந்தாட்டத் தொடரின் மாவட்டப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. அந்த வகையில் யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட அணிகளுக்கிடையிலான மாவட்ட மட்டப் போட்டிகள் இன்று பிற்பகல் 4.00 மணிக்கு அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளதாக யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கம் தெரிவித்துள்ளது.

இப்போட்டிகளில் பங்குகொள்ளவுள்ள அணிகளை உரிய நேரத்திற்கு வருகை தந்து நேர விரயத்தைத் தவிர்த்துக் கொள்ளுமாறும், மாகாணப் போட்டிகள் விரைவில் நடைபெறவுள்ளதாகவும் போட்டி அமைப்பாளர்கள் கேட்டுள்ளனர். (93)

## முன்பள்ளி விளையாட்டு கோண்டாவிலில் நாளை

(கோண்டாவில்)

கோண்டாவில் ஞானவீர முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நாளை பிற்பகல் 2.00 மணிக்கு நிலைய முன்றிலில் நிலையத் தலைவர் ம. இராஜேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்போட்டி நிகழ்வில் பெற்றோர், கிராம பெரியோர், விளையாட்டு நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து கொண்டு சிறார்களுக்கு உற்சாகமூட்டுமாறு போட்டி அமைப்பாளர்கள் கேட்டுள்ளனர். (48)

"ஏன் பிரித்தானியாவிற்கு ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் ஆசனம் இருக்கிறது என்பதும், வெளிநாடுகளில் நடைபெறும் யுத்தங்களில் பிரித்தானிய துருப்புக்களை ஈடுபடுத்த பிரித்தானிய பிரதமர் தயார் நிலையில் இருப்பதும் (பிரித்தானியாவின்) ஏகாதிபத்திய வரலாற்றை விளக்கு கிறது. பிரித்தானிய ஏகாதிபத்தியத்தை விபரிப்பதற்கு ஒரே ஒரு வார்த்தைதான் உண்டு. அது முற்றிலும் அநீதியான ஒன்றாகும், நிச்சயமாக அன்னியர்கள் யாரும் தங்களை காலனித்துவப்படுத்தி ஆளப்படுவதை விரும்ப மாட்டார்கள்".

- ஜெரமி பக்ஸ்மன்
(Jeremy Paxman)




# ஜெரமி பக்ஸ்மன் எனும் "பெரும் சிங்கம் இன்று தூங்குகிறது"!!

- எஸ்.எம்.எம்.பஷீர்

பி.பி.சி இரண்டின் (B.B.B-2) பின்னிரவுச் செய்திகளைத் தொடர்ந்து இடம்பெறும் செய்தியின் பின்னணி நிகழ்ச்சியான "நியூஸ் நைட்" (NEWS-NIGHT) நிகழ்ச்சி தொகுப்பாளர் ஜெரமி பக்ஸ்மன் இவ்வருட ஜூன் மாதத்தில் அந்நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்குவதில் இருந்து நிரந்தரமாக விலகிச் செல்கிறார்.

சுமார் இருபத்தி ஐந்து வருடங்கள் மிகவும் பிரபல்யம் பெற்ற நிகழ்ச்சியாக நியூஸ் நைட் நிகழ்ச்சியை நடத்தி, அதன் மூலம் உலகளவில் தனக்கென ஒரு தனியான இடத்தை பெற்றிருந்த ஜெரமி பக்ஸ்மன் இனிமேல் தான் அந்த நிகழ்ச்சியை நடத்தப் போவதில்லை என்று அறிவித்து விலகிச் சென்றுள்ளார்.

ஜெரமி பக்ஸ்மனின் அறிவுத் திறனும் எந்த பதவியில் உள்ளோரையும், குறிப்பாக ஆட்சித் தலைவர்களை நேர்காணும் துணிச்சலும் அவரை தனித்துவமாக ஏனைய நிகழ்ச்சித் தொகுப்பாளர்களிடம் இருந்து வேறுபடுத்திக் காட்டியது. நியூஸ் நைட் எனும் நிகழ்சியை பக்ஸ்மன் இன்று நடத்துகிறார் என்பதுவே பலரை பின்னிரவுச் செய்தியைப் தூக்கத்தைப் புறந்தள்ளி பார்க்க ஆவலுடன் காத்திருக்க வைத்தது.

அதனால்தான் இங்கிலாந்தின் பிரபல தினசரிகளில் ஒன்றான டெய்லி டெலிக்ராப் பத்திரிகையின் பத்தி எழுத்தாளர் டான் ஹோட்ஜெஸ் ஜெரமி பக்ஸ்மன் தனது நியூஸ் நைட் நிகழ்ச்சியை விட்டு வில்கிச் செல்வது குறித்து "பெரும் சிங்கம் இன்று தூங்குகிறது" ("great lion sleeps tonight"), என்று கூறியது ஜெரமி பக்ஸ்மனின் ஆளுமைக்கு சான்றாக அமைகிறது.

பரந்து பட்ட மக்கள் அரசியல் வரலாறு தொடர்பாக உள்ள தனது ஆர்வம் காரணமாக பல ஆய்வுகளை மேற்கொண்டு, பல நூல்களை ஜெரமி பக்ஸ்மன் எழுதி உள்ளார். குறிப்பாக பிரித்தானிய சாம்ராஜ்சியம் பற்றிய ஒரு வரலாற்று ஆய்வும், "பெரிய பிரித்தானியாவின் பெரும் யுத்தங்கள்" என்ற நூலும் முக்கியத்துவம் வாய்ந்த அண்மைய வெளியீடுகளாகும்.

பிரித்தானியா உலக யுத்தங்களில் நடந்து கொண்ட விதங்களை, அதன் ராஜீய அணுகுமுறையில் உள்ள சூழ்ச்சிகளை மிக வெளிப்படையாக விமர்சிக்கும் ஜெரமியின் நேர்மையை அவரின் நூல்களில் காண முடிகிறது.

மறைந்த இசைத் தொகுப்பு தொலைக்காட்சித் தொகுப்பாளர் ஜிம்மி சவைல், மற்றும் பெருமகன் மாக் அல்பைன் மீது முன்வைக்கப்பட்ட பாலியல் அவதூறுகள் பி.பி.சி யின் நியூஸ் நைட் நிகழ்ச்சியின் நன்மதிப்பிற்கு ஊறு செய்யும் விதமாக எழுந்த விமர்சனங்கள் தொடர்பாக தான் நியூஸ் நைட் நிகழ்ச்சியை விட்டு வெளியேற விரும்பியதாக அவர் குறிப்பிட்டிருந்தார்.

பி.பி.சி. செய்தி நிறுவனம் நியூஸ் நைட் நிகழ்ச்சியை நடத்துவதற்கு ஜெரமி பக்ஸ்மனுக்கு ஆண்டுக்கு 800,000 பவுண்ட்ஸ்களை ஊதியமாக வழங்கியது.

இந்த வருட "போர்வர்ட் ப்ரைஸ் போர் போயற்றி" -FORWARD PRIZE FOR POETRY (முற்போக்கு கவிதைக்கான பரிசு) குழுவில் இடம்பெறும் ஐந்து நடுவர்களில் தலைமை நடுவராக அழைக்கப்பட்டிருக்கிறார் ஜெரமி பக்ஸ்மன்.

இந்த வருட சிறந்த பரிசுக்கான கவிதையை தேர்வு செய்யும் பணியில் சுமார் 170 கவிதைத் தொகுப்புக்களையும் சுமார் 254 உதிரிக் கவிதைகளையும் சீர்தூக்கிப் பார்த்துவிட்டு ஜெரமி பக்ஸ்மன் "இப்பொழுது கவிஞர்கள் மொத்தத்தில் மக்களுடன் பேசுபவர்களாக இல்லாமல் பிற கவிஞர்களுடன் பேசுவதாகவே எனக்குத் தோன்றுகிறது. இன்றைய ஆங்கிலக் கவிதைகள் பொதுவாக மக்களுக்காக எழுதப்பட்டதாக இல்லை, மாறாக இன்றைய கவிஞர்கள் தமது கவிதை மேதாவிலாசத்தை காட்ட, பிற கவிஞனுடன் போட்டி போடும் விதத்தில் கவிதைகளை எழுதுகிறார்கள் போல் தெரிகிறது" என்று தெரிவித்த ஜெரமியின் கருத்தும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட லீட்சில் பிறந்து வளர்ந்த பிரபல கவிஞரும் நாவலாசிரியருமான செனி செனிவிரட்னவின் "Wild Cinnamon and Winter Skin" (காட்டுக் கறுவாவும் குளிர் காலத் தோலும்) கவிதைத் தொகுப்பில் இடம்பெற்ற கவிதைகளும் "போர்வோர்ட் ப்ரைஸ் போர் போயற்றியின் பாராட்டுதல்களைப் பெற்ற கவிதைகளில் உள்ளது.

பரிசு பெறப்போகும் கவிஞர்கள் யார் என்பது இவ்வருடம் [illegible] 30ஆம் தி[illegible] போகும் [illegible] நிகழ்ச்சிய[illegible] தெர[illegible]

ஜெரமி பக்ஸ்மனுடனான எனது ஒரு சிறிய சந்திப்பின் பொழுது அவர் தனக்கு மிகவும் பரிச்சயமான இ[illegible] மட்டக்களப்பையும் கிழக்கு மாகாணத்தையும் சிலாகித்து பேசிய பொழுது எப்படியான அனுபவங்களையும் தகவல்களையும் கூட கொண்டிருக்கிறார் என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது. அவரின் நியூஸ் நைட் நிகழ்ச்சியை இழக்கின்ற இலட்சோபலட்சம் மக்களில் நானும் ஒருவனே. ஜெரமி பக்ஸ்மனின் இடம் இலகுவில் நிரப்பப்படக் கூடியதொன்றல்ல.

கரப்பான் பூச்சியை பார்த்தாலே, சிலர் பயந்து நடுங்குவர்; பலர் அருவருப்படைவர். ஆனால், சீனாவின் கிழக்கு பியூஜியான் மாகாணத்தில் வசிக்கும் யுவான் மெக்சியா என்ற இளம் பெண், கரப்பான் பூச்சிகளுடன் தான், வாழ்க்கையே நடத்துகிறார்.

ஒரு லட்சம் கரப்பான் பூச்சிகளை, தன் வீடு முழுவதும் வளர்க்கிறார். இந்த கரப்பான் பூச்சிகளை இவர் வளர்ப்பது, பொழுது போக்கிற்காகவோ, சேவை நோக்கத்துடனோ அல்ல; வியாபார நோக்கத்துடன்.

ஆம், சீனாவில் கரப்பான் பூச்சிகளிலிருந்து ஒரு வகை மருந்து தயாரிக்கின்றனர். இதற்காகத் தான், இவர், கரப்பான் பூச்சிகளை வளர்த்து, அவை நன்றாக வளர்ந்ததும், அவற்றை தண்ணீரில்






# வருமானம் தரும் கரப்பான்!

முழ்கடித்து சாகடித்து, பின், காய வைத்து, பொதி செய்து, மருந்து தயாரிக்கும் கம்பெனிகளுக்கு விற்று விடுகிறார். ஒரு கிலோ கரப்பான் பூச்சிகளின் விலை 15,000 ரூபா!









# உன் சமையலறையில் படத்துக்கான விமர்சனம்

- சுரேஷ் கண்ணன் -

| | |
|---|---|
| வெள்ளை ரவை | - 200 கிராம் |
| கடுகு | - 1 கரண்டி |
| உளுத்தம் பருப்பு | - 1 கரண்டி |
| கடலைப் பருப்பு | - 2 கரண்டி |
| மஞ்சள்தூள் | - ஒரு சிட்டிகை |
| பெரிய வெங்காயம் | - 1 |
| பச்சை மிளகாய் | - 2 |
| தக்காளி | - 1 |
| பட்டாணி, கரட், பீன்ஸ் | - 100 கிராம் |
| உப்பு | - தேவையான அளவு |
| எண்ணெய் | - 8 கரண்டி |

**செய்முறை :**

வெறும் வாணலியில் ரவையை சூடு வரும் வரை வறுக்கவும். வெங்காயத்தை நீளவாக்கில் நறுக்கவும். காய்களை சிறு துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும். பச்சை மிளகாயை நீள வாக்கில் நறுக்கவும். தக்காளியை சிறு துண்டுகளாக நறுக்கவும். வாணலியை அடுப்பில் வைத்து எண்ணெய் விட்டு சூடானதும் கடுகு, உளுத்தம் பருப்பு, கடலைப் பருப்பை போடவும். தாளித்து சிவந்ததும் நறுக்கிய வெங்காயம், காய்களைப் போட்டு, பச்சை மிளகாய், தக்காளி சேர்த்து வதக்கி, மஞ்சள் தூளைப் போட்டு, 3 டம்ளர் (600 மி.லீ) தண்ணீர் விட்டு கொதிக்க விடவும். 5 நிமிடத்தில் காய்கள் சற்று வெந்ததும் உப்பு சேர்த்து, பின் வறுத்த ரவையை சிறிது சிறிதாக சேர்த்து, கட்டி படாமல் கிளறவும். 5 நிமிடத்தில் ரவை வெந்ததும் இறக்கி, பரிமாறவும். (ரவை சேர்ந்ததும் அடுப்பை குறைந்த தணலில் வைத்து வேக வைக்கவும்)

மேற்குறிப்பிட்ட திரைப் படத்தைப் பார்க்கும் நேரத்தில் மேற்குறிப்பிட்ட சமையல் குறிப்பையாவது முயற்சி செய்தால் பயனுள்ள முறையில் நேரத்தை செலவு செய்வதோடு மனைவியிடமும் நல்ல பெயர் பெற முயற்சி செய்யலாம்.


அன்புள்ள பிரகாஷ்ராஜ் சார்.

நீங்கள் ஓர் அற்புதமான நடிகர். அற்புதமான, வெளிப்படையான மனிதரும் கூட என்பதை உங்களின் கட்டுரைகளின் மூலம் உணர்கிறேன். அந்த அன்பிலும் உரிமையிலும் ஒரு ரசிகனாக சொல்கிறேன். டைரக்‌ஷன் என்கிற சமாச்சாரத்திற்கும் உங்களுக்கும் நிறைய இடைவெளி இருக்கிறது. அதனால் அதில் செலவிடும் உழைப்பையும் நேரத்தையும் வீணடிக்காமல் அதிக திரைப்படங்களில் நடித்து எங்களை மகிழ்விக்குமாறு வேண்டுகிறேன்.

# நோயுற்றவர்களின் உரிமைப் போராட்டம்

1

Dr.சி.சிவன்சுதன்
வைத்திய நிபுணர்.
யாழ் போதனா வைத்தியசாலை.
(நன்றி: Jaffna Diabetic Centre)



நோயுற்று அன்புக்கும் ஆதரவுக்கும் ஏங்கி நிற்கும் மனிதர்களின் உரிமைகள் மதிக்கப்படுகின் றனவா? என்ற கேள்வி எம் அனைவரது மனங்களிலும் அடிக்கடி தோன்றி மறைந்து கொண்டுதான் இருக்கின் [illegible]. உலகிலே மனித உரிமை மீறல்கள் பற்றி அடிக் [illegible] பேசப்பட்டுக்கொண்டிருக்கும் இந்தக் காலகட் [illegible]திலே மேலைத்தேச நாடுகளிலே விலங்குரிமை பற்றிக்கூட கரிசனை காட்டப்பட்டு வருகின்ற நிலையில் எமது நோய் வாய்ப்பட்ட மக்களின் உரிமை மீறல்கள் [illegible] நாம் சிந்திக்கத் தவறுவது நியாயமாகாது.

பொது மக்களுக்கு மட்டுமல்ல மருத்துவத் துறையினருக்கும், பத்திரிகைத் துறையினருக்கும், அரசு தரப்பு அதிகாரிகளுக்கும், ஏன் காவல்துறையினருக்கும் கூட நோய்வாய்ப்பட்ட ஒருவருக்கு மருத்துவம் சம்பந்தமாக இருக்கும் அடிப்படை உரிமைகள் பற்றிய அறிவும் போதாமல் இருப்பது வேதனைக்குரிய விடயமாகும்.

ஒரு நோயாளியினுடைய நோய் சம்பந்தப்பட்ட தகவல்கள் ஒரு பொதுவிடயம் அல்ல. பலரும் பேசி ஆராய்வதற்கு இது ஒரு செய்தி அல்ல, பத்திரிகைகளில் பிரசுரித்து அம்பலப்படுத்துவதற்கும் ஒருவர் நோய்வாய்ப்படுவது மற்றவர்கள் "விசா" எடுப்பதற்கும் இடமாற்றம் பெறுவதற்கும் நிவாரணம் பெறுவதற்குமான ஒரு துருப்புச் சீட்டு அல்ல.

ஒருவர் நோயுற்றிருப்பது பலரும் போய் விசாரிப்பதற்கான விடுப்புச் செய்தி அல்ல. இது அந்த நோயாளியும் அவர்தம் உறவுகளும் சம்பந்தப்பட்ட ஒரு உணர்வுபூர்வமான, அந்தரங்கமான விடயம். இதனை மனிதாபிமானத்துடன் அணுக வேண்டிய தேவை இருக்கின்றது.

நோயுற்றவர்களின் அடிப்படை உரிமைகள் பலதரப்பட்டவர்களாலும் அப்பட்டமாக மீறப்படுவதற்கான காரணம் என்ன?

ஒருவர் நோயுற்று இருக்கும் காலத்திலே அவர் மதிக்கப்படுவதிலும் வசதிகளைப் பெற்றுக் கொள்வதிலும் அவருடைய நோய்நிலைமை சம்பந்தமான இரகசியத் தன்மை பேணப்படுவதிலும் சரியான தகவல்களைப் பெற்றுக்கொள்வதிலும், சமவாய்ப்புக்களையும் கவனிப்புகளையும் பெற்றுக் கொள்வதிலும் சுயாதீனமாக தனது சிகிச்சை சம்பந்தமான விடயங்களைத் தீர்மானிப்பதிலும் தனக்கு இருக்கும் குறை நிறைகளை பகிர்ந்து கொள்வதற்கான சந்தர்ப்பங்களை பெற்றுக்கொள்வதிலும் அவர் எவ்வாறான உரிமை- களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டிய தேவை இருக்கின்றது.

வைத்தியசாலைகளில் நோயுற்றவரின் உரிமைகள் எவ்வாறு பேணப்படுகின்றன?

இயலாத சூழ்நிலையில், தான் முன்பு தேடிவைத்த சொத்துக்களைத் தனது மருத்துவத் தேவைகளுக்காகவும் அன்றாட தேவைகளுக்காகவும் பயன்படுத்திக் கொள்வதில் அவர் எதிர்கொள்ளும் சிரமங்களும் தலையீடுகளும் என்ன? என்பது பற்றி எல்லாம் பரந்துபட்ட விதத்தில் சிந்திக்க வேண்டிய கட்டாயம் உள்ளது.

பொதுமக்கள் சுகாதாரத் துறையினர், ஊடகத் துறையினர் அரச அதிகாரிகள், காவல்துறையினர் என அனைத்து தரப்பினரிடையேயும் நோய் வாய்ப்பட்டிருக்கும் ஒருவருக்கு இருக்கின்ற அடிப் படை உரிமைகள் சம்பந்தமான ஒரு விழிப்புணர்வு ஏற்படும் பொழுது அந்தப் பிரதேசத்தின் சுகாதார நிலை பல வழிகளிலும் முன்னேற்றம் அடையும்.

வைத்தியசாலைகளில் தாம் அவமதிப்புகளுக்கும் கஷ்டங்களுக்கும் உள்ளாவதாகக் கருதி வைத்தியசாலைகளுக்குச் செல்லாது ஆபத்துக்களை தேடிக்கொள்பவர்கள் எத்தனை பேர்?

வைத்தியருக்கு சொல்லும் தனது நோய் நிலை சம்பந்தமான இரகசியத்தன்மை பேணப்படுமா? என்ற சந்தேகத்தில் இக்கட்டான சில உண்மைகளை மறைப்பதனால் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் பெரும் தாக்கங்கள் எத்தனை?


இரகசியம் பேணப்படவேண்டிய மருத்துவத் தகவல்களைப் பத்திரிகையில் பிரசுரித்து அம்பலப்படுத்தப்படுவதால் ஏற்படும் அவமானத்தால் நிகழ்ந்துவரும் சுகாதாரத் தாக்கங்கள் எத்தனை?

தராதரம் குறைந்த மருந்துகளுக்கு அனுமதி வழங்கப்படுவதால் ஏற்பட்டுவரும் பாதிப்புக்கள் எத்தனை?

இவ்வாறாக பற்பல விதங்களில் நடைபெறுகின்ற சம்பவங்களால் நோயுற்றவர்களின் அடிப்படை உரி மைகள் பரந்துபட்ட அளவில் மீறப்பட்டு வருகின்றன.

(தொடரும்...)

# இலங்கைக்கு வந்த வெளிநாட்டுத் தூதுவர்கள்



– எம்.எஸ்.எம். ஐயூப் கட்டுரையிலிருந்து.

இலங்கையில் இடம்பெற்ற 30ஆண்டு கால போரின் ஆரம்ப காலத்தில் ஒரு திருப்பு முனையாக அமைந்த 1983ஆம் ஆண்டு இந்தியா, இலங்கையின் இனப்பிரச்சினையில் நேரடியாகவே தலையிட்டதோடு, அதற்காக சிறப்புத் தூதுவர் ஒருவரை இலங்கைக்கு அனுப்பியது. அவர் தான் கோபாலசுவாமி பார்த்தசாரதி. அவர் பின்னர் இந்திய வெளியுறவுச் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

பின்னர் இலங்கையின் இனப் பிரச் சினை விடயத்தில் தலையிட்டு செய லாற்ற இந்தியா மற்றொரு சிறப்புத் [illegible]வரை அனுப்பியது. அவ்வாறு வந்த ரொமேஷ் பண்டாரியும் பின்னர் இந்திய வெளியுறவுச் செயலாளரானார்.

இந்திய சிறப்புத் தூதுவர்களது செயற்பாடுகளின் பலாபலன்களை இலங்கை அனுபவித்துக் கொண்டிருக்கும் நிலையில் தான், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, இனப் பிரச்சினையில் தலையிடுமாறு 1999ஆம் ஆண்டு நோர்வேக்கு அழைப்பு விடுத்தார். அதன் பிரகாரம் 2000ஆம் ஆண்டில் நோர்வேயின் சிறப்புத் தூது வரான எரிக் சொல்ஹெய்ம், இலங் கைக்கு அடிக்கடி வரத் தொடங்கினார்.

அவரது தூதுப் பணியின் இடையே இனப் பிரச்சினை பூரணமாகவே சர்வதேசமயமாகியது. இந்த சர்வதேச மயமாக்கலின் பயனாக அவரது தூதுப் பணியின் காலத்திலேயே மற்றொரு வரும் சிறப்புத் தூதுப் பணியில் இறங்கினார். ஜப்பானிய சிறப்புத் தூதுவர் யசூஷி அகாஷியே அந்தத் தூதுவர். இந்தப் பட்டியலில் புதிதாக சேர்ந்திருப்பவர் கடந்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்த தென் ஆபிரிக்க பிரதி ஜனாதிபதி சிறில் ரமபோச ஆவார்.

இந்த தூதுவர்களின் வருகையில் காணப்பட்ட சிறப்பு அம்சம் என்ன வென்றால், இவர்களில் இருவர் மட்டுமே இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் வந்தார்கள். சொல்ஹெய்மும் ரமபோசவுமே அவ்வாறு அழைக்கப்பட்டவர்கள். மற்றவர்கள் அவரவரது நாட்டினால் நியமிக்கப்பட்டவர்கள். இந்திய சிறப்புத் தூதுவர்கள் இந்திய நலனுக்காக நியமிக்கப்பட்டனர். அகாஷி, ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட சமாதா- னத் திட்டத்தின் அவசியத்தால் அவரது நாட்டினால் நியமிக்கப்பட்டார்.

சமாதானத்துக்காக இவர்கள் உழைப்பதாக கூறப்பட்ட போதிலும், இதுவரை வந்த சிறப்புத் தூதுவர்களின் காலத்தின் பிரச்சினை பூதாகாரமாக வளர்ந்து மாபெரும் போரொன்றே வெடித்தது. ஆரம்ப காலத்தில் ஆங் காங்கே காவலில் நின்ற படையினரின் பின்னால் சைக்கிள்களில் வந்து சுட்டு விட்டு தப்பி ஓடிய புலிகள் அமைப்பு, அக் கால கட்டத்திற்குள் காலாட்படை, விமானப்படை மற்றும் கடற்படைகளைக் கொண்ட பாரிய சக்தியாக மாறி பின்னர் 2009ஆம் ஆண்டு ஏறத்தாழ முற்றாகவே அழிக்கப்பட்டுவிட்டது.

சொல்ஹெய்ம் மற்றும் அகாஷி ஆகிய சிறப்புத் தூதுவர்களின் காலத் தில் இலங்கையின் இனப் பிரச்சினை தொடர்பாக, அமெரிக்காவில் வொஷிங்டன் மற்றும் ஜப்பானில் டோக்கியோ ஆகிய நகரங்களில் சர்வதேச மாநாடுகள் நடத்தப்பட்டன. ஐம்பதுக்கும் மேற்பட்ட நாடுகள் அவற்றில் கலந்து கொண்டன.

அக் காலத்தில் இருந்த சமாதானத் திட்டத்தின் கீழ் அந்நாடுகள் இலங்கை யின் அபிவிருத்திற்காக உதவி வழங் கவும் முன்வந்தன. வடக்கு, கிழக்கு பகுதிகளின் அபிவிருத்திப் பணிகளுக் காக சர்வதேச கண்காணிப்பில் நிதியொன்றும் உருவாக்கப்பட்டது. அதனை நிர்வகிக்கும் பணி சாதாரண வங்கியொன்றுக்கு அல்லாது உலக வங்கிக்கே வழங்கப்பட்டது.

எனவே, தமிழீழத்தை மனதில் வைத்துக் கொண்டிருந்த புலிகள் இந்த விடயத்தில் நேர்மையாக நடந்து கொண்டிருந்தால் இன்று நாட்டின் நிலைமை வித்தியாசமானதாகவே இருக்கும்.

தென் ஆபிரிக்கவின் உண்மையறி யும் ஆணைக்குழுவானது அந் நாட்டில் இடம்பெற்ற உள்நாட்டு போரின் போது இடம்பெற்ற படுபாதகச் செயல்களுக்கு இரு சாராரும் பொறுப்பை ஏற்று நல்லிணக்கத்தை ஏற்படுத்திய பொறிமுறையாகும். இலங்கையில் இடம்பெற்ற போரின் போது இடம்பெற்றதாகக் கூறப்பபடும் மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்பானவர்களை கண்டு பிடித்து, அவர்களை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என்பதே ஐ.நா. மனித உரிமை பேரவையில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட மூன்று பிரேரணைகளினதும் நோக்கமாகும்.

ரமபோசவின் இலங்கை விஜயத் தின் பின்னர், அவர் தமது நடவடிக்கை களைப் பற்றி தாம் தொடர்ந்தும் இந்தியாவுக்கு தெரிவிப்பதாக கூறிய தாக, சமபந்தன் இந்து பத்திரிகையிடம் கூறியிருந்தார். உண்மையறியும் ஆணைக்குழு தொடர்பான அனுபவங் களை இலங்கையுடன் பகிர்ந்து கொள்வது தான் தென் ஆபிரிக்க முயற்சியின் நோக்கம் என்றால் ரமபோச அரசாங்கம் ஏன் அதனை இந்தியாவுக்கு அறிவிக்க வேண்டும்?


இலங்கையில் மாகாண சபை முறை யில் ஏதாவது மாற்றம் ஏற்படுவதாக இருந்தால் மட்டுமே இந்தியா கவனம் செலுத்தும். ஆனால், இலங்கையில் போரிட்ட தரப்பார் பொறுப்புக்கூறும் பொறிமுறையொன்றை அமைத்துக் கொண்டால் இந்தியா அதில் தலையிடப் போவதில்லை. அவசியமும் இல்லை.

தமது முயற்சி இந்திய முயற்சிகளுக்கும் ஜெனிவா பிரேரணைக்கும் இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக, சில மேற்கத்தேய நாடுகள் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கும் ஒத்துப் போகக் கூடியதாகும் என்று ரமபோச தம்மிடம் கூறியதாக முதலமைச்சர் விக்னேஸ்வரன் இந்து பத்திரிகையிடம் கூறியிருந்தார்.

ரமபோசாவின் முயற்சி உண்மையறியும் ஆணைக்குழு தொடர்பானதாக இருந்தால் அது ஜெனிவா பிரேரணையோடு ஒத்துப் போகலாம். ஆனால், அது இந்திய முயற்சியோடு எவ்வாறு ஒத்துப் போக முடியும்? இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த மேற்கத்திய நாடுகள் மேற்கொள்ளும் முயற்சிகளோடு எவ்வாறு அது ஒத்துப் போகும்? மேற்கத்தேய நாடுகள் அவ்வாறான முயற்சிகளில் ஈடுபடுகின்றனவா?

வாரம் ஒரு பாடசாலை

# யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி





## பாட இணைபாட விதான செயற்பாடுகளில் முன்னிலை பெறும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

கவிதை, சித்திரப்போட்டி முடிவுகள் - 2013 சித்திரப்போட்டி
து.துஜீபன் - திறமைச்சான்றிதழ், சி.துஷாகரன் - திறமைச்சான்றிதழ், சி.மோகன ராசா - திறமைச் சான்றிதழ், இ.தனுசன் - திறமைச் சான்றிதழ்.

யா/ ஸ்கந்தவரோதயாக்கல்லூரி விஞ்ஞான மன்றம் நடாத்திய கல்லூரிகளுக்கிடையிலான விஞ்ஞான போட்டி முடிவுகள் - 2014
விஞ்ஞான வினா விடைப்போட்டி - தரம் 7 ஜெ.நிக்சன் - 1 ஆம் நிலை, தரம் 7 ரீ.பிருந் தன் - 3 ஆம் நிலை, தரம் 11 ச.இசையரசன் - 2 ஆம் நிலை.

| | தேசியம் | மாகாணம் | மாவட்டம் | வலயம் | கோட்டம் |
|---|---|---|---|---|---|
| 1) கரப்பந்து (ஆண்கள்) | | | | 13/3 | |
| 15 வயது | | | | 2 | 1 |
| 17 வயது | | | | 2 | 1 |
| 19 வயது | | 2 | 2 | 1 | 1 |
| 2) கரப்பந்து (பெண்கள்) | | | | | |
| 15 வயது | | | | 2 | |
| 17 வயது | | | | 3 | |
| 19 வயது | | | | 3 | |
| வலைப்பந்து (பெண்கள்) | | | | | |
| 15 வயது | | | 4 | 2 | 1 |
| 17 வயது | | | | 3 | 1 |
| 19 வயது | | | 2 | 2 | 1 |


விஞ்ஞான பேச்சுப்போட்டி
த.பேணுதர்சிகா - 3 ஆம் நிலை,

சதுரங்கம் - 2013
15 வயதுப் பிரிவு (பெண்கள்) வலயம் 2 ஆம் இடம் மாகாணம் 8 ஆம் இடம்) அ.நவோமியா, வ.டிலானி, ர.அகிலா, அ.சுகன்யா, சி.பானுஜா, இ.வது சனா, க.சர்மினி, த.சங்கவி, வி.தர்சிகா.

2014 சதுரங்கம் 15 வயதுப்பிரிவு (பெண்கள்)
வலயம் (3 ஆம் இடம்), வி.தர்சிகா, வ.டிலானி, அ.நவோமியா, சா.லிவின்சிகா, க.சர்மினி, இ.வதுசனா, க.பிரியங்கா

சதுரங்கம் 15 வயதுப்பிரிவு (ஆண்கள்)
வலயம் 3 ஆம் இடம், ர.லினுஜன், ர.சிலோஜன், யோ.யனுசன், கு.டர்சன், கி.கயூரன், கு.யானுசன், க.துவாரகன்

சண்டிலிப்பாய் கோட்ட முடிவுகள்
21, 22 மார்ச் 2014
100 மீற்றர் ஓட்டம் கீழ்ப்பிரிவு 13 வயது
டிஜோயன் - 3 ஆம் இடம்.
குண்டு போடுதல் கீழ்ப்பிரிவு 15 வயது
ஆ.ஆகாஸ் - 1 ஆம் இடம்.






தட்டு கீழ்ப்பிரிவு
அ.ஆகாஸ் - 3 ஆம் இடம்
ஈட்டி அ.ஆகாஸ் - 3 ஆம் இடம்
200 மீற்றர் ஓட்டம் கீழ்ப்பிரிவு 15 வயது
அயந்தன் - 2 ஆம் இடம்
ஈட்டி எறிதல் 15 வயது
ர.ஜீவிதா - 1 ஆம் இடம்
400 மீற்றர் ஓட்டம் 15 வயது
வி.சாளினி - 1 ஆம் இடம்
200 மீற்றர் ஓட்டம் 15 வயது
வி.சாளினி - 3 ஆம் இடம்
ஈட்டி எறிதல் 15 வயது
பா.தனுஜா - 2 ஆம் இடம்
நீளம்பாய்தல் கீழ்ப்பிரிவு 17 வயது
த.புருசோத்தமன் -2 ஆம் இடம்
குண்டு போடுதல் கீழ்ப்பிரிவு 19 வயது
ஜெ.கரிதாஸ் - 3 ஆம் இடம
முப்பாய்ச்சல் கீழ்ப்பிரிவு 21 வயது
சி.விபுசன் - 1 ஆம் இடம்
நீளம் பாய்தல் 21 வயது
சி.விபுசன் - 2 ஆம் இடம்
கீழ்ப்பிரிவு 13 4 400 - 1 ஆம் இடம்
கீழ்ப்பிரிவு 17 4 400 - 3 ஆம் இடம்
பதிவுசெய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான வலைப்பந்தாட்ட இறுதிப்போட்டி
கூடைப்பந்து - 1 ஆம் இடம்
12.05.2014, 18.05. 2014, 09.05.2014
வலயமட்ட மெய்வல்லுநர் போட்டி - 2014
கீழ்ப்பிரிவு 15 வயது
100 மீற்றர் செல்வி.வி.சாளினி - 1 ஆம் இடம்
200 மீற்றர் செல்வி.வி.சாளினி - 1 ஆம் இடம்
400 மீற்றர் செல்வி.வி.சாளினி - 1 ஆம் இடம்
செல்வி.வி.சாளினி 15 வயதின் கீழ்பிரிவில் பெண்களுக்கான சுவட்டு வீராங்கனையாக தெரிவுசெய்யப்பட்டார்.
கீழ்ப்பிரிவு 15 வயது தட்டு - செல்வன்.அ.ஆகாஷ் (2 ஆம் இடம்) குண்டு போடுதல் செல்வன். அ.ஆகாஷ் (3 ஆம் இடம்).
கீழ்ப்பிரிவு 19 முப்பாய்ச்சல் ரி.பிரதீபா (2 ஆம் இடம்) மாகாணமட்டம் கீழ்ப்பிரிவு 15 வயது குண்டு போடுதல் (3 ஆம் இடம்).

மனித மேம்பாட்டுக்கல்வி அன்புவார கட்டுரை,

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை
புள்ளிப்பகுப்பாய்வு 2010, 2011, 2012, 2013




கட்டுரை
பிரிவு 3 பானுஜா சிறிதரன் (3 ஆம் நிலை)
இலக்கணம் பிரிவு 5 லக்சாந்தி இரட்ணபாலா(2ஆம் நிலை),
திறனாய்வு
பிரிவு 5 துவாரகா முருகமூர்த்தி - 2 ஆம் நிலை
குறுநாடக ஆக்கம்
பிரிவு 4 பேணுதர்சிகா தர்மலிங்கம் - 1 ஆம் நிலை
குறுநாடக ஆக்கம்
பிரிவு 5 தேனுஜா சவரியப்பு - 3 ஆம் நிலை
சிறுகதையாக்கம்
பிரிவு 4 தங்கவேல் புருஷோத்தமன் -.2 ஆம் நிலை
சிறுகதையாக்கம்
பிரிவு 5 நிஷாந்தி ஆதிமூர்த்தி - 2 ஆம் நிலை
02.05.2014 பாவோதல்
பிரிவு 3 நவோமியா அருட்குமார் - 2 ஆம் நிலை
பாவோதல
பிரிவு 4 நித்தியானந்தினி கணேசமூர்த்தி - 2ஆம் நிலை
நடனம் (தனி)
பிரிவு 5 பானஜா ஜெகதீஸ்வரன் 2 ஆம் நிலைஇசைகுழு (II)
பிரிவு 5 யா சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி - 3 ஆம் நிலை
தமிழ் அறிவு வினாவிடை
பிரிவு 5 யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி - 1ஆம் நிலை
07.5.2013 கோட்டமட்ட கணித புதிர்ப்போட்டி-2013
தரம்-6 ஜெ.நிக்ஷன் 1 ஆம் நிலை, தரம் 7 ர.சிவலோஜன் 1 ஆம் நிலை, தரம் 8 ர.அகிலா 1 ஆம் நிலை, தரம் 9 க.அபர்ணா 3 ஆம் நிலை.
27.05.2013 வலய மட்டம் கணித புதிர்ப்போட்டி
தரம்-6 ஜெயக்குமார் நிக்ஷன் 1 ஆம் நிலை, தரம் 8 அகிலா ரவிதாஸ் 3 ஆம் நிலை, தரம் 9 அபர்ணா கருணாகரன் 1 ஆம் நிலை.
01.05.2014 கோட்ட மட்ட கணித புதிர்போட்டி 2014
தரம் 6 வி.விதுஷன் 1 ஆம் நிலை, தரம் 7 ஜெ.நிக்சன் 1 ஆம் நிலை, தரம் 8. ஆர்.நிருபனா 1 ஆம் நிலை, தரம் 9 ர. அகிலா 1 ஆம் நிலை, தரம் 11 ஜெ.மேனுஜா 2 ஆம் நிலை.
05.06.2013 சமூக விஞ்ஞானப் போட்டி முடிவுகள் 2013 வலய மட்டம் தரம் 12,13
வகை 4 ந. டிலக்சன் 3 ஆம் நிலை
சமூக விஞ்ஞானப் போட்டி முடிவுகள் 2014 வலய மட்டம தரம் 6
வகை 4 பி.நிலக்ஷன் 2 ஆம் இடம், ஏ. பிரதீப் 3 ஆம் இடம்

விவசாய விஞ்ஞானம்
வலயமட்ட விவசாய விஞ்ஞான ஆ
முடிவுகள் 2014 செல்வன் வசந்தன் டிலக்ஷன 5 ஆம் நிலை
நாடகம் ஆங்கிலமொழி போட்டி - 2014
எழுத்துப்பரீட்சை -
தரம் 11 நிறோஜினி ஜெயக்குமார் 3 ஆம் இடம், தரம் 12 நிவேதிகா மனோகரன் 1 ஆம் இடம், தரம் 13 விஜிதா அன்ராசா 3 ஆம் இடம்.




எழுத்துப்பரீட்சை
தரம் 12 டன்சிகா பாஸ்கரன் - 3 ஆம் இடம்.
தயாரிப்பு எழுத்துப்பரீட்சை தரம் 6 பவிதரன் சோதி நாதன் - 1 ஆம் இடம்.
தனிநாடகம் தரம் 11 வினிஜா சண்முகவடிவேல் - 3 ஆம் இடம்
ஒறரோரி இம்புரோம் தரம் 12 வயது
கிருத்திகா ரவிஸ்வரன் - 2 ஆம் இடம்
ரோலி விளையாட்டு தரம் 6 வயது
இந்துக்கல்லூரி - 3 ஆம் இடம்
நாடகம் பாலர்பிரிவு - யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி - 2 ஆம் இடம்
மேல்பிரிவு - யா /சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி - 2 ஆம் இடம்
திறந்த பிரிவு நாடகம் - யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி - 1 ஆம் இடம்
த. பேனுதர்சிகா, த.சுபாசினி, பு.யூலியல், ஜெ.தமஸ்வினி, ஹ.லக்சனா, ஜெ.ஜனார்த்தனி, க.டுக்சனா, ச.விதுசன், கி.டனுலக்சா, ஆ.பிரதீப், த.புருஷோத்தமன், கை.யசிகரன், க.கார்த்தீபன்

க.பொ.த (சா.த) புள்ளிப்பகுப்பாய்வு 2013



க.பொ.த உயர்தர புள்ளிப்பகுப்பாய்வு 2010, 2011, 2012, 2013



# தம்பாலை முதலியார் வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

அச்சுவேலி தம்பாலை சேனாதிராஜ முதலியார் வீதி நீண்டகாலமாக புனரமைப்பின்றிக் காணப்படுவதாக அந்த வீதியைப் பயன்படுத்துவோரால் கவலை தெரிவிக்கப்பட்டுளளது.

குறித்த வீதியை பாதசாரிகள் மற்றும் ஏனைய வாகனப் பயணிகள் அன்றாடம் பயன்படுத்தி வருவதால் தாம் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகவும் அவர்கள தெரிவிக்கின்றனர். தற்போது குடாநாட்டில் உள்ள எல்லா வீதிகளும் காப்பெற் மயமாகப் புனரமைக்கப்பட்டு வருவதாக கூறும் இப்பகுதி மக்கள் வாழ்மக்கள் இந்த வீதி மட்டும் புனரமைக்காது விட்டுள்ளமை தமக்கு வேதனை தருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதிதிருத்தப் பணிகள் தொடர்பில் ஏற்கனவே பல முறை ஊடகங்கள் வாயிலாக தெரியப்படுத்தியும் எவரும் இது தொடர்பில் கவனம் செலுத்தவில்லை எனவும் அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்ட தரப்பினர் குறித்த வீதியை நேரடியாகச் சென்று பார்வையிட்டு புனரமைத்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(85)

# மானிப்பாய் பிரதேசசபைக்கு உபதவிசாளர் நியமனம்

(மானிப்பாய்)

நீண்ட பல மாதங்களின் பின்னர் வலி.தென் மேற்கு மானிப்பாய் பிரதேசசபைக்கு உபதவிசாளராக சின்னத்துரை மகேந்திரன் உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்கவுள்ளார்.

பிரதேச சபையின் தவிசாளர் அ.ஜெபநேசன் பதவியில் இருந்து விலகியதையடுத்து நீண்ட இழுபறியின் பின்னர் உபதவிசாளராக இவர் பதவியேற்கவிருக்கிறார். வினைத்திறனாக செயலாற்றக் கூடியவர் என்ற வகையில் தமிழரசு கட்சி சின்னத் துரை மகேந்திரனின் பெயரை ஏகமனதாக நியமித்து இருந்தது.

அவ்வேளையிலும் பேராசிரியர் சி.க.சிற்றம்ப லம, சி.மகேந்திரன் உபதவிசாளராக வருவதை கடுமையாக எதிர்த்திருந்தார்.

எதிர்வரும் 21ஆம் திகதியளவில் மானிப்பாய் பிரதேச சபையின் உபதவிசாளராக சின்னத்துரை மகேந்திரன் புதிய பொறுப்பை ஏற்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை பிரதேச சபையின் கௌரவ சபையினர் வேறொருவரது பெயரை உபதவிசாளராக சிபார்சு செய்ததாக தெரியவருகிறது. (92)

# விண்ணப்பம் கோரல்

காணி அபிவிருத்தி அமைச்சின் நிலஅளவைத் திணைக்களத்தில் சட்டஅலுவலர் பதவிக்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

21 - 45 வயதிற்குட்பட்ட சிறந்த நடத்தை உடையவராக இருப்பவர்கள் விண்ணப்பிக்கலாம்.

கல்வித்தகைமை பல்கலைக்கழகத்தில் சட்டத் துறையில் பட்டம் பெற்றிருப்பதுடன் உயர்நீதிமன்றில சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் பெற்றிருத்தல் வேண்டும். உயர்நீதிமன்றில் மூன்று வருட அனுபவமும் நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றக்கூடியளவு உடல்,உள நலமுடையவர்களாகவும் இருத்தல அவசியமாகும்.

பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியதிற்குட்பட்டதுமாகும். நேர்முகப் பரீட்சையில் மேலதிக கல்வித்தகைமை, தொழில்சார் தகைமை அனுபவம் . கணனிஅறிவு, ஆங்கிலமொழித்தேர்ச்சி ஆகியவை பரிசீலிக்கப்படும்.


விண்ணப்பங்களை எதிர்வரும் 04.08.2014 இற்கு முன்னர் நிலஅளவையாளர்நாயகம், நில அளவைத்திணைக்களம் 150,கிருலவீதி, நாரா ஹேன்பிட்டிய, கொழும்பு - 05, என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடுதல் அவசியமாகும். (105)

## பார்த்தீனிய ஒழிப்பு

ஆவரங்கால் மேற்கு பகுதியில் கிராம சேவையாளர், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பொது மக்கள் என பலதரப்பினரும் இணைந்து பார்த்தீனிய ஒழிப்பு நடவடிக்கையில் கடந்த செவ்வாய்க்கிழமை ஈடுபட்டனர்.. (85)

வெள்ளி நற்சிந்தனை...



# பிரம்மஞானம்

•ஒருவர் பிறவியில் பிராமணராக பிறந்திருக்கலாம ஆனால் பிரம்ம ஞானம் பெற அவர் முயற்சி செய்யாதவராக இருந்தால் அவரை பிராமணன என்று இந்து மதசாஸ்திரங்கள் ஏற்றுக் கொள்வதில்லை .

மாறாக ஒருவர் சாத்திரியராகவோ வைசியராகவோ பிறந்திருந்தாலும் பிரம்ம ஞானம் பெறுவாரானால், அவரைப் பிராமணன் என்றே இந்து மதம் அங்கீகரித்திருக்கிறது.

விசுவாமித்திரர் பிறவியில் சத்திரியர், அவர் பிரம்மஞானம் பெற விரும்பினார். தம்மை எலலோரும் பிரம்மரிஷி என மதிக்க வேண்டும். என்ற நினைத் தார். எனவே அவர் காடு சென்ற கடும் தவம் புரிந்தார். ஒருநாள் அவருக்கு தான் பிரம்ம ஞானம் எய்திருப்பது போன்ற எண்ணம் ஏற்பட்டது. உடனே அவர் வசிட்டரிடம் சென்று வணங்க நினைத்தார்.

அந்தக் காலத்தில் ஒருவரை ஒருவர் வணங்குவதில் பல கருத்துக்கள் இருக்கும்.

ஒருவர் பிரம்மஞானம் பெற்ற பிரம்ம ரிஷியை வணங்கும் போது,வணங்குபவர் தமக்குச் சமமாக பிரம்மஞானம்பெற்றிருந்தால் மட்டும் இவரும் வணங்குவார்: அல்லாவிழன் கையை உயர்த்தி ஆசீர்வாதம மட்டுமே செய்வார்.

வசிட்டர் தம்மை வணங்கினால் தாமும் பிரம்ம ஞானம் பெற்று விட்டதை உறுதிப்படுத்தலாம். என எண்ணிக் கொண்டு சென்று விசுவாமித்திரர் வசிட்டரை வணங்கினார். ஆனால் பதிலுக்கு வணக்கத்திற்குப் பதிலாக ஆசீர்வாதம் தான் கிடைத்தது.

எனவே மனம் நொந்த நிலையில் அவர் தம் ஆசிரமம் திரும்பினார். மீண்டும் தவத்தில் ஈடுபட்டார்.

சில காலம் சென்றது. விசுவாமித்திரரின் இஷ்ட தெய்வம் ஒருநாள் அவர் முன்தோன்றி , "விசுவாமித்திரர்! நீ போய் வசிட்டரை வணங்கு அவர் மீண்டும் உன்னை வணங்காவிட்டால், உடனே அவரது தலை சுக்கலாக வெழக்க வேண் டும் என்று சாபம் கொடுத்து விடு " எனறு கூறி மறைந்து விட்டது.

விசுவாமித்திரர், வசிட்டரிடம் வந்தார். வணங்கினார் ஆனால் பதில் வணக்கம் கிடைக்கவில்லை விசுவாமித்திரருக்கு ராஜோ குணத்தின் வேகம் பொங்கிப்பெருகி பூதாகரமாக வழவெடுத்து வெழக்கத் தயாராயிற்று. அவரது இஷ்ட தெய்வம் கூறியதும் நினைவிற்கு வந்தது.

ஆனால் தீழரென்று அவரிடம் ஒரு மாற்றம் அவர் அவ்வளவு காலம் செய்த தவஆற்றல் முழுவதும் நல்ல எண்ணங்களாக எழுந்தன. வசிட்டர் என்னை வணங்காவிட்டால் என்ன? நான் ஏன் கோபப்பட வேண்டும்! கோபம் பாவத்திற்கு வழிகாட்டி அல்லவா! கோபத்தால் புத்தி தடுமாறுகிறது. புத்தித்தடுமாற்றத்தால் எல்லோரையும சபிக்க நினைத்த சண்டாளனாக, பாவியாக நான சிறிது நேரம் மாறிவிட்டேன்! கோபம், பொறாமை மற்றவர்களுக்கு தீங்கு நினைப்பது போன்ற தீய எண்ணங்கள் என் உள்ளத்தில் உடனே எழுந்து விட்டனவே! இவ்வளவு காலமும் தவம் செய்தும் பயனில்லையே என்று நினைத்து மீண்டும் தவம் செய்யப் புறப்பட்டார்.

விசுவாமித்திரர் இரண்டழதான் நடந்திருப்பார் விசுவாமித்திரரே என்று வசிட்டர் அழைப்பது கேட்டுத் திரும்பினார். வசிட்டர் விசுவாமித்திரரை வணங்கி நின்றார்.

விசுவாமித்திரர் பிரம்மஞானம் பெற்று விட்டார். அல்லவா!

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

# பதிவிருக்கப் பெட்டகம்

அடுக்குமாழ விபத்து பற்றி ஒரு பதிவு
அப்பழயே மழ திருமண போட்டோவுக்கு
ஒரு லைக்
விலைவாசி உயர்வுக்கு
கொஞ்சம் கண்டனம்
அரசியல்வாதியை பகழ செய்
இளம்பெண்ணிடம்
இன்பொக்ஸில் அரைமணிநேரம்
பூ ப்ரியம் என்று கொஞ்சம் கவிதை
அடுத்த வருடம் வெளிவரவிருக்கும்
நாவல் சிறுகதை பற்றி ஒரு விளம்பரம்
பேக் ஐழயில் அசிங்கமாக திட்டு
பின்னூட்டத்தில் காறி உமிழ்
சமூகத்தை திட்ழ நாலு வரி
சினிமாவை திட்ழ நாலு வரி
மனைவியை கிண்டல்
செய்து நாலு வரி
கொஞ்சம் ஹாஸ்யம்
கொஞ்சம் கோபம்
கொஞ்சம் புரட்சி
கொஞ்சம் பகழ
கொஞ்சம் இலக்கியம்
கொஞ்சம் வேலை
தேநீர்க்குவளையுடன் பேஸ்புக்
நீர்க்கோல வாழ்வு இது
– **விநாயகமுருகன்**

விழுகிறபோது
எழுத உட்கார்ந்தேன்
வெயில் வந்து விட்டது
இந்த வரியின் மேல்
இந்த வரியை விட
அழகாக இருக்கிறது
எழுதாத வரியின் நிழல்.
– **கல்யாண்ஜி**

ஒரு நாடகத்தில்
நழப்பது குறித்து
உங்களுக்கு
தெரிந்திருக்கலாம்...
நாடகமே
நழப்பது குறித்து
உங்களுக்குத் தெரியுமா?...
நழகர்களின் பார்வையில்
ஒவ்வொரு நாடகமும்
நழக்கத்தான் செய்கிறது...
நழகன்
நாடகத்தின் நழப்பில்
மயங்கி விடுகிறான்...
நாடகத்தின் போக்கை
உண்மை என்று
நம்பிவிடுகிறான்...
இங்ஙனம்,
நழக்னை ஏமாற்றுவதில்
நாடகங்கள்
எப்போதுமே தோற்பதில்லை....
– **ராம்பிரசாத்**

எட்டுக்காலியும் நானும் ஒன்று
இருவரும் பிழைப்பது
வாய் வித்தையால்
எட்டுகாலிக்கு எச்சில்
எனக்குப்பொய்
இருவரும் வலைபின்னுகிறோம்
அது எச்சிலை கூட்ழ
நான் உண்மையை குறைத்து
எட்டுக்காலி வலை
ஜீவித சந்தர்ப்பம்
எனது வலை சந்தர்ப்ப ஜீவிதம்
எட்டுக்காலிக்கு தெரியும்
எச்சிலின் நீளமும் ஆயுளும்
எனக்கும் தெரியும்
பொய்யின் தடுமாற்றமும் அபத்தமும்
எட்டுக்காலியின் நோக்கம் தக்கவைத்தல்
எனவே
வலை – ஒரு பாதுகாப்பு
எனது தேவை தப்பித்தல்
எனவே
பொய் – ஒரு பாதகம்
வாய்வித்தைக்காரர் இருவரும்
எனினும் எட்டுக்காலி
என்னைவிட பாக்கியசாலி
சொந்த வலையில்
சிக்குவதில்லை அது
– **சுகுமாரன்**

அந்தி வானத்தில் தோன்றும்
முதல் விண்மீன்
தனிமையிலிருந்து
வெளியேறி
உன் கண்ணுக்குள்
குதிக்கிறது!
– **மகுடேசுவரன்**

எனது ஒரு கவிதை தானே,
உங்கள் முன் நீட்ழனேன்
அதை வாங்கிய
நீங்கள் வாசிக்கலாம்,
விமர்சிக்கலாம் அல்லது
நான் நகர்ந்தபின்
வீசியெறிந்து விடலாம்...
என்ன செய்து விட முழயும்
அந்த கவிதையால் உங்களை.
அது ஒரு கவிதை தான்
என உங்கள் மனதில் ஏற்படுத்திய
சிறு சலனத்தை தவிர.
– **மணிபாரதி**

கண்ணாழ முன் நின்று
உயிர்பிரியும் அடர்த்தியான வலியுடன் குருதி வழய
உரித்தெடுக்கிறான் ஒவ்வொரு துண்டாக
கிழித்தெடுக்கும் ஒவ்வொரு துண்டும்
மீண்டும் உயிர்பெற்று உடனே வளர்கிறது
விடாமல் வெறிகொண்டு பிய்த்தெறிகிறான் கோமாளி
எப்போதும் புன்னகைக்குமொரு முகமூழயை.
– **அதிஷா**

திருவாளர் விமர்சகர் பாராட்டுகிறார்
திருவாளர் படைப்பாளி புன்னகைக்கிறார்.
"உன் எழுத்தால்தான் இலக்கியம்
ஓர் அங்குலம் வளர்ந்திருக்கிறது" என்கிறார் விமர்சகர்.
நகவெட்ழயில் தன் நகத்தைச் சீர்படுத்தியபழ
மீண்டும் புன்னகைக்கிறார் படைப்பாளி.
எதிரிகளைப் பழி தீர்ப்பதற்காக
அவசர ஆத்திரமாய்
ஒரு கட்டுரை எழுதுகிறார் திருவாளர் விமர்சகர்.
கட்டுரைக்கு மேல் 'நகைச்சுவை' என்று தலைப்பிடுகிறார்
திருவாளர் படைப்பாளி.
திருவாளர் விமர்சகர் நகர்ந்துவிடுகிறார்
அப்பாலிருக்கும் படைப்பாளியும் நகர்கிறார்.
இடையிலிருக்கும்
நிலைக்கண்ணாழயை என்ன செய்ய?
– **சுகுணா திவாகர்**

# அரச மொழி பெயர்ப்பாளர் சேவை பரீட்சை பெறுபேறுகள் வெளியீடு

அரச மொழிபெயர்ப்பாளர் சேவையின் முதலாம் தரத்துக்கு அதிகாரிகளை இணைத்துக் கொள்வதற்காக பரீட்சைத் திணைக் களத்தினால் நடாத்தப்பட்ட 2012-(2014) தடை தாண்டில்பரீட்சை யின் பெறுபேறுகள் வெளியா கியுள்ளன.

இந்த பெறுபேறுகள் கடந்த 11 ஆம் திகதி பொதுநிர்வாக உள் நாட்டலுவல்கள் அமைச்சின் ஒன்றிணைக்கப்பட்ட சேவை பணிப்பாளர் நாயகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது. அவ்வாறே இலங்கை அரச நூலக பொறுப்பாளர் சேவையின் III ஆவது தரத்துக்கு ஆட்களை சேர்த்துக்கொள்வதற் கான 2013-(2014) பரீட்சை பெறுபேறுகளும் வெளியாகியுள்ளது. இப் பெறுபேறுகளும் பொது நிர் வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் ஒன்றிணைக்கப்பட்ட சேவை பணிப்பாளர் நாயகத் துக்கே அனுப்பி வைக்கப்பட்டுள் ளன

இதேவேளை, இலங்கை தகவல் தொழில் நுட்ப சேவை யின் II ஆம் தரத்து அதிகாரிக ளுக்கான தடைதாண்டல் பரீட்சை யின் 2013(2014) பெறுபேறுக ளும் பொது நிர்வாக உள்நாட்ட லுவல்கள் அமைச்சின் செயலாள ருக்கும், அரச சேவை ஆணைக் குழு, மேல், தென் ,வடமேல், மத்திய, வட மத்திய ,ஊவா, சப்ரகமுவ ஆகிய மாகாண சபைகளுக்கும் அனுப்பி வைக் கப்பட்டுள்ளன.

# பிரிவினைவாதத்தைக் கைவிடுவதாக பகிரங்கமாக ஒப்புக்கொள்ள வேண்டும்

## கூட்டமைப்பை கோருகிறது ஹெலஉறுமய

(கொழும்பு)

**பிரிவினைவாதத்தைக் கைவிடுவதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சர்வதேச ரீதியாகவும் உள்நாட்டு மக்கள் முன்னிலை யிலும் பகிரங்கமாக ஒப்புக் கொள்ள வேண்டுமென ஜாதிக ஹெலஉறுமய கோரிக்கை விடுததுள்ளது.**



இது தொடர்பாக கட்சியின் மேல் மாகாணசபை உறுப்பினர் நிசாந்த ஶ்ரீ வர்ணசிங்க தெரிவித் துள்ளதாவது,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரிவினைவாதத்தை கைவிட வேண்டுமென ஜாதிக ஹெல உறுமய கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர் நிசாந்த சிறீ வர்னசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பி னர் அரசியல் சாசனத்தின் முன்னிலையில் நாட்டின் ஐக்கியம் தொடர்பில் உறுதிமொழி வழங்கியுள்ளனர்.

இதேபோன்று நாட்டின் ஐக்கியத்தைப் பேணிப் பாதுகாப்பதாக பொதுமக்க ளிடமும் குறிப்பிட வேண்டும்.

ஐக்கிய இலங்கை என்ற கோட்பாட்டை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நீதிமன்றில் ஏற்றுக்கொண்டுள்ளது. எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் இலங்கை தமிழரசுக் கட்சி ஆகியவற்றின்
கைகள் தனி இர
மொன்றை நோ
அமைந்துள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைபபு நாட்டின் ஐக்கியத்தை சீர்குலைக் கும் வகையில் செயற்பட்டுள்ள தாக தெரிவித்து வழக்குத் தொடர்ந்த அனைவருக்கும் நன்றி பாராட்டுகின்றோம்.

நீதியின் முன் அனைவரும் சமன் என பிரதம நீதியரசர் மொஹான பீரிஸ் வெளியிட்ட கருத்து வரவேற்கப்பட வேண்டியது என நிசாந்த சிறி வர்னசிங்க தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பிற்கு எதிராக நீதிமன்றில் தொடுக்கப்பட்டிருந்த வழக்குத் தொடர்பில் அவர் இந்தக் கருத் துக்களை வெளியிட்டுள்ளார்.

# உடன் தூக்கிலிடுமாறு உக்ரைன் பெண் கோரிக்கை




(கொழும்பு)

நாவலையில் வீட்டுப்பணியா ளரான டெய்சி மனோகரி மற்றும் அவருடைய குழந்தையை 2010 ஆம் ஆண்டு பெப்ரவரி 23 ஆம் திகதி கொலை செய்தனர் என்ற குற்றச்சாட்டில் உக்ரைன் நாட் டைச் சேர்ந்த கணவன் மனை வியை குற்றவாளிகளாக இனங் கண்ட கொழும்பு விசேட மேல் நீதிமன்றம் அந்த ஜோடிக்கு நேற்று முன்தினம் மரணதண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

நீதிபதிகளான தேவிகா டி லிவேரா தென்னகோன் மற்றும் நிமல் நம்புவசனம் ஆகியோர் கொண்ட நீதிபதிகள் குழு முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள் ளப்பட்ட போதே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

தீர்ப்பு வாசிக்கப்பட்டதும், தன்னை சிறைக்கு அனுப்பாமல் உடனடியாகத் தூக்கில் போடு மாறு உக்ரைன் பெண்ணான, யன்னா பிறிஸ்யானா கோரிக்கை விடுத்தார்.

## கண்டுபிடிக்கப்பட்டது வெள்ளை நாகம்



தெகிவளை மிருகக்காட்சிச் சாலையில் காணாமற் போன வெள்ளைநாகம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. துணி ஒன்றில் சுற்றியபடி மிருகக் காட்சி சாலைக்குள் வீசப்பட்டிருந்த நிலையில் இது மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# அமைச்சுக்களின் ஊழியர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் இரத்து

(கொழும்பு)

அமைச்சர்கள் மற்றும் பிரதிய மைச்சர்களின் தனிப்பட்ட ஊழியர்களுக்கு வழங்கப்பட டுள்ள சலுகைகளைக் குறைப்ப தற்கு பொதுநிர்வாக உள்நாட்ட லுவல்கள் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்ப டுகின்றது.

தனிப்பட்ட ஊழியர்களுக்கு வழங்கப்படும் வாகனங்களைத் திரும்பப் பெறும் வகையிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது.

இது தொடர்பான சுற்றறிக்கை யும் அமைச்சுக ளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அந்த சுற்றறிக்கையில், அமைச் சர் ஒருவரின் பிரத்தியேக செய லாளர் மாத்திரமே அரசாங்க வாகன வசதிகளுக்கு உரித்தா னவராவார் என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

இதன்படி பிரதியமைச் சர்களின் பிரத்தியேக செயலா ளர்கள், இணைப்பு அதிகாரிகள், பொதுசன உறவு அதிகாரிகள், அமைச்சுக்களின் இணைப்பு செயலாளர்கள் ஆகியோருக்கு வாகன வசதி வழங்கப்படாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சிரேஸ்ட பொலிஸ அதிகாரிகளுக்கும் வாகன வசதிகள் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## இணையக் கண்காணிப்புப் பிரிவினரால்

# 30 பாலியல் குற்றவாளிகள் கண்டறிவு சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையின் தேசிய சிறுவர பாதுகாப்பு அதிகார சபையின் இணைய கண்காணிப்பு பிரிவி னால் 30 பாலியல் குற்றவாளிக ளும் அந்த குற்றங்களுடன் தொடர்புடைய 300 பேரும் கண்டறியப்பட்டுள்ளதாக தெரி விக்கப்பட்டுள்ளது.

இவர்கள் சமூக வலைய மைப்புகளின் மூலம் குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் அனோமா திஸாநாயக்க தெரி வித்துள்ளார்.

தமது அதிகாரசபை இந்த குற்றங்கள் தொடர்பில் 7 பேரைக் கைது செய்துள்ளதாகவுட் அனோமா குறிப்பிட்டுள்ளார்.

இவர்களுக்கு எதிராக சட்ட நடைமுறைகள் பின்பற்றப்படுவ தாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சுமார் 2500 பேர் வரை பாலியல் தொடர்பான இணை யங்களுடன் தமது கணக்கு களை வைத்திருப்பதாகவும் அனோமா தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் இணைய குற்றவாளிகள் தொடர்பில் சிறுவர் பாதுகாப்பு சட்டத்தின் படி நடவடிக்கைகளை மேற் கொள்ளவுள்ளதாகவும் அனோமா திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

# கோத்தாவை சந்தித்தார் இந்திய விமானப் படைத் தளபதி.



இலங்கைக்கு பயணம் மேற் கொண்டுள்ள, இந்திய விமானப் படைத் தளபதி எயர் சீவ் மார்சல் அரூப் ராஹா, கொழும்பில் நேற்று முன்தினம் பாதுகாப்புச் [illegible] கோத் தாபய ராஜபக் சவை சந்தித்து பேச்சு நடாத்தி யுள்ளார்.

உயர்மட்ட அதிகாரிகள் குழு வுடன் கொழும்பு சென்ற இந்திய விமானப்படைத் தளபதி, நேற்று முன்தினம் காலை இலங்கை விமானப்படைத் தலைமை யகத்துக்குச் சென்றிருந்தார். அங்கு அவருக்கு அணி வகுப்பு மரியாதை அளிக்கப்பட் டதுடன், இலங்கை விமானப் படைத் தளபதி எயார் மார்சல் கோலித குணதிலக உள்ளிட்ட உயர்மட்ட அதிகாரிகள் குழுவினரைச் சந் தித்து பேச்சும் நடாத்தினார்.

இதன் பின்னர் பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக் சவை பாதுகாப்பு அமைச்சில், எயர் சீவ் மார்சல் அரூப் ராஹா சந்தித்து பேச்சு நடத்தினார். இருதரப்பு இராணுவ ஒத்து ழைப்பு மற்றும் பரஸ்பர ஈடு பாடுள்ள விவகாரங்கள் குறித் தும் இந்தச் சந்திப்பின் போது பேசப்பட்டுள்ளது.

# ஐ.நா. விசாரணையில் சாட்சியம் பத்துப் பேர் சுவிஸ் பயணம்



(கொழும்பு)

இலங்கை தொடர்பிலான ஐக்கிய நாடுகள் மனித உரி மைகள் பேரவையின் விசார ணையில் பங்கேற்பதற்காக பத்துப் பேர் சுவிட்சர்லாந்திற்கு விஜயம் செய்துள்ளனர்.


ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணை யாளர் நவநீதம்பிள்ளையினால் நிறுவப்பட்ட விசாரணைக் குழுவின் பணிகள் உத்தியோக பூர்வமாக ஆரம்பிக்கப்பட் டுள்ளன.

இந்த விசாரணைகளில் சாட்சியமளிக்கும் நோக்கில் பத்துப் பேர் சுவிட்சர்லாந்து சென்றுள்ளதாக சிங்கள பத்திரி கையொன்று செய்தி வெளியிட் டுள்ளது.


பிரிட்டன் தமிழர் பேரவை, உலகத் தமிழர் பேரவை ஆகிய னவே இவ்வாறு பத்துப் பேரை அனுப்பி வைத்துள்ளன.

சாட்சியமளிக்க முன்வந்த வர்கள் வன்னிப் போரின் போது இலங்கையில் இருக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் விசாரண்ணக குழு ஜெனிவாவில் ஐந்து நாட்கள் விசாரணை நடாத்தவுள் ளதாகக் குறிப்பிடப்படுகிறது.


20. 

(i) 52
(ii) 54
(iii) 56


21. 

(i) 08
(ii) 10
(iii) 12


* கீழே தரப்பட்ட கணிதச் செய்கையை அவதானித்து விடை தருக.



எனின்


22.  இன் பெறுமானம் யாது?

(i) 28 (ii) 30 (iii) 02


23.  இன் பெறுமானம் யாது?

(i) 06 (ii) 04 (iii) 02

* கீழே தரப்பட்ட கணிதச் செய்கையை நன்கு அவதானித்து விடை தருக.




24. மேலே தரப்பட்ட கணிதச் செய்கையில் 235 ஐக் குறிக்கும் பட ஒழுங்கு யாது?




இவ் வினாத்தாளுக்குரிய விடைகள் நாளை வெளியாகும்




# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2014


பகுதி - I
1 மணி 15 நிமி

# கல்வி முரசு





* ஆரம்பத்தில் உள்ள உருவை ஒத்த உருவின் கீழ் கோடிடுக.

01. 



02. 



* கீழே தரப்பட்ட படத்தில் வெட்டி அகற்றப்பட்ட இடத்துக்கு வரும் சரியான விடையின் கீழ் கோடிடுக.

03. 



04. 



* தரப்பட்ட அமைப்புக்கு ஏற்ப அடுத்து புள்ளிக் கோட்டில் வரும் விடையின் கீழ் கோடிடுக.

05. 


06. 


* வெற்றுக்கூட்டினுள் வரும் சரியான விடையைக் கண்டு கோடிடுக.

07. 



08. 



* படத்தில் நிறம் தீட்டப்பட்டது எத்தனை சதுரம்

09. 

(i) 6 (ii) 8 (iii) 10

* ஆரம்பத்தில் தரப்பட்ட அமைப்பை மடித்தால் கிடைக்கும் உரு எது?

10. 


11. 


* கீழே தரப்பட்ட கணிதச் செய்கையை அவதானித்து விடை தருக.


```
  P Q R        S T U        U T S
+ P Q R      - R S T      - S R V
  2 4 8        1 1 1        2 2 2
```



12. T இன் பெறுமானம் என்ன? ................................


13. V இன் பெறுமானம் என்ன? ................................

14. கீழே உள்ள படத்தில் இரண்டு பாடத்தை மட்டும் படித்தோர் தொகை 4 எனின் ஒரு பாடத்தை மட்டும் படித்தோர் எத்தனை பேர்?





(i) 39
(ii) 5
(iii) 3


* கீழே தரப்பட்ட கணிதச் செய்கையை அவதானித்து வினாக்குறி உள்ள இடத்தில் வரவேண்டிய விடையைக் கண்டு கீறிடுக.

15. 



(i) 18
(ii) 16
(iii) 14

16. 



(i) 04
(ii) 06
(iii) 08

17. 


(i) 23
(ii) 25
(iii) 28

18. 


(i) 8 (ii) 7 (iii) 20 (iv) 6

19. 


(i) 26 (ii) 34 (iii) 22 (iv) 33

## புதுக்குடியிருப்பு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

புதுக்குடியிருப்பு பிரதேச ஒருங்கினைப்பு குழுக் கூட்டம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அமைச்சர் றிசாட் பதியூதின் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது.

இக் கூட்டத்தில் நீர்ப்பாசனம், கல்வி, கால்நடை, விவசாயம், மின்சாரம், கூட்டுறவு, கடற்றொழில் , நன்னீர் மீன்பிடி .வீடமைப்பு, வீதி புனரமைப்பு போன்ற விடயங்கள் ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

. இது தொடர்பான அபிவிருத்திகளையும் குறைபாடுகளையும் சம்மந்தப்பட்ட திணைக்களத்தின் அதிகாரிகளிடம் கேட்டறிந்ததோடு ம்க்களின் கருத்துக்களும் அமைச்சரினால் கேட்கப்பட்டதுடன் அதற்கான முடிவுகளும் விரைவாக எடுக்கப்படும் என உறுதியளிக்கப் பட்டது

இப் பிரதேசத்தில் புதிய அபிவிருத்திகளாக தொழில் சாலைகள் அமைப்பது தொடர்பாக இக்கூட்டத்தில் தீர்மானிக் கப்பட்டுள்ளது.

. இதற்கு வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹுனேஸ்பாறுக், சிவசக்தி ஆனந்தன் வடமாகாணசபை உறுப்பினர்களும் பிரதேச சபை உறுப்பினர்களும் திணைக்கள அதிகாரிகளும் பொலிஸ் பொறுப்பதிகாரி இராணுவ அதிகாரிகள் ஆகியோ ரும் இதில் கலந்து கொண்டனர்.

## கிளிநொச்சி மாவட்டத்தில் நாளாந்தம்

## 3,71,850 லீற்றர் குடிநீர் விநியோகம்

### அரச அதிபர் தகவல்

(கிளிநொச்சி)

**கிளிநொச்சியில் தொடர்ச்சியாக நிலவிவரும் கடும் வறட்சி காரணமாக மக்கள் குடிநீரை பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில் கடந்த சில மாதங்களாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் பிரதேச செயலகங்கள் ஊடாகவும்,மற்றும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் மூலமும் பல கிராமங்களுக்கு நீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இருப்பினும் தொடர்ச்சியாக கிணறுகளில் நீர் மட்டம் வெகுவாக குறைந்து செல்வதனால் மக்களுக்கான குடிநீர் தேவையும் அதிகரித்து செல்கிறது.**

தற்போ்து கிளிநொச்சி மாவட்டத்தில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால், கிளிநொச்சி மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலகங்கள் ஊடாகவும் நாளாந்தம் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அத்தோடு பிரதேசபைகளுக்கு அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் எரிபொருள் வழங்கப் பட்டு சபைகள் மூலம் குடிநீர் விநியோகமும் மேற்கொள்ளப் படுவதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார், அதனடிப்படையில்

பளை பிரதேச செயலகம் மூலம

கோவில்வயல் 4000 லீற்றா், புலோப்பளை 8000 லீற்றர், புலோப்பளை மேற்கு 8000 லீற்றர், கச்சார்வெளி 8000 லீற்றர், அல்லிப்பளை 4000 லீற்றர் என்ற அடிப்படையிலும்,

பிரதேச சபை மூலம்

வேம்பொடுகேணி 4000 லீற்றர், கிளாலி 6000 லீற்றர், அரசர்கேணி 2000 லீற்றர், முகமாலை பாடசாலை 1000 லீற்றர், இத்தாவில் 3000 லீற்றர், இயக்கச்சி 6000 லீற்றர், பளை நகரம் (பாடசாலை) 2000 லீற்றர்.

கரைச்சி பிரதேச செயலகம் மூலம்

வன்னேரிக்குளம் 8000 லீற்றர், ஆணைவிழுந்தான் 8000 லீற்றர், கண்ணகைபுரம் 8000 லீற்றர், ஸ்கந்தபுரம் 8000 லீற்றர், அக்கராயன்குளம் 4000 லீற்றர், கோணவில் 16000 லீற்றர், அம்பாள்குளம் 16000 லீற்றர், அம்பாள்நாகர் 20000 லீற்றர், உருத்திரபுரம் வடக்கு 8000 லீற்றர், உருத்திரபுரம் மேற்கு 4000 லீற்றர், பெரியபரந்தன் 4000 லீற்றர், வட்டக்கச்சி 4000 லீற்றர், மாயவனூர் 16000 லீற்றர், மாவடியம்மன் 8000 லீற்றர், இராமநாதபுரம் 8000 லீற்றர்

பிரதேச சபை மூலம்

தொண்டமான்நகர் 3000 லீற்றர், தட்டவன்கொட்டி.4000 லீற்றர், ஆனையிறவு, உமையாள புரம் 2800 லீற்றர்.

கண்டாவளை பிரதேச செயலகம் மூலம்.

தர்மபரம் கிழக்கு 6000 லீற்றர், தர்மபுரம் மேற்கு 4500 லீற்றர், உழவனூர் 2000 லீற்றர், நாதன் திட்டம் 2000 லீற்றர், கண்ணநகர் 4000 லீற்றர், புன்னைநீராவி பாடசாலை 1000 லீற்றர், முசுறன்பிட்டி இந்தியன் வீட்டுத்திட்டம் 4500 லீற்றர், ஊரியான் 2500 லீற்றர், கண்டாவளை 10000 லீற்றர், கல்லாறு 13000 லீற்றர், கல்லாறு பாடசாலை 1500 லீற்றர், பிரமந்தனாறு பாடசாலை 1500 லீற்றர், பெரியகுளம் ஜயனார் வித்தியாலயம் 500 லீற்றர், கல்மடுநகர் 4500 லீற்றர்,பரந்தன் 4000 லீற்றர்.

பூநகரி பிரதேச செயலகம் மூலம்

பரமன்கிராய் பாடசாலை 400 லீற்றர்,பூநகரி மத்திய கல்லூரி 1000 லீற்றர்,ஞானமடம் பாடசாலை 400 லீற்றர்,கறுக்காய்த்தீவு மவி 750 லீற்றர் செல்லியாதீவு 500 லீற்றர், சுன்னாவில் பாடசாலை 400 லீற்றர் ,விக்கினேஸ்வரா வித்தியாலயம் 750 லீற்றர், செம்மன்குன்று பாடசாலை 400 லீற்றர் நல்லூர் ம.வி 750 லீற்றர் செல்லிபுரம் முன்பள்ளி 200 லீற்றர் ஞானிமடம் செட்டியகுறிச்சி 10,000 லீற்றர் பிரதேச சபை

கொள்ளக்குறிச்சி 1000 லீற்றர், மட்டுவில்நாடு கிழக்கு 3000 லீற்றர், பள்ளிக்குடா 7000 லீற்றர், மட்டுவில்நாடு மேற்கு 4000 லீற்றர், பரமன்கிராய் 3000 லீற்றர்,, நாச்சிக்குடா 2000 லீற்றர், பொன்னாவெளி 22000 லீற்றர், (வேரவில்,பாடசலை வைத்தியசாலை வலைப்பாடு பாடசாலை) இரனைமாதாநகர் 6000 லீற்றர், வாடியடி வைத்தியசாலை 4000 லீற்றர்.கரியாலைநாகபடுவான் 1000 லீற்றர்

இதேவேளை கிளிநொச்சியில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் கிளிநொச்சி நகர குடிநீர் திட்டத்திற்குள் உள்வாங்கப்பட்டுள்ள கிராமங்களில் 35 நீர்தாங்கிகள் வைக்கப்பட்டு 35000 லீற்றர் குடிநீர் நாளாந்தம் விநியோகிக்கப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் பாரதிபுரம் 5000 லீற்றர்,பொன்னகர் 9000 லீற்றர், மலையாளபுரம் 4000 லீற்றர், விவேகானந்தநகர் 1000 லீற்றர்,கிருஸ்ணபுரம் 2000 லீற்றர், உதயநகர் கிழக்கு 1000 லீற்றர்,ஆனந்தநகர் 2000 லீற்றர்,கனேசபுரம் 3000 லீற்றர்,காஞ்சிபுரம் 2000 லீற்றர்,கமரிக்குடா 1000 லீற்றரும் விநியோகிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மக்கள் குடியிருப்பு பகுதியில் விடுதி அமைக்க நடவடிக்கை

### தடுத்து நிறுத்தக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பிரதான வீதியில் புறாப்பொறுக்கிப் பகுதியில் மக்களின் குடியிருப்புகளுக்கு அண்மையில் விருந்தினர் விடுதி (மதுபானசாலையுடன் இணைந்த ஹோட்டல்) அமைக்கப் படுவதனை உடனடியாக தடுத்து நிறுத்துமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

புறாப்பொறுக்கிப் பகுதியில் மடத்துப்புலம் என்ற இடத்தில் கரவெட்டி பிரதேச செயலகம் மற்றும் கரவெட்டி பிரதேச சபையின், அனுமதியுடன் இந்த மதுபானசாலை அமைப்பதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக் கப்பட்டு வருகின்றது.


கரவெட்டி பிரதேச சபையில் அண்மையில் இடம்பெற்ற மாதாந்த கூட்டத் தொடரில் உடுப்பிட்டிப்பகுதியில் அமைந்துள்ள மதுபானசாலையை வேறு இடத்திற்கு மாற்றுமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்த மதுபான சாலையே இந்த இடத்திற்கு இடமாற்றம் செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது புதிதாக அமைக் கப்படும் மதுபானசாலையிலிருந்து 1 கிலோமீற்றர் தூரத்தில் வல்லைச் சந்தியில் மதுபானசாலை ஒன்று இயங்கி வருகின்றது அதனால் பல்வேறு அசௌகரியங்களை மக்கள் எதிர்நோக்கி வருவதுடன் அடிக்கடி விபத்துக்களும் இடம்பெற்று வருகின்றன.

எனவே மக்கள் குடியிருப்புக் களை அண்டிய போக்குவரத்து நெரிசல் மிகுந்த பிரதான வீதிக்கு அருகில் இந்த மதுபான சாலை அமைக்கும் முயற்சியைத்தடுத்து நிறுத்த சம்பந்தப்பட்டவர்கள் உரிய நட வடிக்கை எடுக்க வேண்டும் அத் துடன் இந்த நடவடிக்கையை தடுத்து நிறுத்தக் கோரி கரவெட்டி பிரதேச செயலர் கரவெட்டி பிரதேசசபை தவிசாளர் வட மாகாணசபை உறுப்பினர்கள் வடமாகாகாண சபை முதலமைச்சர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் உட்பட பலருக்கு மகஜர்கள் அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (18)

## இளைஞர் வெட்டிக்கொலை

## மற்றொருவரும் விளக்கமறியலில்



யாழ்., சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவில் வைத்து இளைஞர் ஒருவர் இம்மாதம் 5ஆம் திகதி இரவு வெட்டிக் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புபட்ட ஐந்தாவது சந்தேகநபரை எதிர்வரும் 22ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நீதிபதி ஸ்ரீநிதி நந்நசேகரம் நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.


மீசாலை கிழக்கினைச் சேர்ந்த 23 வயதுடைய மேற்படி ஐந்தாவது சந்தேகநபர், வட மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் ஊடாக கடந்த செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி பொலிஸாரிடம் சரணடைந்திருந்தார்.

இந்நிலையில், மேற்படி சந்தேக நபரை நேற்று முன் தினம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய வேளையிலேயே நீதவான் அவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

மேற்படி கொலைச் சம்பவத்துடன், தொடர்புபட்டவர்கள் என்ற சந்தேகத்தில் ஏற்கனவே மீசாலையினைச் சேர்ந்த நால்வர் விளக்கமறியலில் வைக்கப்பட் டுள்ளனர்.

## சாவகச்சேரி–விளைவேலி ஸ்ரீ துர்க்கா தேவியின்

### இரண்டாம் நாள் உற்சவம் இன்று



விளைவேலியிலே கோவில்
கொண்ட அம்மா தாயே!
நற்கருணை பொழிந்தெமது
துயர்களை துடைத்திடுவாயே
அன்பு கொண்ட தாயே
அவனியில் வாழ்ந்திட
எமக்கு வழிகாட்டிடுவாயே
கருணையுடன் எம் வாழ்விற்கு
ஒளி ஏற்றிடுவாயே

*இ. சுபீட்ஷா*
*விளைவேலி*



**ஜீவநதி சஞ்சிகையின் 7 ஆவது ஆண்டுமலர் வெளியீடும் வடமராட்சி படைப்பாளர்களின் நூல்கள் தமிழ்ச்சஞ்சிகைகள் கண்காட்சி அண்மையில் அல்வாயில் உள்ள கலை அகத்தில் நடைபெற்றது. ஜீவநதி ஆசிரியர் க.பரணிதரன், நூலை வெளியீட்டு வைப்பதையும் விருந்தினர்கள் கண்காட்சியைப் பார்வையிடுவதையும் காணலாம்.**

# மிகவும் மோசமடைந்து வருகிறது பலஸ்தீன - இஸ்ரேல் போர்



பலஸ்தீன இஸ்ரேல் போர் நிலைமைகள் மிகவும் மோசமடைந்து வருவதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இஸ்ரேலின் எல்லைப்புறக் காஸாப் பகுதிகளில் இஸ்ரேல் இராணுவத்தின் விமானப்படை, குண்டுகளையும், ஏவுகணைகளையும் சரமாரியாகப் பொழிந்த வண்ணமுள்ளது.

கமாஸின் ஏவுகணைத் தாக்குதல்கள், இஸ்ரேலின் ரெல் அவிவ் பகுதியைப் பதட்ட நிலையில் வைத்துள்ளது. ரெல்விவ் நகரில் அதியுச்ச ஏவுகணை எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. மூதன் முதலாக இஸ்ரேலில், கமாஸின் ஏவுகணைத் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. பலஸ்தீனப் பகுதியில் 200 பேர் கொல்லப் படடுள்ளதாகவும், அதில் பெரும்பாலானோர் பொதுமக்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்ஜாகு, கமாஸின் பலத்தைக் கடுமையாகக் குறைப்பதில் குறியாகவுள்ளார். தீவிரவாத இயக்கமான கமாஸ், தங்களோடு நெற்றன்ஜாகு ஒரு இணக்கப்பாட்டிற்கு வரவேண்டுமென இஸ்ரேல் வற்புறுத்தி வருகின்றது. பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் வரை ஏவுகணைத் தாக்குதல்களை நிறுத்தப் போவதில்லையென கமாஸ் இயக்கமும், ஏவுகணைத் தாக்குதல்கள் நிறுத்தப்படும் வரை வான் வழித் தாக்குதல்களைத் தொடரப் போவதாக இஸ்ரேலும், முரணடு பிடிப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இஸ்ரேல் பலஸ்தீனப் பிரச்சின்னயில் வழமையாக மத்தியஸ்தம் வகிப்பவர்கள் இப்பிரச்சினையில் செல்வாக்குச் செலுத்த முடியாத நிலையை அடைந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது. ஒருகாலத்தில் துருக்கி இரு பகுதியினர் மத்தியிலும் அரசியற் செல்வாக்கைப் பிரயோகித்து வந்தமையும், தற்போதைய துருக்கிப் பிரதமர் எர்டொகான் காலத்தில் அது சீரழிந்து விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பலஸ்தீன ஜனாதிபதி மக்முட் அபாஸ், கமாஸுடன் இணந்து அரசை நிறுவிய போதிலும், கமாஸின் இராணுவப் பிரிவில் எவ்வித செல்வாக்கும் செலுத்த முடியாத நிலை காணப் படுவதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அமெரிக்க வெளி விவகாரச் செயலர் ஜோன் கெரி விடுத்த பல கோரிக்கைகளை, இரு பகுதியினரும் அறிந்து கொள்ளவும் விரும்பவில்லையெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரபு ஒன்றியம் எடுத்த ஒரு சில முயற்சிகள் பயனளிக்காது போனதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜேர்மன் வெளிவிவகாரச் செயலர் மத்தியஸ்தம் வகிக்க விருப்பம் தெரிவிக்கவில்லை எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்நிலையிற் தொடரும் மத்திய கிழக்கு யுத்தம், பலஸ்தீனப் பிரஜைகளைக் குறிப்பாக காஹாப் பகுதி மக்களை அலைக்கழித்து வாழவிடாது செய்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# காஸா மீது தாக்குதல் பிரதமர் மோடி கவலை



பலஸ்தீனத்தின் காஸா பகுதி மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது. இந்நிலையில், "பிரிக்ஸ்" மாநாட்டில், பிரதமர் நரேந்திர மோடி இதுகுறித்து ஓர் அறிக்கை வெளியிட்டார்.

அதில் அவர் தெரிவித்திருப்பதாவது,

மேற்கு ஆசியாவில் ஸ்திரமற்ற தன்மை உருவாகி வருவது கவலை அளிக்கிறது.

பாதிக்கப்பட்ட நாடுகளை நாம் தொடர்ந்து வெறுமனே வேடிக்கை பார்ப்பது கடுமையான பின் விளைவுகளை உருவாக்கும்.

இந்த மோதல், உலக அமைதிக்கும், பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக அமையும். ஈராக்கில் நடந்து வரும் மோதலை முடிவுக்கு கொண்டு வர கூட்டாக என்ன செய்யலாம் என்று "பிரிக்ஸ்" நாடுகள் ஆராய வேண்டும்.

வளைகுடாநாடுகளில் வாழும் 70 இலட்சம் இந்தியர்களின் வாழ்க்கை பாதிக்கப்படுவதால், இந்தியா கவலை தெரிவித்துள்ளது.

# பிலிப்பைன்ஸில் ரம்மசன் புயல்காற்று நூற்றுக்கணக்கானோர் வெளி[illegible]



பிலிப்பைன்ஸின் கிழக்குப் பகுதியில் "ரம்மசன்" புயல் கடந்த செவ்வாய்க்கிழமை தாக்கியதில் 13 பேர் பலியாகினர். இதனால் தாழ்வான பகுதிகளில் வசித்து வந்த இலட்சக்கணக்கானோர் பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைந்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை கரையைக் கடந்த இந்தப் புயல் காரணமாக மணிக்கு 150 கி.மீ. வேகத்தில் பலத்த காற்று வீசியதுடன் கனமழையும் பெய்தது. இதனால் பல இடங்களில் மரங்கள் வேருடன் சாய்ந்து பல சேதங்களை ஏற்படுத்தியுள்ளன.

இதேபோல் நேற்றுமுன்தினம் புதன்கிழமையும் தொடர்ந்து மழை பெய்து கொணடிருந்தது. இதனால் 6 மாகாணங்களில் தாழ்வான பகுதிகளில் வசித்து வந்த சுமார் 3.7 இலட்சம் பேர் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி அரசு அலுவலகங்கள், பாடசாலைகளில் தங்கியுள்ளனர். இதனால் பாடசாலைகள், கல்வி நிறுவனங்களுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

புயலால் பாதிக்கப்பட்ட குடியிருப்புப் பகுதிகளில் 11 மாத குழந்தை உட்பட 13 பேர் பலியாகியுள்ளனர். அத்துடன் மூன்று மீனவர்களைக் காணவில்லை.

**கறையான்...**

இந்தச் சம்பவங்களின் போது தமிழர் கூட்டணித் தலைவர்கள் யாருமே அங்கு வந்து நிலைமையைக் கட்டுப்படுத்த எந்த முயற்சிகளும் எடுக்கவில்லை. மாறாக தமிழரசுக்கட்சியின் முன்னாள் யாழ்.மாநகரசபை முதல்வர் சி.நாகராசா பல்கலைக் கழகம் அமைந்திருந்த பரமேஸ்வரா சந்தியில் தனது அடியாட்களுக்கு கொட்டகை ஒன்று போட்டுக் கொடுத்து "தண்ணி வென்னி" எல்லாம் பரிமாறினார். இவையெல்லாம் மிதவாத தமிழ் தலைமை என்று சொல்பவர்களின் கைங்கரியங்கள். அதன் பின் புலிகளின் காலம் வந்தது. அவர்கள் யாழ்பல்கலைக்கழகத்தை தமது உத்தியோகபூர்வமற்ற காரியாலயமாகவே மாற்றி வைத்திருந்தனர். விஜிதரன் என்ற மாணவனைக் கடத்திச் சென்று "காணாமல்" ஆக்கினர். இன்றுவரை அவனை எங்கே எரித்தார்கள் அல்லது புதைத்தார்கள் என்றே தெரியாமல் இருக்கிறது. பூநகரியைச் சேர்ந்த விமலேஸ்வரன் என்ற மாணவன் நடுத்தெரு வில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டான். பின்னர் தில்லை நாதன், செல்வி, மனோகரன் போன்றவர்கள் கடத்திக் கொல்லப் பட்டனர். மருத்துவபீட உடற்கூற்றியல்துறை விரிவுரையாளர் கலாநிதி ராஜினி திராணகம நடுவீதியில் பட்டப்பகலில் சுட்டுக் கொல்லப் பட்டார். மனித உரிமைகளுக்கான யாழ்.பல் கலைக்கழக ஆசிரி யர் சங்க உறுப்பினர்கள் வேலையை விட்டுத் தப்பியோடி தென்னிலங்கையில் தலைமறைவு வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டி வந்தது.

கைலாசபதி அவர்கள் பல்கலைக்கழகத்தைக் கட்டியெழுப்புவதற்காக முற்போக்கு சிந்தனையும், மிகுந்த புலமைத்துவமும், தூரநேர்க்கும், அர்ப்பண சிந்தையும் கொண்ட மிகச் சிறந்த விரிவுரையாளர் குழாமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்குக் கொண்டு வந்தார்.

கா.இந்திரபாலா, கா.சிவத்தம்பி, எம்.ஏ.நு.மான், ப.சந்திரசேகரம், சித்திரலேகா மௌனகுரு, மு.நித்தியானந்தன், கே.குணரத்தினம், எஸ்.இராமகிருஸ்ணண், எஸ்.சிவஞானசுந்தரம் (நந்தி), வண.பிதா ஜெயசீலன், ஏ.ஜே.கனகரத்தினா, சோ.கிருஸ்ணராஜா, கே.சின்னத்தமபி, பார்வதி கந்தசாமி, நா.சுப்பிரமணியஐயர் என பலர் அவரது தலைமையின் கீழ் யாழ்ப்பாணப் பல்கலைக்கழ கத்தை உருவாக்கினர்.

பிற்போக்கு தமிழ் அரசியல் சக்திகள் காலம்காலமாக அழிவு வேலைகளைத்தான் செய்து வருகிறார்களேயொழிய, தமிழ் மக்களுக்காக ஒரு சிறு துரும்பைத்தன்னும் தூக்கிப் போட்டது கிடையாது. இந்த உண்மையை தமிழ் மக்களும் மாணவ சமூகமும் உணர வேண்டும். இந்தப் பல்கலைக்கழகத்தைக் கொண்டு வருவதற்கு நமது முன்னைய சந்ததியினர் எத்தகைய பெரும் முயற்சிகளைச் செய்தார்கள் என்பதை அறியாமல் சில ஈனர்கள் செய்யும் கைங்கரியத்தால் பல்கலைக்கழகத்தின் கல்விச் செயற்பாடுகள் சிதைந்து போவதை தமிழ் பேசும் மக்கள் ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது. கல்வியே எமது வாழ்வின், எமது மேன்மையின் ஜீவாதாரம் என்ற உண்மையை எல்லோரும் உயர்த்திப் பிடிப்பது இந்தச் சந்தர்ப்பத்தில் அவசியம்.

# போகோ ஹரம் தீவிரவாதக் குழுவின் கட்டளைத் தளபதி முகமட் சகாரி கைது

நைஜீரியா இராணுவம் போகோஹரம் தீவிரவாதக் குழுவின கட்டளைத் தளபதி முகமட் சகாரியைக் கைது செய்துள்ளது. மூன்று மாதங்களுக்கு முன் கடத்தப்பட்ட பாடசாலை மாணவிகள் பற்றிய தகவல்கள் எதனையும் திரட்ட முடியவில்லையென இராணுவம் தெரிவித்துள்ளது.

நைஜீரியாவில இடம்பெற்ற பல குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்கும் அப்பாவி மனிதரகள் பலரின் கொலைக்கும், சகாரி காரணமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொல்லப்பட்டவர்களில் அதிகமானவர்கள் பெண்களும், குழந்தைகளும் அடங்குவர் என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. விசாரணையின் போது சகாரியிடமிருந்து பல தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாமென நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரு நாட்களுக்கு முன்பு போகோஹரம் முஸ்லீம் தீவிரவாதிகள், "போறோ" நகரிற்கு அண்மித்த கிராமத்தைத் தாக்கியமை குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் 45 பொது மக்கள் கொல்லப்பட்டதோடு, பல வீடுகளும் கடைகளும் தீவைக்கப்பட்டுள்ளது. 2009 ஆம் ஆண்டுகளிலிருந்து போகோஹரம் நடாத்தி வரும் பயங்கரத் தாக்குதல் களில் 10,000 இற்கும் மேற் பட்ட மககள் பலஙிகளும் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடப்பட்டுள்ளது.




# இந்திய எல்லையில் அத்துமீறல் பாகிஸ்தான் மீண்டும் துப்பாக்கிச் சூடு

காஷ்மீர் மாநிலம் ஆர்.எஸ்.புரா பகுதியில் உள்ள இந்திய இராணுவ முகாம்கள் மீது பாகிஸ்தான் இராணுவம் நேற்று முன்தினம் அத்துமீறி துப்பாக்கிச் சூட்டை நடாத்தியது.

இதன்போது இந்தியாவும் திருப்பிச் சுட்டதால் இரு தரப்புக்கும் கடுமையான சண்டை ஏற்பட்டது. இதில் இந்திய தரப்பில் ஒரு வீரர் பலியானதுடன் 5 பேர் காயம் அடைந்தனர். இது இந்த மாதத்தில் பாகிஸ்தானின் 3 ஆவது அத்துமீறல் ஆகும்.

இதற்கிடையே ஆர்.எஸ்.புரா பகுதியில் பாகிஸ்தான் படைகள் மீண்டும் அத்துமீறி துப்பாக்கியால் சுட்டு தாக்குதல் நடத்தியது. இதில் சேதம் ஏற்பட்டதா? என்பது பற்றி தகவல் வெளியாகவில்லை.

# வடக்கு கல்வி முறைமை மீளாய்வு அறிக்கை வெளியீடு



வடக்கு கல்விமுறைமை மீளாய்வு அறிக்கை வெளியீடு நேற்று முற்பகல் யாழ்.வேம்படி உயர்தரப் பாடசாலையில் இடம்பெற்றது.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் ஒழுங்குபடுத்தலில் அமைச்சர் த.குருகுலராஜா தலைமையில், இந்த நிகழ்வில் முன்னதாக ஆடிப் பிறப்புப் பொங்கல் இடம்பெற்றது.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும் ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியும் இணைந்து பொங்கலை ஆரம்பித்துவைத்தனர்.

தொடர்ந்து அரங்க நிகழ்வில், கல்வி முறைமை மீளாய்வு அறிக்கையை வடக்கு முதல்வர் வெளியிட்டு வைக்க ஆளுநர் பெற்றுக்கொண்டார். அறிக்கை தொடர்பிலான விளக்க உரையை ஒலிம்பியன் முனைவர் எதிர் வீரசிங்கம் நிகழ்த்தினார்.

## மலேசிய விமானம்...

பரப்பில் பறந்து கொண்டிருந்த போது தான் என்றும் அந்த விமான சேவை நிறுவனம் தனது டுவிட்டரில் தெரிவித்திருக் கிறது.

உக்ரெய்னுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான எல்லைப்பகுதியில் கிழக்கு உக்ரெய்னில் இந்த விமானம் தரையில் எரிந்ததைக் கண்டதாக மொஸ்கோவில் இருக்கும் வான்வழி கண்காணிப்பு அதிகாரிகள் தெரிவித்ததாக ரொய்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்திருக்கிறது. அந்த குறிப்பிட்ட விமானம் ரஷ்ய வான் பரப்பிற்குள் நுழையவில்லை என்றும் அந்த அதிகாரி தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது.

அதேவேளை, இந்த விமானம் சுமார் 33 ஆயிரம் அடி உயரத்தில் ஏவுகணை மூலம் தாக்குதலுக்கு உள்ளானதாக உக்ரெய்னின் உள்துறை அமைச்சரின் ஆலோசகர் ஆண்டன் ஷெரஹெங்கோ தெரிவித்ததாக அசோசியேட்டர் செய்தி நிறுவனம் கூறியிருக்கிறது.

[illegible]க்கு உக்ரெய்னில், உக்ரெய்ன் இராணுவ விமானங்கள் பல ஏவுகணைதாக்குதலில் சுட்டு வீழ்த்தப்பட்டிருக்கின்றன. இந்தப் பிராந்தியத்தில் தான் ரஷ்ய ஆதரவு கிளர்ச்சிக்காரர்கள் உக்ரெய்னிய அரசை எதிர்த்து சண்டையிட்டு வருகிறார்கள்.

இந்த விபத்து குறித்து தமக்கு தெரியவந்திருப்பதாக கூறும் பிரிட்டனின் வெளியுறவு அமைச்சகம், என்ன நடந்தது என்பது குறித்து விசாரித்து வருவதாகவும் தெரிவித்திருக்கிறது.

முன்னதாக உக்ரெயின் அரசு ரஷ்யா தனது போர் விமானங்களில் ஒன்றை, அது உக்ரெயின் நிலப்பரப்பில் பறந்து கொண்டிருந்த போது, சுட்டு வீழ்த்தி விட்டதாகக் குற்றம் சாட்டியிருந் தது.

இந்த எஸ்.யு. 25 ரக விமானம் புதனன்று ரஷ்ய ஏவுகணை ஒன்றால் தாக்கப்பட்டதாகவும், ஆனால் விமானி வெளியே குதித்து விட்டார் என்றும், அவர் காயமின்றி மீட்கப்பட்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை 10 ஆயிரம் அடி உயரத்தில் பறக்கும் ஒரு விமானத்தை சுட்டு வீழ்த்தவேண்டுமானால் அது தொலைதூரம் பறக்கவல்ல நிலத்தில் இருந்து வான்வெளிக்கு ஏவக்கூடிய நீண்ட தூரம் சென்று தாக்கவல்ல ஏவுகணையால் மட்டுமே அது சாத்தியம் என்றும், அதுவும் கூட ராடர் உதவியுடன் வழிநடத்தப்பட்டிருக்க வேண்டும் என்றும் பாதுகாப்புத்துறை நிபுணர் ஒருவர் பி.பி.சி.யிடம் தெவித்தார்.

இந்த விமானமானது மனிதர்கள் எளிதில் எடுத்துச் செல்லக்கூடிய மேன்பேட் என்கிற ஏவுகணைத்தாக்குதல் மூலம் சுட்டு வீழ்த்தப்பட்டிருக்காது என்று கருதப்படுகிறது. ஏனென்றால் அத்தகைய [illegible] தூர [illegible] வுகணையின் வீச்சு அவ்வளவு தூரம் செல்லாது [illegible]படுகிறது.

## ஊவா தேர்தல்...

செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

எதிர்வரும் 30 ஆம் திகதி முதல் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் கோரப்படவுள்ளதுடன் அந்த நடவடிக்கை ஆகஸ்ட் மாதம் ஆறாம் திகதியுடன் நிறைவடையவுள்ளதாக அவர் கூறினார்.

அன்றைய தினம் தேர்தல்கள் நடத்தப்படவுள்ள தினம் குறித்து மாவட்ட செயலாளர்களுக்கு தெளிவுபடுத்தப்படும் என தேர் தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஊவா மாகாண சபை தேர்தலில் அஞ்சல் மூலம் வாக்களிக்க எதிர்பார்த்திருக்கும் அரச சேவையாளர்கள் அதற்காக இன்று முதல் விண்ணப்பிக்க முடியும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனநாயக கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா மொனராகலை மாவட்ட ஆசனத் தொகை அதிகரிக்கப்பட்டமையானது யால வனவிலங்கு சரணாலயத்தில் உள்ள மிருகங்களுக் காகவா என கேள்வி எழுப்பியுள்ளார்.

எவ்வாறாயினும், இந்தச் செய்தியாளர் சந்திப்பில் உரை யாற்றிய தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய எவரதும் அழுத்தங்களுக்கு அமைய இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்படவில்லை எனக் குறிப்பிட்டார்.

## காரைநகர்...

பட வேண்டும் என்றும் பாதிக்கப்பட்டவருக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்றும் அமைச்சர் கடற்படைத் தளபதியிடம் எடுத்து விளக்கியுள்ளார் மேலும் காரைநகர் கடற்படை அதிகாரிகளுடனும் தொடர்பு கொண்டு இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்றும் அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

## காணாமற்...

எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

டெஸ்மன் டீ சில்வா இலங்கை, அங்கோலா ஆகிய நாடுகளின் வழித்தோன்றலான பிரிட்டனின் பிரபல சட்டத்தரணி. ஸியாரா லியோன் நாட்டின் மீதான ஐ.நா. யுத்தக்குற்ற விசாரணையின் போது இவர் பிரதான வழக்குத்தொடுநராகச் செயற்பட்டவர். அத்துடன் இவரது மகன் பிரான்ஸ், சுவிற்ஸர்லாந்து நாடுகளுக்கான இலங்கைத் தூதுவராகச் செயற்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஜெ..ப்றி நைஸ் லண்டனைச் சேர்ந்த இவர் முன்னாள் நீதிபதி. யூகோஸ்லாவிய முன்னாள் ஜனாதிபதிக்கு எதிரான யுத்தக் குற்ற விசாரணையின்போது பிரதான வழக்குத்தொடுநராகச் செயற்பட்டுள்ளார்.

பேராசிரியர் டேவிட் கிரேன் அமெரிக்காவைச் சேர்ந்த சிரேஷ்ட சட்டத்தரணியான இவர் ஸியாராலியோன் நாட்டின் மீதான ஐ.நா. யுத்தக்குற்ற விசாரணையின்போது பிரதான வழக்குத்தொடுநராகச் செயற்பட்டவர்.

## கிளிநொச்சியில்....

நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமெனவும் அனர்த்த முகாமைத்துவப் பிரிவினர் தெரிவித்தனர். கிளிநொச்சி மாவட்டத்தில் 10 ஆயிரத்து 260 குடும்பங்களுக்கு வீடுகள் தேவையென கிளிநொச்சி மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்திருந்தார். இவர்களில் 8 ஆயிரம் வரையிலான குடும்பங்கள் தற்காலிக வீடுகளிலே வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதனால், தொடர்ந்து காற்று வீசினால் சேதமடையும் வீடுகளில் எண்ணிக்கையை அதிகரிக்கலாம் என அனர்த்த முகாமைத்துவப் பிரிவினர் தெரிவித்தனர்.

# தடம்புரண்டது தவிசாளரின் வாகனம்

### தவிசாளர் உட்படப் பலர் காயம்

கிளிநொச்சி ஏ-9 வீதியில் பயணித்துக் கொண்டிருந்த போது கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் வை.குகராசா பயணம் செய்த வாகனம் விபத்துக்குள்ளாகியதில் படுகாயமடைந்த அவர் கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று மாலை கிளிநொச்சி இலங்கை வங்கிக்கு அருகில் ஏ-9 வீதியில் முன்னால் சென்ற வாகனத்தை முந்திச்செல்ல முற்படுகையில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. இதன்போது வாகனம் தலைகீழாக தடம் புரண்டு விபத்துக்குள்ளாகியது.

பிரதேச சபையில் பணியாற்றுகின்ற பணியாளர் ஒருவரின் மகளின் பிறந்தநாள் நிகழ்வுக்கு தர்மபுரம் சென்று கிளிநொச்சிக்குத் திரும்பிக்கொண்டிருந்த போதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே குறித்த வாகனம் சில மாதங்களுக்கு முன் விபத்துக்குள்ளாகி பல இலட்சம் ரூபா செலவு செய்யப்பட்டு சில மாதங்களுக்குள்ளேயே இரண்டாவது தடவையாக விபத்துக்குள்ளாகி பலத்து சேதமடைந்துள்ளது.

இதேவேளை, குறித்த வாகனத்தைச் செலுத்திய சாரதிக்கு சாரதி அனுமதிப் பத்திரம் இல்லையெனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (29)

# நீதிமன்றத்துக்கு புதிய கட்டடம் அடிக்கல் நாட்டினார் பிரதம நீதியரசர்

(வவுனியா)

வவுனியா மாவட்ட நீதிமன்றத்துக்கு புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளது. இதற் கான அடிக்கல் நாட்டு விழா நேற்று இடம்பெற்றது.

மக்கள் நீதித்துறை மேல் நம்பிக்கை கொண்டுள்ளார்கள். அதனைத் தொடர்ந்து கட்டியெழுப்ப வேண்டும் என இலங்கையின் பிரதம நீதியரசர் மொஹான பீரிஸ் தெரிவித்துள்ளார். வவுனியா மாவட்ட நீதிமன்ற கட்டடத்துக்கான அடிக்கல் நடும் விழா நேற்று வவுனியா நீதிமன்ற வளாகத்தில் இடம் பெற்றது. இந்த நிகழ்வில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். முன்னதாக அடிக்கல் நடும் நிகழ்வு இடம்பெற்றது. பிரதம நீதியரசர் அடிக்கல்லை நட்டு வைத்தார். அதனைத் தொடர்ந்து அவர் உரையாற்றினார். அவர் தனது உரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு, யுத்தம் முடிவடைந்த பின்னர் இன்று இலங்கையில் துரிதமாக அபிவிருத்திப்பணிகள் இடம்பெறுகின்றன. கட்டடங்கள், வீதிகள் என வளர்ச்சியை அவதானிக்க முடிகிறது. ஆனால் இவ்வாறான அபிவிருத்தி மூலம் நாம் நீதித்துறையை கட்டியெழுப்ப முடியாது.

நீதித்துறைமீது மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்துவதன் மூலமே அது சாத்தியமாகும். இலங்கை மக்கள் நீதித்துறை மேல் நம்பிக்கை கொண்டவர்களாக உள்ளனர். அதனைத தொடர்ந்து கட்டியெழுப்ப வேண்டும். அதுவே நீதித்துறையின் அபிவிருத்தி ஆகும். இலங்கையின் உயர்நீதிமன்ற செயற்பாடுகளில் சில மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. அவை தொடர்ந்து கொண்டு வரப்படும். இதன் மூலம் வழக்கு விசாரணைகளைத் துரிதப்படுத்தவும், அது தொடர்பான தகவல்களை இலகுவாகப் பேணவும் முடியும். எனவே, நாம் ஒன்றிணைந்து நீதித்துறையை வலுப்படுத்த வேண்டும் என்றார்.

# சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலிப் பகுதியில் தூக்குமாட்டி இறந்ததாகத் தெரிவிக்கப்படும் இளைஞர் ஒருவரது சடலம் நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் கோப்பாய் பொலிஸாரினால் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பனிச்சை ஒழுங்கை, திருநெல்வேலியைச் சேர்ந்த சிவபாதசுந்தரம் தருமராசா (வயது-26) என்ற இளைஞரே இவ்வாறு தூக்கு மாட்டி உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சொத்துப் பிரச்சினை காரணமாகவே இவர் தூக்கு மாட்டி இறந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

திடீர் மரண விசாரணை அதிகாரி மற்றும் சட்ட வைத்திய அதிகாரியின் விசாரணையை அடுத்து சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)

## வடகடல்...

தொழிற்கூடங்களுக்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் தொழிற்துறை நடவடிக்கைகள் தொடர்பில் நேரில் ஆராய்ந்தார். அத்துடன் மூலப்பொருள், உற்பத்தி, சந்தைப்படுத்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக துறைசார்ந்தோரிடம் அமைச்சர் கேட்டறிந்து கொண்டார்.

இதனிடையே, தொழிற்சாலை மற்றும் தொழிற்சாலை வளாகத்தின் சுத்தம், சுகாதாரத்தைப் பேணும் வகையில் முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அமைச்சர் வலியுறுத் தியதுடன், மின்சாரத்தை வீண் விரயம் செய்யாது, உரிய முறையில் பயன்படுத்துமாறு துறைசார்ந்தோருக்கு அமைச்சர் பணிப்புரையும் விடுத்தார்.

அத்துடன், தொழிற்சாலையின் தொழிற்துறை நடவடிக் கைகளை மேலும் மேம்படுத்தும் பொருட்டு எதிர்காலங்களில் முன்னெடுக்கப்பட வேண்டிய திட்டங்கள் தொடர்பில் தமக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறும் அமைச்சர் கேட்டுக் கொண்டார். தொழிற்சாலை வளாகத்திலுள்ள வாகனத் தரிப்பிடத்தை மீளப்புனரமைக்கும் வகையில் அமைச்சர் ஒரு தொகை நிதியினை வழங்கி வைத்தார்.

இதேவேளை, தொழிற்சாலையின் தேவைகள், ஏனைய விடயங்கள் தொடர்பிலும் இதன் போது கவனம் செலுத்தப்பட்டது.

இதன்போது, தொழிற்சாலை பதில் முகாமையாளர் பொன்சேகா, தொழிற்சங்கத்தின் தலைவர் அனில் ஆகியோர் உடனிருந்தனர்.

## இந்திய...

வருகின்றனர்.

மேற்படி தமிழகம் இராமேஸ்வரம் பகுதியிலிருந்து ஒரு படகில் வந்த மேற்படி 4 மீனவர்களையும் கடந்த 10ஆம் திகதி இரவு கடற்படையினர் கைது செய்து, யாழ். கடற்றொழில் நீரியல் வளத்துறையினரிடம் ஒப்படைத்தனர்.

தொடர்ந்து, இவர்களை ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்திய வேளையில், ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் இ. சபேசன் விளக்கமறியலில் வைத்து உத்தரவிட்டிருந்தார்.

இந்நிலையில் மேற்படி மீனவர்கள் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளனர்.

# வடக்கில் மடுவுக்கு மட்டுமே பாப்பரசர் விஜயம் செய்வார்

(யாழ்ப்பாணம்)

அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்தில் கொழும்பு வரும் புனித பாப்பரசர் மடுத்திருத்தலம் வரை செல்லவும், அங்கு திருப்பலிப் பூசைகளில் ஈடுபடவும் திட்டமிட்டுள்ளார் என அறியவருகின்றது.



புனித பாப்பரசரின் இலங்கை விஜயம் தொடர்பான ஏற்பாடுகளைக் கவனிக்கும் இலங்கைக்கான வத்திக்கான் பிரதிநிதி பேராயர் பியூரி நக்யுஎன் வான் டாட் கடந்த 13 ஆம் திகதி யாழ்ப்பாணம் வந்திருந்தார்.

அப்போது தமிழ் சிவில் சமூக அமைப்பினர் அவரைச் சந்தித்துப் பேசினர். யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் தமிழர்கள் பேரழிவைச் சந்தித்த முள்ளிவாய்க்காலுக்கு அல்லது குறைந்தபட்சம் மடுத்திருத்தலத்துக்காவது பாப்பரசர் வருகைதந்து யுத்தத்தில் மாண்டவர்களுக்காக திருப்பலிப் பூசை ஒன்றை நடத்தவேண்டும் என அப்போது கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அந்தக் கோரிக்கையை அடுத்தே பாப்பரசரின் இலங்கை வருகை தொடர்பான ஏற்பாடுகளைக் கவனிக்கும் உயர்மட்டக் குழுவினர் இலங்கை அரச தலைமையுடன் தொடர்பு கொண்டு, பாப்பரசர் முள்ளிவாய்க்காலுக்கு விஜயம் செய்வது தொடர்பான யோசனையை முன்வைத்தனர் என்று கூறப்படுகிறது.

வடக்கு, கிழக்கில் பிரசித்தி பெற்ற மடுத்திருத்தலம் வரை சென்று அங்கு பூசை வழிபாடுகளை அவர் நடத்துவதற்கு அனுமதிக்கமுடியும் எனப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# "இந்துக்களின் குரல்" மாத இதழ் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

"இந்துக்களின் குரல்" இந்து தேசிய மாத இதழ் வெளியீடு நாளை பி.ப. 3.00 மணிக்கு யாழ். இணுவில் மத்திய கல்லூரியின் ஆரம்பப் பிரிவு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் க.தேவராஜா தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவுக்கு ஓய்வுநிலை பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளதுடன், சஞ்சிகையின் மதிப்பீட்டுரையையும் மேற்கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக யாழ். இந்துசமயப் பேரவையின் கௌரவ செயலாளர் சி.சக்திகிரீவன் கலந்துகொள்ளவுள்ளதுடன், சஞ்சிகையினை வெளியிட்டு வைத்து வெளியீட்டுரையினையும் நிகழ்த்தவுள்ளார். ஏற்புரையினை இதழாசிரியர்களில் ஒருவரான இ.துஷ்யந்தன் வழங்கவுள்ளார்.

கௌரவ விருந்தினராக தினக்குரல் பத்திரிகை ஆசிரியர் வி. அற்புதானந்தன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். விழாவில் ஆசியுரையினை மருதனார்மடம் ஸ்ரீசுந்தரேச ஆஞ்சநேயர் ஆலய தர்மகர்த்தா சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக் குருக்கள் வழங்கவுள்ளார். வாழ்த்துரையினை இணுவில் மத்திய கல்லூரி அதிபர் இ.துரைசிங்கம் வழங்கவுள்ளார்.

முதற்பிரதியை தொழிலதிபரும், கொடை வள்ளலும் சைவ சமய பற்றாளருமான சு.நடராசா பெறவுள்ளார். சிறப்புப் பிரதிகளை அதிபர்களும் ஆசிரியர்களும் ஆசிரிய ஆலோசகர்களும் பெறவுள்ளனர்.

நன்றியுரையினை ஆசிரியர் சோ.பிரசன்னக் குருக்கள் வழங்கவுள்ளார். அன்பர்கள், ஆர்வலர்கள், இந்துப் பெருமக்கள் அனைவரையும் விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு அழைக்கப்பட்டுள்ளனர். (6)

# அம்பாறையிலும் இறப்பர் செய்கை



அம்பாறை மாவட்டத்தில் புதிதாக ஆயிரம் ஏக்கர் நிலப் பரப்பில் இறப்பர் செய்கையை மேற்கொள்ள இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்தில் 2019 ஆம் ஆண்டளவில் 10 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் இறப்பர் செய்கையை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளதாக இறப்பர் அபிவிருத்தித் திணைக்கள திட்டமிடல் பணிப்பாளர் ரோஹன ஹப்புகஸ்வத்த தெரிவித்தார்.

இறப்பர் செய்கையாளர்களுக்கு ஒரு ஹெக்டயருக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வீதம் மானிய உதவியும் வழங்கப்படும். இது தொடர்பான விண்ணப்பங்களை மொனராகலையிலுள்ள பிராந்திய இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்துக்கு அனுப்ப வேண்டும் என பணிப்பாளர் ரோஹன ஹப்புகஸ்வத்த மேலும் தெரிவித்தார்.

# சுகாதார ஊழியர்கள் பகிஷ்கரிப்பு நோயாளர்கள் பலர் அவதி

(கொழும்பு)

நிறைவுகாண் சேவைகளுடன் தொடர்புடைய சுகாதார ஊழியர்கள் ஆரம்பித்துள்ள பணிப் பகிஷ்கரிப்பினால் மத்திய, தென் மற்றும் மேல் மாகாணத்திலுள்ள பல வைத்தியசாலைகளின் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பணிப் பகிஷ்கரிப்பினால் வைத்தியசாலைக்கு செல்கின்ற நோயாளர்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும் நிறைவுகாண் சுகாதார ஊழியர்கள் இன்று பணிக்கு சமுகமளிக்கவில்லை.

இதனால் நோயாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியத்தை குறைக்கும் வகையில் வெளிநோயாளர் மற்றும் சிகிச்சை பிரிவுகள் ஊடாக வழங்க வேண்டிய மருந்து வகைகளை ஒசுசல ஊடாக விநியோகிப்பதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளதாக தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் டொக்டர் அனில் ஜாசிங்க கூறினார்.

இதேவேளை, கண்டி வைத்தியசாலையின் நடவடிக்கைகளும் நேற்று பாதிக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும் நோயாளர்களுக்குத் தேவையான சிகிச்சைகளைத் தடையின்றி முன்னெடுப்பதற்கு இயன்றளவு நடவடிக்கை எடுத்துள்ளதாக கண்டி வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் ஆர்.எம்.எஸ்.கே.ரத்நாயக்க கூறியுள்ளார்.

## சபுகஸ்கந்தையில் பதற்றம்

சபுகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திற்கு முன்னால் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன நேற்று மாலை தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் குழுவொன்று குறித்த பகுதிக்கு விஜயம் செய்த போது, அங்குள்ள ஊழியர்களால் அவர்கள் தடுக்கப்பட்டதை அடுத்தே அங்கு பதற்ற நிலை ஏற்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

# புதிய கட்டடத் திறப்பு விழா

உள்ளூராட்சி மேம்படுத்தல் திட்டத்தின் கீழ் முன்மொழியப்பட்ட சாவகச்சேரி நகரசபைக்கான புதிய தலைமை அலுவலக கட்டடம் நாளை திறந்து வைக்கப்படவுள்ளது.

மேற்படி புதிய பொன்விழா மண்டபத் திறப்புவிழா நகரபதி இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் இடம்பெறும்.

பிரதம அதிதியாக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா ஆகியோர் இணைந்து காலை 9.00 மணிக்கு திறந்து வைக்கவுள்ளனர்.

வடமாகாண அரச திணைக்களத் தலைவர்களுக்கு சபையின் செயலாளர், தவிசாளர் இணைந்து அழைப்பிதழ் அனுப்பிவைத்துள்ளனர். (92)

# கண்டாவளையில் காணிப் பிணக்குகள் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பிரஸ்தாபம்

கிளிநொச்சி, கண்டாவளைப் பிரதேச செயலக பிரிவினுள் 1000 இற்கும் மேற்பட்ட காணிப் பிணக்குகள் இருப்பதாக பிரதேச செயலர் ரி.முகுந்தன் நேற்று தெரிவித்தார்.

கண்டாவளைப் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம், கண்டாவளைப் பிரதேச செயலகத்தில் மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவர் முருகேசு சந்திரகுமார் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

கண்டாவளைப் பிரதேசத்தில் பெரும்பாலான காணிகள் மத்திய வகுப்புத் திட்டத்திலே பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அந்த வகையில், வழங்கப்பட்ட காணிகள் தொடர்பிலான பிணக்குகள் 1000 இற்கும் மேற்பட்டவை தீர்க்கப்படாமல் இருக்கின்றன.

அத்துடன், கண்டாவளைப் பிரதேச செயலகத்தில் 950 குடும்பங்களுக்கு காணிகள் தேவையாகவுள்ளன. ஆனால், பிரதேச செயலக பிரிவில் அரச காணிகளாக உமையாள்புரம், கொழுந்தில் புலவு ஆகிய பகுதிகளில் தலா 50 ஏக்கர் காணிகள் வீதம் 100 ஏக்கர் காணிகள் இருக்கின்றன.

இந்தக் காணிகளை வைத்து காணியில்லாதவர்களுக்கு காணிகள் வழங்க முடியாது. ஆகவே கண்டாவளையினைச் சேர்த்து, வெளிநாடுகளில் வசிப்பவர்கள் வறுமைக்கோட்டின் கீழுள்ள காணியில்லாத குடும்பங்களுக்கு காணிகளை வழங்குவதற்கு முன்வரவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# பழைய தபாற்கந்தோர் வீதி புனரமைப்பு பணிகள் துரிதம்




(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியையும் மின்சார நிலைய வீதியையும் இணைக்கும் பழைய தபாற்கந்தோர் வீதி புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட வீதி புனரமைப்புப் பணிகளின் ஒரு கட்டமாக மேற்படி வீதி புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வேண்டுகோளுக்கிணங்க பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் இந்தப் பணி இடம்பெற்று வருகின்றது. யாழ். மாநகர சபையின் முன்னாள் உதவி மேயர் றீகனின் மேற்பார்வையில் இப்புனரமைப்புப் பணிகள் இடம்பெறுகின்றன.

நீண்டகாலமாக புனரமைக்கப்படாது போக்குவரத்துக்கு உதவாத நிலையில் காணப்பட்ட இந்த வீதி தற்போது துரித கதியில் புனரமைக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்டத்துக்கான இரண்டாம் அரையாண்டு மாவட்ட விலை நிர்ணயக் குழுக் கூட்டம் இன்று காலை 10.00 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம்பெறும்.

மேலதிக அரசாங்க அதிபர் செ.ஸ்ரீனிவாசன் தலைமையில் விலைகளைத் தீர்மானிப்பதற்கான கலந்துரையாடல் இடம்பெறும். அழைப்பிதழ் அனுப்பப்பட்ட சகல திணைக்கள தலைவர்களையும் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (92)




வருகின்ற வருமானம் போதாதா?

20,000/= - 38,000/= க்கும் மேற்பட்ட சம்பளத்துக்கு நிரந்தரமான தொழிற்சாலைகளான ஜேம், பிஸ்கட், சொக்லேட், ஐஸ்கிறீம், கிளவுஸ், சீமெந்து, சீட், டயர் ஆகிய நூர் உற்பத்திக்கு பொருட்கள் பெக்கிங் பழுதுபார்த்தல், ஸ்டோர்ஸ் ஆகிய பிரிவுக்கு 18 - 55 வயதான ஆண், பெண் தேவை. சாப்பாடு, பாதுகாப்பான தங்குமிட வசதி உண்டு. சிங்களம் கட்டாயம் இல்லை. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா முன்னுரிமை. தம்பதிகள், நண்பர்கள் ஒரே இடத்தில் குழுக்களாக வருகின்ற தினமே சேர்த்துக்கொள்ளப்படுவர். (0775964299)


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 யூலை 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.